www.tamilarangam.net

இதழ் -118
மார்ச்.20-ஏப்ரல்.02.1997
விலை ரூபா.10.00

සරිනිහර්
SARINIHAR


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**துலங்கா மர்மம்!**

வன்னியிலே பெண்கள்: வாவிபுகழ் கீழைத்
தொன்மையிலோ ஆண்கள் தொலைவர் – அன்னவரைத்
தொலைத்தாரைத் தேடுகிறார்: துலங்கிடுமோ மர்மம்?
விளக்கெடுக்க வேணுமோ விளக்கு!

–ஈழமோகம்




மட்டு நகர்:
## மர்மக் கொலைகள்!

வவுனியா:
## துலங்கா மர்மம்!

தேர்தல்:
## அரங்கேறும் வன்முறை!

OTO: M.K.M. SHAKEEB.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சரிநிகர்

இரு வாரங்களுக்கொருமுறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'
-பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை-ரூபா.300
வெளிநாடு-U.S.S.50
(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு-05

தொலைபேசி-593615, 584380
தொலைமடல்-594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.


## அமைச்சரின் பேச்சும் USAவின் முறையீடும்!

"ஜனநாயகம், உலக சமாதானம், சுதந்திரம் ஆகியன முக்கியமான விடயங்களாகுமென உயர்வாகப் பேசும் சில அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட சில சந்தர்ப்பங்களில் உலக சமாதானத்துக்கும், ஜனநாயகத்துக்கும் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன." இவ்வாறு விவசாய, காணி, வன வள அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளருமான தி.மு.ஜயரத்ன அண்மையில் கண்டியிலுள்ள பாடசாலையொன்றில் நடைபெற்ற கூட்டமொன்றில் கடந்த சில தினங்களுக்கு முன் அமெரிக்கா தொடர்பாகக் குறிப்பிட்டுப் பேசியிருந்தார். இப் பேச்சுத் தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவிடம் முறையிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ் விடயம் தொடர்பாக அரசின் உயர் மட்டத்திலுள்ள சிலர் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் மார்ச் 13ம் திகதி விசேட பேச்சுவார்த்தையொன்றை நடாத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சரின் அப் பேச்சினால் அமெரிக்காவின் பெயருக்கு ஏற்பட்ட குந்தகம் தொடர்பாக விசாரிக்கும்படி இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

லங்காதீப-1997.03.16

## கூட்டணி~மு.கா உடன்பாடு

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இரு பிரதான நகரங்களும் உள்ளடங்கும் விதத்தில் "வட-கிழக்கு" எனவும், பொத்துவில், கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய மூன்று பிரதான நகரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் "தென்-கிழக்கு" எனவும் புதிய மாகாணங்கள் இரண்டின் எல்லைகளை நிர்ணயம் செய்ய வேண்டுமென கோரும் ஒருங்கிணைந்த தீர்வுத் திட்டமொன்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளூடாக ஐக்கிய தேசியக் கட்சியிடம் முன்வைக்கப் பட்டுள்ளது. இவ்வாறு ஐ.தே.கவிடம் முன் வைக்கப்பட முன் அது தொடர்பாக நீதிமன்ற. அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிசுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளதென்றும் அதற்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கப்படவில்லை யெனவும் அறியக்கிடைக்கிறது.

வட கிழக்கைத் தனியான மாகாணமாகக் கருதவும். அம்பாறை தேர்தல் தொகுதியைக் கிழக்கு மாகாணத்திலிருந்து முழுமையாகவே வேறாக்கி ஊவா மாகாணத்துடனோ அல்லது மொனராகலை மாவட்டத்துடனோ இணைக்கவும் அதில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேசதென்-கிழக்கு மாகாணத்தில் பல் இன. இன விகிதாசாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் முஸ்லிம். தமிழ். சிங்கள இன விகிதாசாரப்படி நூற்றுக்கு 57. 26. 15 என்ற முறையில் விடயங்களை வைத்திருக்கவும் அத் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இரண்டும் மேலும் விதந்துரைத்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவிடம் அவ்விரு கட்சிகளும் ஒன்றிணைந்து முன்வைத்த இந்த யோசனைகளிற்கு இணங்க திருக்கோணமலை. மட்டக்களப்பு ஆகிய பிரதான நகரங்கள் இரண்டும் உள்ளடங்கும் விதத்தில் வட-கிழக்கு எனத் தனியான மாகாணமொன்று நிர்ணயிக்கப்படவுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும். தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒன்றிணைந்து முன்வைத்துள்ள இவ் யோசனையை ரணில்விக்கிரமசிங்கவினதும் ஐ.தே.க.வின் நிறைவேற்றுக் குழுவினதும் கவனத்துக்குக் கொண்டுவர ஐ.தே.கவின் நான்கு பேர் கொண்ட குழு செயற்பட்டு வருகிறது.

வட-கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு ஐ.தே.க கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதால் இப் புதிய யோசனைகள் மீது எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட கவனம் ஈர்க்கப்படுமெனத் தாம் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஸ்ட பாராளுமன்ற உறுப்பினரொருவர் பதிலளித்துக் கூறுகையில் தெரிவித்தார்.

லங்காதீப-1997.03.09

## தண்ணீர், தொலைபேசி கட்டண உயர்வு!

தண்ணீர், தொலைத்தொடர்புகள் மற்றும் ஏனைய சேவைக் கட்டணங்கள் மிக விரைவிலேயே அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

தண்ணீர் கட்டணத்தை அதிகரிப்பது என அரசாங்கம் 1996 ஒக்டோபரிலேயே தீர்மானித்திருந்தது. இவ் அதிகரிப்பு தொடர்பாக புறம்பான வர்த்தமானி அறிவித்தல் பெப்ரவரி 10ம் திகதி தயாரிக்கப்பட்டாலும் இப்புதிய கட்டண உயர்வுத் தீர்மானம் செயற்படுத்தப்படுவது தாமதிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.புதிய தொலைத் தொடர்புக் கட்டணங்களும் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 01ம் திகதி அறிவிக்கப் படவிருந்தது. ஆனால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீரவின் ஆலோசனையின் மீது 26.02.1997 திகதியிடப்பட்ட புறம்பான வர்த்தமானி அறிவித்தலொன்றில் அப் புதிய கட்டண அமுலாக்கல் ஏப்ரல் 30இற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின்படி புதிய கட்டணங்கள் ஜனவரி மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வந்திருக்க வேண்டும். எனினும் புதிய கட்டணம் ஏப்ரல் 1ம் திகதி முதல் அமுலுக்கு வரலாமெனவும் உலக வங்கியின் அழுத்தம் காரணமாகவே பிரதானமாகக் கட்டண உயர்வு ஏற்படுத்தப்பட்டதெனவும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை (N.W.S.D.B.) பிரதித் தலைவர் ஆர்.டபிள்யு.எம்.ரீ. விஜேதிலக்க கூறினார். தொலைத் தொடர்புக் கட்டண உயர்வுகள் ஏப்ரலில் அறிவிக்கப்படலாமெனக் கருதப்படுகிறது. அனல் மின்சார (Thermal Power Plants) உலைகளில் அரசாங்கம் பாரியளவு செலவுகளை மேற்கொள்வதால் மின்சாரக் கட்டணமும் அதிகரிக்கப்படலாமென ஊகிக்கப்படுகிறது.

சண்டே ரைம்ஸ்-16.03.1997




## இன்னொரு ஆலோசனை!

கல்வி அமைச்சு. மாகாணக் கல்வி அமைச்சு. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள். மஹரகம தேசிய கல்வி நிறுவனம் ஆகிய அரச நிறுவனங்களின் முகாமைத்துவ செயற்பாடுகளை மறுசீரமைப்புச் செய்ய வேண்டுமென உலக வங்கி வழங்கிய ஆலோசனையொன்றை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இப்போது நடைபெற்று வரும் கல்வி மறுசீரமைப்பு அவ் யோசனையின் படியே நடைபெறுவதாகக் கல்வி அமைச்சுத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

லக்பிம-1997.03.16

## புதிய நிர்வாகிகள் தெரிவு!

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு மார்ச் 9ம்திகதியன்று நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போது நடைபெற்றது. அமைப்பின் தலைவராக மீண்டும் சாள்ஸ் அபயசேகர அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பிரதித் தலைவராக ச. பாலகிருஷ்ணன் அவர்களும், உபதலைவர்களாக கே.எஸ். இரத்தினவேல், வி.எஸ் மணியம், எஸ்.மனோரஞ்சன் ஆகியோரும் செயலாளராக யுக்திய பத்திரிகை ஆசிரியர் சுனந்த தேசப்பிரியவும் பொருளாளராக ஸ்ரான்லி விமலசிறியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உபசெயலாளராக டி.ஜே. குணசேகர அவர்களும் உப பொருளாளராக எஸ் ஆதவனும் மற்றும் இருபது தேசியக் கமிட்டி உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அமைப்புக்கான புதிய அமைப்பு விதிகளும் இப்பொதுக் கூட்டத்தின் போது நிறைவேற்றப்பட்டது.

## ரஷ்யாவிலிருந்து அமெரிக்காவுக்கு!

தொழில்நுட்பக் கோளாறுகளுக்கு உள்ளாவது, உதிரிப் பாகங்கள் இல்லாமை ஆகிய விடயங்கள் காரணமாக ரஷ்ய விமானங்களைக் கொள்வனவு செய்வதை நிறுத்திவிட்டு இலங்கை விமானப் படை அமெரிக்க விமானங்களை வாங்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரியவருகிறது.

இத்தீர்மானத்தின் மீது கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தபடும் விமானத்தை வாங்குவதற்காக விமானப்படைப் பிரதிநிதிகள் சிலர் இப்போது அமெரிக்காவிற்குச் சென்றுள்ளனர். கடலில் மிகத் தாழ்வாகப் பறந்து கொண்டு எதிரிப் படகுகள் மீது தாக்குதல் நடாத்தக் கூடிய சிறிய விமானங்களை அமெரிக்காவிடமிருந்து வாங்குவது இப்பிரயாணத்தின் அடிப்படை நோக்கமாகும் என தெரியவருகிறது.

யுக்திய-1997.02.09

## சப்புமல்புர!

வவுனியா-மன்னார் வீதியிலுள்ள பறையனாலங்குளத்தில் பாரிய இராணுவ முகாமொன்றை அமைக்கவுள்ள அரசு. அதற்கு "சப்புமல்புர" எனப் பெயரிடவுள்ளது தமிழ் அரசியல் பிரிவுகளின் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. தமிழ்ப் பிரதேசமொன்றைச் சிங்களப் பெயரொன்றினால் மீளப் பெயரிடுவது அப் பிரதேசங்களில் இனவாத உணர்வுகளைத் தூண்டலாம் என்பது இவ் எதிர்ப்புக்கான காரணமாகும்.

பறையனாலங்குளம் எனப்படுவது வவுனியா-மன்னார் வீதியும் மதவாச்சி-மன்னார் வீதியும் சந்திக்கும் இடமாகும். அது மிக முக்கியமான பெருஞ் சந்தியும். போர் உபாய வழி என்ற வகையில் முக்கிய இடமுமாகும்.

யுக்திய-1997.03.16

## நாடகப் பிரதிப் போட்டி~97

மகாஜனக் கல்லூரி ஸ்தாபகர் பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளை அவர்களின் நினைவாக நாடகப் பிரதிப் போட்டி ஒன்றை மகாஜனக் கலை வட்டம் (பிரான்ஸ்) நடாத்தவுள்ளது.

- போட்டியில் எவரும் பங்குபற்றலாம். எந்த நாட்டிலிருந்தும் பங்குபற்றலாம் வயதுக் கட்டுப்பாடு இல்லை.
- எந்தக் கருப்பொருளையும் மையப்படுத்தி எழுதலாம். படைப்புகளுக்குப் பக்கக் கட்டுப்பாடு கிடையாது.
- படைப்புகள் எங்கும் மேடையேற்றப்படாததாகவும் பிரசுரமாகாததாகவும் இருத்தல் வேண்டும்.
- போட்டி முடிவுத் திகதி 24.06.1997

அனுப்ப வேண்டிய முகவரி:
Y. Sivalingam
4, Allee Racine,
93270 Sevran, France

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

ஒஸ்லோவில் இயங்கிவரும் தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடம் தனது பத்தாண்டு நிறைவையொட்டி இலங்கை மாணவரிடையே கட்டுரைப் போட்டியொன்றை அறிவிக்கிறது. முதற்பரிசு 5000 ரூபாய், இரண்டாம் மூன்றாம் பரிசுகள் 3000, 2000ரூபாய்.

போட்டி முடிவுத்திகதி 31.05.1997. எந்தத் தலைப்பிலும் கட்டுரை புனையலாம்.

- கட்டுரை மாணவரது சொந்தப் படைப்பு என்பதைப் பாடசாலை அதிபர் உறுதி செய்யவேண்டும்.
- கட்டுரையின் அளவுக்குக் கட்டுப்பாடில்லை.
- கட்டுரையில் பெயர் குறிப்பிடாது, தனியான தாளில் மாணவர் பற்றிய விபரங்களை எழுதலாம்.

தாளின் இருபக்கங்களிலும் கட்டுரை எழுதப்படலாம்

முகவரி:
Tamilsk - Norsk Forening,
Herslebs Gt 43,
0578. Oslo.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உங்கள் வாக்குகள் யாருக்கு?

### ஒரு கணம் சிந்தியுங்கள்!

***இந் நாட்டின் அரசியலில்,***

- பயங்கரவாதத் தடைச்சட்டைத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் கொண்டு வந்தவர்கள் **யார்?**
- அதன் பலத்தைக் கொண்டு இன்று அதிகாரம் செய்பவர்கள் **யார்?**

***தெற்கை***

- 1971இல் இரத்தக்களறியாக்கியவர் **யார்?**
- 1988-89இல் அதைச் சுடுகாடாக்கியவர் **யார்?**

***வடக்கு - கிழக்கு மீது,***

'போரென்றால் போரென்று' பிரகடனம் செய்தவர்கள் **யார்?**

சமாதானத்தின் பெயரால் இன்று யுத்தம் புரிபவர்கள் **யார்?**

***அந்நியச் சுரண்டலுக்கு***

- நாட்டைத் திறந்து விட்டவர்கள் **யார்?**
- இந்தப் பகற்கொள்ளைக்கு மனிதாபிமான முகம் கொடுத்தவர்கள் **யார்?**

***இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை,***

- எதிர்ப்பவர்கள் **யார்?**
- தீர்வென்ற பெயரில் அரைகுறைத் திட்டங்களைத் திணிப்பவர்கள் **யார்?**

***இந் நாட்டில்***

- எதேச்சாதிகார ஜனாதிபதி முறையை கொண்டு வந்தவர்கள் **யார்?**
- இன்று அதை வைத்து மக்களை மிரட்டுபவர்கள் **யார்?**
- 1980இல் நாற்பதாயிரம் தொழிலாளர்களை நடுத்தெருவுக்கு விரட்டியவர்கள் **யார்?**
- 1996இல் தொழிலாளர் போராட்டத்தை துப்பாக்கி முனையில் ஒடுக்கியவர்கள் **யார்?**
- இன ஒற்றுமைக்கு ஆப்பு வைப்பவர்கள் யார் **யார்?**
  இனவாதத் தீயைப் பரப்புவர்கள் **யார்? யார்?**
- தேசியச் சொத்துக்களைக் கொள்ளையடிப்போர் **யார்? யார்?**


- ***அரசியலில் படுகொலைகளை அரங்கேற்றுபவர்கள்***

**யார்? யார்?**

**யார்? யார்? யார்?**

**உங்கள் வாக்குகள் இவர்களுக்கா?**





# பன்றிக் குஸ்தி!

அருகிலிருப்பது எந்தக் கட்சியின் விளம்பரம் என்று கேட்கிறீர்களா? இவ்வாறான ஒரு விளம்பரத்தை பிரசுரிப்பதற்கு எமது நாட்டில் ஒரு கட்சிகூட இல்லையென்பது தான் நமது துரதிருஷ்டம்.

கடந்த தேர்தல் எல்லாவற்றையும்விட இம்முறை எல்லாக் கட்சிகளும் சுவரொட்டிப் போட்டியில் தாராளமாக ஈடுபட்டிருக்கின்றன, அசந்தால் முதுகிலேயே ஒட்டிவிடுவார்கள் எனும் அளவுக்கு. பிரேமதாசவுடன் போய் ஒழிந்து விட்டதாக சொல்லப்பட்ட கட்அவுட் கலாசாரமும் அம்மையாரின் ஆட்சியில் மீளத் தலை தூக்கியுள்ளது.

ஐ.தே.க வேட்பாளர்கள் பச்சை சேட்டுடன், ஐ.தேகவின் பச்சை நிற யானைக் கொடியின் பின்னணில், பச்சை நிறக் குரோட்டன்களுக்கு மத்தியில், பின்னணியில் தெரியும் வானமும் பச்சையாக... கூப்பிய கைகளுடன் சுவரொட்டிகளில் சிரிக்கிறார்கள்.

இதே பொ.ஐ.மு. வேட்பாளராக இருந்தால் கூப்பிய கையும் சிரிப்பும் அதே போல் இருக்க நிறம் மட்டும் நீலமாக மாறியிருக்கும்.

இந்த சுவரொட்டிப் போட்டியில் ஐ.தே.வினர் பொ.ஐ.மு ஆதரவாளர்களின் வீட்டு மதில்களில் சுவரொட்டிகளை ஒட்ட, பொ.ஐ.முவினர் ஐ.தே.க ஆதரவாளர்களின் சுவர்களில் தமது கைவரிசையைக் காட்ட, அவை கிழிக்கப்பட, தர்க்கமாகி, மோதலாகி, மண்டை பிளந்த சம்பவங்கள் பல தேர்தல் கண்காணிப்புக்குழுவின் அறிக்கைகளில் பதிவாகியிருக்கின்றன. வீடுகளும் வாகனங்களும் தாக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன. ஜனநாயகத்தை காப்பாற்றுவதில் இவர்கள் செய்யும் தியாகம் தான் என்னே?

தலை கவிழ்ந்தபடி நிர்வாணமாக மரத்துடன் கட்டப்பட்ட ஒருவரின் படத்துடன் சுவரொட்டியொன்று "17 வருட பாடங்களை மறவோம்" என்ற தலைப்புடன் நாடெங்கும் பரவலாக ஒட்டப்பட்டிருக்கிறது. ஐ.தே.கவின் 17 வருட ஆட்சிக்காலத்தை அம்பலப்படுத்துவதற்காக பொ.ஐ.மு.வினால் ஒட்டப்பட்ட சுவரொட்டி இது.

அச்சுவரொட்டிகளை அகற்றுமாறு அமைச்சர் ரிச்சட் பத்திரனவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார் பிரியதர்ஷினியென்ற பெண்மணி.

அச்சுவரொட்டியிலுள்ள படம் டீ.ஜே.வியினால் கொல்லப்பட்ட தனத தந்தையாரான புத்ததாச ரூபசிங்கவினுடையது என்றும் ஹக்மனைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு வர்த்தகரே அவரென்றும் அப்பெண்மணி குறிப்பிடுகின்றார். தந்தையாருடன் சேர்த்து பிரியதர்ஷனியின் இரு சகோதரர்களும் கூட கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

சுவரொட்டியை முதலில் தாம் பார்த்ததும் மயக்கமடைந்துவிட்டதாக சொல்லும் அவர் மீளவும் அதனைத் தாம் பார்க்க விரும்பவில்லை யென்கிறார். "அச்சுவரொட்டியை பார்க்கும் போதெல்லாம் என் துயர் பெருக்கெடுக்கிறது" என்கிறார் பிரியதர்ஷினியின் தாயார்.

இப்படத்தை கடந்த தேர்தலில் ஐ.தே.க தனது விளம்பரத்தில் பயன்படுத்தியிருந்தது.

'·கள் வாக்குகளைப் பாவியுங்கள், ..டுகளைத் தோற்கடிக்க" என்ற தலைப்பின் கீழ்.

"17 வருட பயங்கரவாத ஆட்சியின் பாடங்களை மறவோம். மன்னியோம்" என்ற தலைப்புடன் இப்பொழுது பயன்படுத்துகின்றது பொ.ஐ.மு.

"தாங்கள் ஐ.தே.க.வினர் என்பதால் தனது தந்தையையும் சகோதரர்களையும் தேசாபிமான மக்கள் இயக்கத்தினரே (டீ.ஜே.வி.) கொன்றதாக பிரியதர்ஷினி கூறுகின்றார்.

உங்கள் சுயலாபத்துக்காக இந்தப் படத்தைப் பயன்படுத்தாதீர்கள் என்று கோருகிறார் பிரியதர்ஷினி. அமைச்சர் ரிச்சட் பத்திரனவிடம் இச்சுவரொட்டிகளை அகற்றுமாறு விடுத்த கோரிக்கைக்கு "நாடு முழுவதும் அது விநியோகிக்கப்பட்டுவிட்டதால் அதை அகற்றுவது சாத்தியமில்லை" என்று கையை விரித்து விட்டார்.

இதே வேளை இச் சுவரொட்டியை பொ.ஐ.மு.வின் மாத்தறை மாவட்ட அபேட்சகர் ஒருவர் நிராகரித்திருக்கிறார். அச்சுவரொட்டியிலுள்ள படம் தனது சித்தப்பாவின் மகனுடையது என்றும் அவர் ஐ.தே.க.வைச் சேர்ந்தவர் என்பதற்காக அவரை டீ.ஜே.வியினரே கொலை செய்தார்கள் என்றும் அதனாலேயே அச்சுவரொட்டியை தான் நிராகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

16 வருடங்களாக தொடரும் யுத்தத்தை நிறுத்த ஒரே வழி மத்தியஸ்தமே என்றும். (பயங்கரவாத தடைச் சட்டத்தையும் அவசரகால சட்டத்தையும் அமுல்படுத்தி தமிழ் மக்கள் மீது போர் பிரகடனம் செய்தது தனத கட்சியே அல்ல என்ற பாணியில்) கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் ஆளாகும் பலவித தொந்தரவுகள் தொடர்பாக அவர்கள் அழைக்கும் போதெல்லாம் 24 மணிநேரமும் உதவும் திட்டமொன்றை தாம் வகுத்துள்ளதாகவும் (அந்த ப.த.சட்டமும். அ.கா.சட்டமும் தானே தமிழர்களை அடையாள அட்டை கேட்டும் பதிவுத் துண்டு கேட்டும், கறுப்பென்று பார்த்தும் அள்ளி ஏற்றுகிறது.) ஒரு விளம்பரத்தில் சொல்கிறார், ஐ.தே.க கொழும்பு வேட்பாளர்களில் ஒருவரான சி.மகேந்திரன் தமிழ் மக்களின் மறதி மேல் அவருக்கும், அவரது கட்சிக்கும் அதீத நம்பிக்கை தான் போங்கள்.

ஐ.தே.க தீர்வுத் திட்டத்தை ஆதரிக்காததால் கோபம் கொண்டு, ரோஷம் கொண்டு, வெகுண்டெழுந்து அதிலிருந்து வெளியேறி சுயேட்சையாக (?) தேர்தலில் குதித்திருக்கிறார் கணேசலிங்கம். நாட்டுக்கு பௌசியையும், நகரத்துக்கு நவ்பரையும் (இதுவும் ஒரு சுவரொட்டி வாசகம் தான் மாட்சிமை தங்கிய முடியாட்சியை விட்டொழித்து மக்களின் குடியாட்சி முறைக்கு வந்து உருண்ட வருடங்கள் எத்தனையோ?) கூட்டுக்கு சேர்த்துக் கொண்டு.

ஐ.தே.கவிலிருந்து அவர் வெளியேறியதும் தவறல்ல. பொ.ஐ.மு இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என்று அவர் நம்புவதும் தவறல்ல. (அவர் உண்மையாக நம்புகிறார் என்பது வேறு விடயம்) தமிழ் மக்களை அதை நம்பச் சொல்வது தான் நகைப்பிற்கிடமானது.

ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் சரிநிகருடனான நேர்காணலின் போது யாழ் நூலகம் எரிக்கப்பட திட்டமிட்ட போது அங்கே கணேசலிங்கமும் இருந்ததாகவும். முன்பே தெரிந்திருந்தும் அவர் அதனைத் தடுக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். அந்த கணேசலிங்கத்துக்கு இனப்பிரச்சினைத் தீர்வில் ஏற்பட்டிருக்கிற திடீர் அக்கறையை எண்ணும் போது நமக்கு மெய் சிலிர்க்கிறதல்லவா?

→6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## ஒரு ரெலோக் கதை!

"சின்னதோர் மின்னலை நிலவென்று
கொண்டது
சிலர் தந்த பிரமையிலோ?"

-எங்கோ கண்ணிற்பட்ட கவிதை வரிபோலத் தோற்றமளிக்கிறதா?

ஆம், ரெலோ இயக்கத்தினர் கொழும்பு மாநகர சபைப் தேர்தலில் தமக்கு வாக்களிக்குமாறு கோரி வெளியிட்ட விளம்பரத்தில் காணப்படுகிற வரி இது.

மின்னலை மின்னலாகவும் நிலவை நிலவாகவும் காண வேண்டும். யாராவது ஏற்படுத்த விரும்பும் பிரமைகளால் அள்ளுப்பட்டு மின்னலை நிலவாக நம்பிய பழைய கால அனுபவங்களுக்கு மீண்டும் வாக்காளர்கள் ஆளாகி விடக் கூடாது என்ற மக்கள் மீதான ஆழ்ந்த அக்கறையுடன் இந்த வரிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ரெலோவின் மக்கள் மீதான அக்கறையைப் பார்க்கையில் உடம்பு புல்லரித்துப்போய் விடுகிறது.

ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், இப்படிச் சொல்லும் ரெலோவின் அதே விளம்பரத்தில் போர் நிறுத்தம், நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தை, வெளிநாட்டு மத்தியஸ்தம், நீதியான அரசியல் தீர்வு, நிரந்தர சமாதானம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அது கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் நிற்பதாக வேறு கூறியிருக்கிறது. அதுதான் கொஞ்சமும் புரியாத விடயமாக இருக்கிறது. மாநகர சபைத் தேர்தலுக்கும் இந்தக் கோரிக்கைகட்கும் உள்ள சம்பந்தம் என்னவென்றே பிடிபடவில்லை.

ஒரு வேளை திருமலை நகராட்சி சபையினால், சந்தைக் குத்தகை விவகாரம் போன்ற விடயங்களைச் செய்ய முடியாமல் போனதால், மாநகர சபைகள் நகராட்சி சபைகள் எல்லாம் அவ்வாறான வேலைகளைச் செய்வதற்கல்ல, மக்களின் அரசியற் கோரிக்கைகளை முன்வைத்து போராடுவதற்கான தளங்களே அவை என்ற முடிவுக்கு ரெலோ வந்துவிட்டதோ என்னவோ?

அல்லது, இந்தக் கோரிக்கைகளை முன்வைக்கப் பாராளுமன்றத்தில் தமக்கு யாரும் இல்லாததால், மாநகரசபையில் அதைச் செய்வோம் என்று நினைத்ததோ என்னவோ?

அல்லது மின்னல் எது நிலவு எது என்பது பற்றித் தெளிவில்லாதவர்களுக்கு அதற்கே புத்தி பேதலித்து விட்டதோ என்னவோ?

ஒன்றுமே புரியவில்லை.

வாக்காளர்களுக்கு புத்தி பேதலித்திருப்பதாக ஒரு தகவலும் இதுவரை கிடைக்கவில்லை.

## இன்னொரு ரெலோக் கதை!

போர்நிறுத்தம், நிரந்தர சமாதானம் பற்றிய மேற்சொன்ன அதன் விளம்பரம் வீரகேசரியில் வெளியானதைப் பார்த்து வியந்து கொண்டிருக்கையில் அண்மையில் வவுனியா சென்று திரும்பிய நண்பர் ஒருவர் இந்த ரெலோக்கதையைச் சொன்னார்.

ரெலோவின் மாவட்ட செயலகம் ஒன்று வவுனியாவில் திடீரென முளைத்திருக்கிறதாம். வவுனியா வங்கியாளர் ஒருவருக்கு வாடகைக்காக தனியார் ஒருவரால் வழங்கப்பட்ட ஒரு வீட்டில் அந்த வங்கியாளர் குடியேறுவதற்கு நாட்பார்த்துக் கொண்டிருக்கையில், அவருக்குத் தெரியாமலே அந்த வீட்டில் திடீரென ரெலோவின் மாவட்டச் செயலகம் முளைத்து விட்டதாம்.

வளவு 'கேற்' உடைத்து திறக்கப்பட்டு, மண்மூடைகள் அடுக்கப்பட்டு இரவோடிரவாக கதவும் உடைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்த 'மாவட்டச் செயலகத்தில்' ஆயுதம் ஏந்திய 'மாவட்டங்கள்' நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவர்கள் வியப்பால் மூச்சடைத்துப் போனார்கள்.

தனக்கு வாடகைக்கு இந்த வீடு வழங்கப்பட்டிருக்கிறது என்று "நீதியான தீர்வு" கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அழாக்குறையாக மாவட்டச் செயலகத்துக்கு சென்று அந்த வங்கியாளர் முறையிட்ட போதும் அவருக்கு வீடு கிடைக்கவில்லை.

தாங்கள் அந்த வீட்டை எடுத்தது சரியானதே... கொஞ்சம் தவறியிருந்தால் அதைப் புளொட் எடுத்திருக்கும் என்பதே ரெலோ இயக்கத்தினரின் அபிப்பிராயமாக இருப்பதாக அந்த நண்பர் எனக்குத் தெரிவித்தார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஏன் இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதோ" என்று கேட்டு வைத்தேன்.

"நீ கனகாலம் வவுனியா போய், உனக்கு அங்கத்தை நிலைமை தெரியாது. பொலிசிலை போய் முறைப்பாடு செய்யிறது, அதுவும் இயக்கத்துக்கு எதிராக முறைப்பாடு செய்யிறது எவ்வளவு முட்டாள்தனம் எண்டது அங்கை போனால் தான் தெரியும்.

"என்ன அப்படிச் சொல்கிறாய்? எவ்வளவு அநியாயமாக இருக்கு இது"

"உனக்கு இந்த நாட்டிலை அநியாயம் நடக்கக் கூடாது என்றது முக்கியமா? உன்ரை தலையைக் காப்பாற்றுறது முக்கியமா? அந்த ஊரிலை உள்ள ஆரும் யோசிக்கிற விசயம் இது தான்."

"அப்ப ரெலோ இன்னும் திருந்தேல்லை" எண்டு சொல்லிறாய்?

நண்பர் பதில் சொல்லவில்லை. அவர் திரும்பவும் வவுனியா போகவேணும் என்று நினைத்தாரோ என்னவோ?

## ஒரு சூனியக் கதை!

மீண்டும் ஒரு புக்காரா விமானம் வானத்தில் வெடித்துச் சிதறி விழுந்ததையும், அதன் விமானி பரசூட் மூலம் ஆபத்தின்றித் தப்பியதையும் பற்றி பத்திரிகையில் வெளிவந்த செய்தியைப் படித்துக் கொண்டிருந்தேன்.

ஏற்கனவே ஒரு புக்காரா விமானம் புலிகளினால் 1996 இல் சுட்டு வீழ்த்தப்பட்டதை நினைவுபடுத்தி இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின் வீழ்த்தப்பட்ட 14வது விமானப்படைக்கு சொந்தமான விமானம் இதுஎன்று அந்தப் பத்திரிகைச் செய்தி குறிப்பிட்டிருந்தது.

எண்டிப்பத்திரிகையை வாங்கிப் படித்த எனது நண்பர் ஒருவர் பெருமூச்சுடன் 'சந்திரிகாவுக்கு யாரோ சூனியம் செய்துபோட்டார்கள்' என்று வருத்தத்துடன் கூறினார்.

இந்த நண்பர் ஒரு பொ.ஐ.மு. ஆதரவாளராக இருந்தவர். கடந்த பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் வெற்றியால் நாடு நிம்மதியடையக் கூடும் என்று நம்பி அதற்காக தனது வாக்கை அளித்ததுடன், தனக்கு முடிந்தவர்களது வாக்கையும் போடுவதற்கு முயற்சி செய்தவர்.

எந்த தனிப்பட்ட விருப்பங்களும் அற்று, ஐ.தே.க. போய் நாடு நல்லாய் வரவேண்டும் என்ற ஆசையுடன் இப்படிச் செய்த அப்பாவி மனிதர் அவர்.

ஆனால் மிக அண்மைக் காலமாக அவர் அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்திருந்தார். எல்லாரும் ஒரே ஆட்கள் தான் என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளத் தொடங்கியிருந்தார்.

இப்போது அவர் சந்திரிகாவுக்கு யாரோ சூனியம் செய்விட்டதாக கூறியபோது எனக்கு வியப்பாக இருந்தது.

'ஏன்' என்று கேட்டேன்.

'இல்லாவிட்டால் இந்த தேர்தல் நேரத்தில் இப்பிடி ஒரு விடயம் நடக்குமா என்ன?

'என்ன விடயம்?'

'பாவம் சந்திரிகா அந்த மனுசி அதிகாரத்துக்கு வந்த நாள் முதல் எல்லாம் அவவுக்கு எதிராகவே நடக்கிறது... பார் இந்த தேர்தல் நேரத்தில் விமானம் விழுந்து நொருங்குகிறது..... என்றால் அந்த விமானி ஐ.தே.க. காரனாக இருக்க வேண்டும் அல்லது புலிகள் விமானத்தைச் சுட்டிருக்க வேண்டும் இரண்டும் இல்லை... இயந்திரக் கோளாறு என்கிறார்கள்...... அப்ப இதை எப்படிச் சொல்கிறது?'

நண்பர் சொன்னதும் சரியோ என்று எனக்குப் பட்டது.

சூனியம் சந்திரிகாவுக்கு எதிராகச் செய்யப்பட்டதா அல்லது முழு நாட்டுக்கும் எதிராக செய்யப்பட்டதா என்று தெரியவில்லை.

ஏனென்றால் குவேனி காலத்திலிருந்து இன்று சந்திரிகா காலம்வரை நடந்து கொண்டு இருக்கும் பல சம்பவங்களுக்கும் சூனியத்துக்கும் ஏதோ ஒரு வகையில் சம்பந்தம் இருந்து கொண்டு தான் வருகிறது.

இதை நான் அவருக்குச் சொன்னேன்.

'ஓமோம்...... விமானங்களில் கோளாறு வராமல் இருக்க ஆசி வேண்டி நாடு பூராவும் பிரித் ஓதல் வைபவத்தை செய்வது நல்லது' என்று சொன்னார் அவர்.

அவரது ஐடியா அம்மையாருக்கு சமர்ப்பணம்!

## புலிகளின் எறிகணைகள்!

வவுனியாவின் பாதுகாப்பு நிலைமைகளும் சமுக நிலைமையும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தன.

இந்த நிலைமை இப்போது கடந்து போன நிலைமைகளாகவே மாறிக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகள் ஏவிய எறிகணைகள் கடந்த மாதம் 7ஆம் திகதி வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தின் அருகில் வீழ்ந்து வெடித்த தில் ஒரு பொலிஸ்காரர் மரணமானார்.

வன்னிப் பிராந்திய பாதுகாப்புப் பகுதியினரின் தலைமை அலுவலகத் தொகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தோடு வவுனியாவின் பொதுவான பாதுகாப்பு ஸ்திரத்தன்மையும் சமுக நிலைமையும் ஆட்டங்காணத்தொடங்கின.

இரண்டாம் முறையாக இதே பகுதியில் மறுநாளிரவும் புலிகளின் எறிகணைகள் வந்து வீழ்ந்து வெடித்தபோதிலும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

கடந்த வருடம் ஜூலை மாதம் முல்லைத்தீவு இராணுவ முகாமைத் தாக்கி அழித்த விடுதலைப்புலிகள் அங்கு வைக்கப்பட்டிருந்த பலதரப்பட்ட ஆயதங்களையும் இரு ஆர்ட்டிலறி பீரங்கிகளையும் அபகரித்துச் சென்றார்கள்.

இந்த நீண்டதூர வீச்சு வலு கொண்ட பீரங்கியின் மூலம் வடபகுதியின் இராணுவத் தளங்கள் தாக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு அரச படைகளிடம் இருந்தது.

பரந்தன் இராணுவ முகாமும் ஆனையிறவு இராணுவ முகாமும் இதன்படி ஜனவரி மாதம்9ம் திகதி பலத்த எறிகணைத் தாக்குதல் களுடன் கூடிய புலிகளின் அதிரடித் தாக்குத லுக்கு ஆளாகியது.

ஆயினும் வவுனியா நகர பிரதான பாதுகாப்புத் தளத்தின் மீது எதிர்பாராத வகையில் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்வார்கள் என எவரும் எதிர்பார்த் திருக்கவில்லை.

வவுனியா நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள மாமடு இராணுவ பாதுகாப்பு முன்னரங்கின் மீதும் நொச்சிமோட்டை - கொக்குவெளி முன்னணி பாதுகாவலரண் மீதும் இதற்கு முன்னதாக இரு தடவைகள் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற் கொண்டிருந்தனர்.

இதனைத் தவிர, மார்ச் 10ஆம்திகதி இரவு நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய நலன்புரி நிலைய பொலிஸ் காவலறை மீது தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒரு பொலிசார் பலியாகினார். ஒருவர் காயமடைந்தார். சம்பவ நேரத்தில் பொலிசாரின் அலுவலகத்தில் இருந்த ஒருவரும் காயமடைந்தார்.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத் திலிருந்த கே. பெருமாள் (39) என்பவரே இவ்வாறு காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசாரின் காவலறை - அலுவலகம் கலைமகள் மகா வித்தியாலய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. பாடசாலையின் விளையாட்டு மைதானத்திலும் அதற்கு அருகில் உள்ள காணிகளிலும் அமைக்கப்பட் டுள்ள மண்டபங்களிலேயே இடம் பெயர்ந்தவர்களுக்கான நலன்புரி நிலையம் இயங்குகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலைத் தாங்களே நடத்தி யதாக புலிகள் வன்னியில் உரிமை கோரியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்து சரியாக ஒருவார காலத்தின் பின்னர் 17ம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் வவுனியா புகையிரத நிலையத்துக்கு அருகில் உள்ள இடைத்தங்கல் முகாம் பொலிஸ் காவல் நிலைமீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கிரனைட் தாக்குதலில் பெண் பொலிஸ் ஊர்காவலர் இருவர் காயமடைந்தனர்.

இவ்விரு சம்பவங்களும் நலன்புரி நிலையங்களின் பொலிசார் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாவது கைக் குண்டுத் தாக்குதலை நடத்தியது யார் என உடனடியாக நிர்ணயம் செய்யப்படவில்லை.

தம்பு

## மறியல் போராட்டம்!

மாகாண சபை தலைமைச் செயலகத்துக்கு முன்னால் கடந்த பெப். 28ந் திகதியன்று ஆர்ப்பாட்டமான மறியல் போராட்டம் ஒன்று நடந்தேறியுள்ளது. மாகாண சபையின் சிற்றூழியர்களால் நடத்தப் பட்ட இப்போராட்டம் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் செயற்திறனற்ற அதிகாரிகளின் அசமந்தப் போக்கையே பிரதிபலிப்பதாக அமைகின்றது.

அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கத்தின் திருகோணமலைக் கிளையால் ஒழுங்கு செய்யப்பட்ட இம்மறியல் போராட்டம் பற்றி ஏற்கெனவே நிர்வாகத்துக்கு அறிவித்தல் கொடுத்ததன் காரணமாகவோ என்னவோ தலைமைச் செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி புத்திசாலித்தனமாக மாயமாகிவிட்டார். இவர் மாத்திரமல்ல பல செயலாளர்கள் ஊரில் இல்லாமல் இருந்து மறியல் போராட்ட உறுப்பி னர்களிடையே சுவாரசியமான விடயமாகப் பேசப்பட்டது. சரியாகவோ பிழையாகவோ முகங்கொடுத்த பிரதிப் பிரதம செயலாளர் க. பாரமலிங்கம் பாராட்டுக்குரியவர். முதுகில் புண் இல்லாதவர்.

இப்போராட்டத்தில் ஆறு கோரிக் கைகள் முன்வைக்கப் பட்டிருந்த போதிலும் இரண்டு பிரதானமானவை எனக் கருதப்பட்டது. முதலாவது கோரிக்கையாக கால் நடை உற்பத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் செல்லையா சோமபாலா இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதாகும். இரண்டாவது கோரிக்கை இ. மணி வண்ணன் என்ற ஊழியருக்கு செல லையா சோமபாலவால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பரிகாரம் காணப்பட வேண்டும் என்பதாகும்.

உண்மையில் இந்தப் போராட்டம் உருவாகுவதற்குக் காரணமாக இருந்தவர் செல்லையா சோமபாலதான் என்ற கருத்தே நிலவுகிறது. இவர் மேல் நடவடிக்கை எடுக்கத் துணிவில்லாத தலைமைச் செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தியும் ஒரு மறைமுகக் காரணமே!

இ.மணிவண்ணன் என்ற தொழிலாளி அநியாயமாகப் பழிவாங்கப்பட்டிருக்கிறார். இரண்டு வருடங்களுக்கும் மேலாக அவர் தினமும் 16 மணி நேரச் சேவை ஆற்றும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார். அவரது சேவை நேரமோ நாளொன்றுக்கு எட்டுமணி நேரம்தான். மேலதிக நேர ஊதியம் வழங்கப்படவில்லை. மேலதிக நேர ஊதியம் கேட்ட ஒரே காரணத்துக்காக ஐந்து சம்பள ஏற்றங்கள் கொடுக்கப்பட்ட பிறகும் சேவை ஊதியப்பாடு அவருக்கு மறுக்கப்பட்டிருக் கிறது. மூன்று சம்பள ஏற்றங்களைப் பெற்ற ஒருவர் இயல்பாகவே சேவையில் உறுதிப்பாடு பெறத் தகுதியற்றவர் என்பது விதி. அது இங்கே மீறப்பட்டதோடல்லாமல் இரண்டாவது நியமனக் கடிதம் ஒன்று வழங்கப் பட்டு முதலாவது நியமனக்கடிதத்தை செல்லுபடியற்றதாக்கவும் முயற்சி எடுக்கப்பட்டது. இவற்றையெல்லாம் தனது நேரடிக் கண்காணிப்பில் நடத்தியவரே சோமபால.

சோமபாலவுக்கு எதிரான முறைப்பாடு சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் காதர் முகைதீன் வரை கொண்டு செல்லப்பட்டது. அவரும் மணிவண்ணனுக்கு நியாயம் வழங் கும் படி சோமபாலவுக்கு பல தடவை உத்தரவிட்டும் நடைபெறாமற் போகவே இது பற்றித் தலைமைச் செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்திக்கும் காரசாரமாகக் கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார். ஆனால் கிருஷ்ணமூர்த்தி கூட நடவடி க்கை எடுக்காமல் கடிதத்தைக் கிடப்பில் போட்டுவிட்டார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளும் பலனில்லாமற் போகவே மணிவண்ணன் தனது நிலைமையை விளக்கி நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அவர்களுக்கு சகல ஆதாரங்களுடன் முறையிட்டிருக்கிறார். இதனை நன்கு ஆராய்ந்த ஆணையாளர்

→18

www.tamilarangam.net





# இ.தொ.கா.வினுள் பிளவு?

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்ததன் பின் இன்னுமொரு உடைவை இ.தொ.கா. எதிர்கொள்வதற்கான சாத்தியங்கள்இருப்பதாக தெரிய வருகிறது. முன்னாள் இந்து கலாசார ராஜாங்க அமைச்சராகவும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான பி.பி.தேவராஜ் தலைமையிலேயே அப்பிளவு ஏற்படலாம் எனவும் பேசப்படுகிறது.

இ.தொ.காவின் தலைமைக்கும் பி.பி.தேவராஜ் அவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் ஏற்கெனவே கருநிலையில்புகைந்து கொண்டிருந்போதும், அண்மைய உள்ளூராட்சி சபைத்தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடந்தபோது அது உக்கிரமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இ.தொ.காவின் 7 வேட்பாளர்கள்

ஆரம்பத்தில் தேர்தலில் தனித்து போட்டியிட தீர்மானித்திருந்த இ.தொ.கா, பொ.ஐ.மு.வுடன் பேரம் பேசி சுமுகமான முடிவுக்கு வந்ததன் பின் (வெளியில் சொல்லப்படுவதென்றால் மலையக ஆசிரியர் நியமனமும் வீடுகள் சொந்தமாக்கப்படுவது தொடர்பாகவுமே பேசி முடிக்கப்பட்டதாம்) இணைந்து போட்டியிடத் தீர்மானித்திருந்தது. கொழும்பில் பொ.ஐ.மு.வின் சுயேட்சைப்பட்டியலில் 7 பேருக்கு பொ.ஐ.மு. வாய்ப்புக்கொடுத்திருந்தது. கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற ரீதியிலும், அமைப்பாளர்கள் என்ற ரீதியிலும் யோகராஜன், பி.பி.தேவராஜ் ஆகியோர், தங்கள் சார்பில் சில வேட்பாளர்களை முன்மொழிவதாக ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் இது குறித்து பி.பி.தேவராஜ் இ.தொ.கா தலைமையுடன் பேசியபோது அவ்விடயம் குறித்து தலைமையின் கருத்தைத் தெரிவிப்பதற்குப் பதிலாக யோகராஜனுடன் பேசி உடன்பாட்டுக்கு வரும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. யோகராஜனும் ஒருவாராக யோகராஜனுடன் பேசி முடிவுக்கு வந்த பின்னர் இ.தொ.கா. தலைவர் தொண்டமானுக்கு அது குறித்து பி.பி.தேவராஜாவால் கடிதமொன்றின் மூலம் அறிவித்திருக்கிறார்.

இவ்வாறு பேசிமுடித்ததன் பின் மீண்டும் தலைமையில் தன்னிச்சையாகவே முடிவுகள் மாற்றப்பட்டுள்ளன. அதன் படி யோகராஜன் கேட்டபடி யோகராஜனின் சார்பில் 4 வேட்பாளர்களும், (ராதா மேத்தா, கணகரட்னம், ஏ.எம்.டி.பாலன், எம்.எஸ். பாலன்) ஆறுமுகம் தொண்டமான், தொண்டமான் ஆகியோரால் ஒவ்வொருவரும், ஏற்கெனவே மாநகர சபை உறுப்பினராக இருந்த ஜெரால்ட் பெர்னாண்டோவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஜெரால்ட் பெர்னாண்டோ பி.பி.தேவராஜின் விசுவாசியென்றபடியால் அவரை கழற்றிவிட எத்தனித்த போதும், அவர் ஏற்கெனவே மாநகரசபையின் உறுப்பினராக இருந்து பெருமளவான மக்கள் செல்வாக்கை பெற்றிருந்ததனால் ஜெரால்ட்டை இந்த நேரத்தில் விலக்க இ.தொ.கா. தயங்கியது. அதேவேளை பி.பி.தேவராஜ் தொண்டமானுக்கு எழுதிய கடிதத்தில் சண்முகவேல் என்பவரை யாவது பட்டியலில் சேர்க்குமாறு கேட்டபோதும் அதுவும் தட்டிக்கழிக்கப்பட்டது.

### மொட்டை வெள்ளார் செல்வாக்கு

பி.பி.தேவராஜ் மொட்டை வெள்ளாளர் சமூகத்தைச்சேர்ந்தவர். இலங்கையில் இந்திய வம்சாவளி மக்களில் 'உயர்சாதி'யாக கொள்ளப்படுவது இச்சமூகமே. மிகவும் இறுக்கமான சாதிக்கட்டுப்பாடுடைய இந்த சமூகம் பெரும் செல்வந்தர்களை உள்ளடக்கியது. எனவே இ.தொ.காவை விட்டு இப்படியான உயர் மத்திய வர்க்க தரப்பை இழப்பது நமது இருப்புக்கு இடைஞ்சல் தரக்கூடியதாக இருந்தாலும், அதே சமூகத்தைச் சேர்ந்த வேறு நபர்களுக்கு (தம்மிடம் மண்டியிட்டிருக்கக்கூடிய) அந்த இடத்தை வழங்குவதற்கூடாக இப்பிரச்சினையைச் சமாளிக்க இ.தொ.கா. முயற்சித்து வருகிறது.

இ.தொ.காவை இத்தனை காலம் பாதுகாப்பதில் முக்கிய சக்தியாக திகழும் மொ. வெக்களை தொண்டமான் மேலே வரவிடாமல் பார்த்துக்கொண்டு வந்தார். எனவே எதிர்காலத்தில் தொண்டமான் இல்லாத இ.தொ.காவில் நிச்சயம் இந்த முரண்பாடு பகிரங்கமாக வெடிப்பதற்குரிய சாத்தியங்களும் உண்டு.

அண்மையில் வெள்ளவத்தையில் நடந்த தேர்தல் பிரச்சாரக்கூட்டதுக்காக பி.பி.தேவராஜ், ஜெரால்ட் ஆகியோர் அழைக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இதைத்தவிர தமது சார்பில் நிறுத்தப்பட்டுள்ள 7 வேட்பாளர்களின் படத்தோடு அண்மையில் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தில் கூட தொண்டமான் ஆறுமுகம் தொண்டமான், யோகராஜன் ஆகியோரின் புகைப்படங்களும் கூடவே பிரசுரிக்கப்பட்டிருந்தபோதும் பி.பி.தேவராஜின் புகைப்படம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

### பி.பி.தேவராஜ்-ஜெரால்ட் கூட்டு

இந்நிலையில்தான் தனது பலத்தை காட்டுவதற்கான முயற்சிகளை பி.பி.தேவராஜ் செய்து வருகிறார். பி.பி.தேவராஜுக்கு அத்தனை பெரிய பலம் இல்லையென்பதை அவரே உணர்ந்ததால் ஜெரால்ட் பெர்னாண்டோவுக்கு ஊடாக கொழும்பில் இயங்கும் 47 வெகுஜன இயக்கங்களை இணைத்து ''சமூகநல அப்விருத்தி ஒன்றியம்'' எனும் பெயரில் ஒரு அமைப்பையும் உருவாக்கியுள்ளனர். இவ்வமைப்புக்களைச் சேர்ந்தவர்களே தற்போது ஜெரால்ட் பெர்னாண்டோவின் தேர்தல் அமைப்பாளர்களாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

பி.பி.தேவராஜை 1994க்கு முன்னரென்றால் தூக்கி வெளியே எறிவதுஇ.தொ.காவுக்கு அவ்வளவு கடினமானகாரியமாக இருந்திராது. ஏனெனில், பாராளுமன்றத்திலும் கூட அவரை தேசிய பட்டியல் உறுப்பினராக தொண்டமானே நியமித்திருந்தார். ஆனால் இன்று அவர் கொழும்பு மாவட்டத்தில், போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டவர். இவர் பாராளுமன்றத்துக்கு வர துணை புரிந்தவர்கள், புலிகளே என்றும் பகிடியாக சொல்லப்படுவதுமுண்டு. ஏனெனில் இறுதியாக நடந்த பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஒரு தமிழ்ப் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படவில்லை. தேர்தல் முடிந்த ஓரிரு மாதங்களில் தொட்டலங்க குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஒஸி அபேகுணசேகர, வீரசிங்க மல்லிமராச்சியும் அடங்குவர். இறந்தவர்களுக்கு அடுத்ததாக பட்டியலில் இருந்த யோகராஜன், பி.பி.தேவராஜ் ஆகியோருக்கு அதிர்ஷ்டம் கிடைத்திருந்தது.

### கேவலமிக்க சாதனை

கடந்த பொதுத்தேர்தலில் இ.தொ.கா; ஐ.தே.கவுடன் இணைந்தே போட்டியிட்டது நினைவிருக்கலாம். எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஆளுங்கட்சியில் அமைச்சராக இருப்பதையும், எதிர்க்கட்சி வரிசையில் இருந்துகொண்டே தமது அங்கத்தவர்கள் ஆளுங்கட்சிக்கு கையுயர்த்தி வாக்களிப்பதையும் பெரும் உலக சாதனையாக இ.தொ.காவினர் கூறிவருகின்றனர்.

இந்த கேவலமிக்க தொழிலுக்கு பெருமை வேறு என்று புளுங்கும் இ.தொ.காவினரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

வடகிழக்கு இளைஞர்கள் மட்டுமல்லாமல், அப்பாவி மலையக இளைஞர்களும் கைது செய்யப்படுவதற்கும், சித்திரவதை செய்யப்படுவதற்கும், நீண்டகாலம் தடுத்து வைப்பதற்கும் கூட காரணமான அவசரகால சட்டத்தை நீடிக்கச் செய்ய எதிர்க் கட்சியிலிருந்து கொண்டே ஆதரவு அளிப்போரும் இந்த இ.தொ.காவினரே என்பதும் முக்கியமானது.

ஆரம்பத்தில் பி.பி.தேவராஜ் கொழும்பில் செல்வாக்கு படைத்தவராக இருக்கவில்லை. ஆனால் இந்து கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சராக இருந்தநேரம் பல தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்பு கிட்டியதனாலும், கொழும்பில் நடந்த சகல தமிழ் நிகழ்ச்சிகளுக்கும் அழைக்கப்பட்டதற்கூடாக சகலரும் அறிந்த நபராக ஆனதாலுமே கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட அவருக்கு தைரியம் கிடைத்தது.

பி.பி.தேவராஜ்இ.தொ.காவிலிருந்து அகற்றப்படக்கூடிய சாத்தியங்கள் இருக்கிறதோ இல்லையோ தாங்கள் தனித்து இயங்குவது நிச்சயம் என பி.பி.தேவராஜின் ஆதரவாளர்கள் பகிரங்கமாகவே தேர்தல் பிரச்சாரங்களின் போது கூறி வருகின்றனர்.

### உடைவு நிச்சயம்?

ஜெராட்ல் பெர்னாண்டோவும் கூட இம்முறை இ.தொ.காவின் பட்டியலில் லாமல் சுயேட்சைக்குழுவின் சார்பில் போட்டியிடுவதனால் ஜெரால்டை கட்சியிலிருந்து அகற்றலாமேயொழிய, நாளைய மாநகர சபையிலிருந்து (தெரிவுசெய்யப்பட்டால்) அகற்றுவது என்பது இ.தொ.காவுக்கு இலகுவான காரியமாக இருக்காது. எனவே தைரியமாக பி.பி.தேவராஜும் ஜெரால்டும் கூட்டாக செயற்பட்டு வருகின்றனர். ஜெரால்டைப் பொறுத்தவரை, தான் இ.தொ.காவின் உறுப்பினரே அல்ல எனத் தற்போது கூறி வருகிறார்.

ஏற்கெனவே கொழும்பு பொ.ஐ.மு.வின் சுயேட்சைக் குழுவில் பல இழுபறிகள். இந்நிலையில் அதில் கூட்டு சேர்ந்துள்ள ஒவ்வொரு குழுவுக்குள்ளும் இப்படியான இழுபறிகள். இதனை தெளிவாக ஐ.தே.கவினர் விளங்கி வைத்துள்ளனர்.

''இன்று நாங்கள் இந்த மேடையில் சகலரும் ஒன்றாக இருக்கிறோம் 'கரு ஜயசூரியாவை' மேயராக ஆக்குவதே எமது இலக்கு. ஆனால் கணேசலிங்கம், பவ்ஸர் (பவுஸி மகன்) ஆனந்த வசந்த நாணயக்கார ஆகியேரை ஒரே மேடையில் ஒற்றுமையாக காணமுடியுமா?'' என்று ஐ.தே.கவின் கூட்டமொன்றில் அண்மையில் கேள்வி எழுப்பினார் ரட்னசிறி ராஜபக்ஷ.

எனவே இந்த 'சாம்பார்' கூட்டு நாளை ஆட்சியமைத்தாலும் உறுதியான ஒன்றாக இருப்பது கேள்விக்குரியதுதான்.

இந்த நிலையில் தேர்தல் முடிந்த பின்னர்தான் இ.தொ.காவின் உள் மோதலும் பகிரங்கமாக வெடிக்கக் கூடிய சாத்தியங்களையும் எதிர் பார்க்கலாம்

● என்.எஸ்.சிமரன்

## கூடல் சங்கம தேவனின் கவிதையொன்று

முன்புறத்து வீடுகளின் பின்புறத்திலிருந்து
நிலவெழுகிறது.
நான் வாழும் நாட்டிலிது முன்னிரா.
நம் தேசத்திலோ நள்ளிரவு தாண்டி
சில மணிகள்.

எண்ணாயிரம் பேருடன் சேர்ந்துறங்கும்
என் கண்ணே:
முன்னாளில் நாம் செய்த பாவமிதென
நினைப்பையோ அன்றி
இந்நாளில் சாதாரணமிதுவென
சாந்தி கொள்வையோ
என்னாளா நாளை வந்தெனை மீட்டுவிடு
எனக் கனவு காண்பையோ
நானறியேன்

காதலினால் மெய்யுடைந்த மனிதனல்ல:
என்றாலும்
வாழ்வு ஒரு பொழுதும் நேரான பாதையில் போகாதென
நானுணர்வேன்
நியுணர நீண்ட நாளாகுமென நான் நினைத்தேன்
வாழ்வு மீண்டும் ஒரு பாடத்தை
இவ்வழியில் தருகிறது

நிலவு இன்னமும் மேலாக
எழுந்திருக்கிறது
நான் காத்திருக்கிறேன்.

30.01.1997

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தேர்தல் ஜனநாயகம்!

ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கு பற்றுவதற்கு உரிமையுண்டு.
மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பமானது காலாகாலம் நேர்மையாக நடைபெறும் தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்தல் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென்பதுடன், இரகசிய வாக்கு மூலம் அல்லது அதற்குச்சமமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

**(உலக மனித உரிமைப் பிரகடனம் - உறுப்புரை 21)**

சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலின் முக்கியத்துவம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமை பிரகடனத்தின் உறுப்புரை உட்பட ஜனநாயகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு முன்வைக்கப்பட்ட பல்வேறு சர்வதேச பிரகடனங்களிலும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ஜனநாயக சமூகத்தில் வாழும் பிரஜைகள் அவர்களது சுயநிர்ணய உரிமையை சுதந்திரமாகவும் சுய சிந்தனையுடனும் பயன்படுத்துகின்ற ஒரு பிரதான களமாக அமைவது தேர்தல்கள் ஆகும்.
சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு பின்வரும் நிலைமைகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

1. ஆளும் கட்சியானது தமது கட்சியின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரச அதிகாரங்களையும், அரசுக்கு சொந்தமான வாகனங்கள், அச்சக வசதிகள், வெகுஜன தொடர்பூடகங்கள், அரச வளங்களை பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.
2. வன்முறைகளைத் தூண்டுவது வன்முறைகளில் ஈடுபடுவது உட்பட எவ்வகையான ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சிகளும் தவிர்த்துக் கொள்வதோடு, ஜனநாயக மரபுகளுக்கு கட்டுப்பட்டு மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு மதிப்பளித்து ஜனநாயக ரீதியில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதை உத்தரவாதப்படுத்தல் வேண்டும்.
3. இன, மொழி, மத, குல, பிராந்திய ரீதியான கசப்புணர்வுகளையும், தாக்கங்களையும் ஏற்படுத்தாதவாறு தேர்தல் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதோடு பயமும், பீதியுமற்ற வகையில் வாக்காளர்களும் கட்சிகளின் ஆதரவாளர்களும் தேர்தல் நடைமுறைகளில் சுதந்திரமாகப் பங்குபற்றுவது உத்தரவாதப் படுத்தப்படல் வேண்டும்.
4. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பையேற்றுள்ள பொலிஸார் பக்கச்சார்பற்ற வகையில் நியாயத்திற்கு அடிபணிந்து தேர்தல் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை உத்தரவாதப்படுத்தல் வேண்டும்.
5. அரச இயந்திரமும், அரச ஊழியர்களும் கட்சி சார்பற்ற வகையில் சுதந்திரமாகவும் நியாயமாகவும் தமது தேர்தல் கடமைகளை நிறைவேற்றுவது உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.
6. அரச கட்டுப்பாட்டிலுள்ள வெகுஜன தொடர்பூடகங்களும் தனியார் றுவனக் கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பூடகங்களும் பக்கச்சார்பற்ற வகையில் போட்டியிடுகின்ற எல்லா தரப்பினர்களுக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் மக்களுக்கு சகல தரப்பினரதும் தரவுகள் சென்றடைவதையும் அதன் மூலம் மக்கள் சுதந்திரமாக சிந்தித்து தமது வாக்குகளைப் பயன்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.

ஆனால் இலங்கையின் தேர்தல் நடைமுறையானது மேற்கூறிய நிலைமைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாக அனைத்து ஊழல்களையும் கொண்டதாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த 3 தசாப்தங்களாக தேர்தல் ஊழல்கள் கிரமமாக அதிகரித்து வருகின்றதை காண கூடியதாக இருக்கின்றது. தேர்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப கால முதல் கள்ள வாக்குப்போடுதல் போன்ற தேர்தல் ஊழல்கள் மறைமுகமாக நடைமுறைப்படுத்தப்பட்டு 1981ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மாவட்ட சபைகளுக்கான தேர்தலில் அரசியல்வாதிகளின் ஈடுபாட்டுடன் வெளிப்படையாக தேர்தல் ஊழல் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 1982ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல், அதைத்தொடர்ந்து அபிப்பிராய வாக்கெடுப்பு உட்பட ஐ.தே. கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடத்தப்பட்ட எல்லாத் தேர்தல்களும், ஊழல்கள் மலிந்த தேர்தல்களாகவே காணப்பட்டன.
1994ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஊழல்கள் ஓரளவு குறைந்து காணப்பட்டமையையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். இந்நிலைமையானது பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியை அமைப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. ஊழல்கள் அற்ற ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டுவதாக வாக்குறுதி அளித்து பதவிக்கு வந்த பொ.ஐ.முன்னணி நடத்திய ஜனாதிபதித் தேர்தலிலே பாரிய அளவிலான ஊழல்கள் இடம்பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. பொ.ஐ.முன்னணியின் ஆதரவாளர்கள் வாக்களிக்கும் நிலையத்திலிருந்து எதிர்க்கட்சி பிரதிநிதிகளை விரட்டியடித்து விட்டு ஆயுதங்களுடன் சாவடிக்குள் நுழைந்து துப்பாக்கியைக் காட்டி வாக்குச்சீட்டு புத்தகங்களை பலாத்காரமாக எடுத்து வாக்குகளைப் போட்ட சம்பவங்கள் உட்பட பல்வேறுபட்ட ஊழல்கள் மலிந்த தேர்தலின் மூலமாகத்தான் சந்திரிகாவின் ஜனாதிபதி தெரிவுக்கான 62 சதவீத வாக்குகளின் சாதனை நிலைநாட்டப்பட்டது. இப்பொழுது இவ்வரசாங்கம் நடத்துகின்ற இரண்டாவது தேர்தலாக இவ் உள்ளூராட்சி தேர்தல் அமைகின்றது.
இத்தேர்தலைப் பொறுத்தளவிலே இதுவரை தேர்தல் சட்டங்களை பாரியளவில் மீறிய ஒரு சக்தியாக பொ.ஐ.மு. திகழ்கின்றது. அரச வாகனங்களை உட்பட அரச வளங்கள் கட்சியின் பிரச்சார தேவைகளுக்காகப் பொ.ஐ.முவில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பகிரங்கமாகப் பயன்படுத்தி வருகின்றன. அரச கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் எல்லாம் பொ.ஐ.மு.வின் தேர்தல் பிரச்சார ஊடகமாக மாறியிருக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரால், ஐக்கிய தேசியக் கட்சியினருக்கெதிராக திட்டமிட்டு நடத்தி வந்த வன்முறைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவலையின் படுகொலையைத் தொடர்ந்து ஐ.தே.கட்சிக்கெதிரான வன்முறைகள் நியாயப்படுத்தப்பட்டு வந்துள்ளன. மக்கள் விடுதலை முன்னணியினருக்கெதிராகவும் பல வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அரச அதிகாரத்தைப்பயன்படுத்தி பலதரப்பட்ட பயமுறுத்தல்களையும், மிரட்டல்களையும் பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் மேற்கொண்டுள்ளனர். ஐ.தே.க. அபேட்சகர்களின் வீடுகளுக்கு முகமூடிகளுடன், இலக்கத் தகடு அற்ற வாகனங்களில் சென்றவர்கள் அவ் அபேட்சகர்களை தாக்கி போட்டியிலிருந்து விலகுமாறும் பொ.ஐ.முக்கு ஆதரவாகச் செயற்படுமாறும் கோரி பயமுறுத்தியிருக்கின்றனர். இவ்வகையான தாக்குதல்களும் பயமுறுத்தல்களும் பல பகுதிகளிலும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.
சுவரொட்டிகள் ஒட்டப்படுவது சட்டப்படி தடைசெய்யப்பட்டிருந்தாலும் பொதுத் தேர்தலை விட அதிகமான அளவிற்கு சுவரொட்டிப்போர் நடைபெறுவதைக் காணக் கூடியதாயிருக்கின்றது. உதாரணமாக கண்டி மாநகர சபைத் தேர்தலிலே பல்வேறு அமைச்சர்களின் உதவியாளர்களாக இருக்கின்ற அபேட்சகர்கள் பாரியளவில் வர்ணச் சுவரொட்டிகளையும் பிரச்சார நடவடிக்கைகளையும் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவுசெய்து நடத்தி வருகின்றனர். இவ்வகையில் செலவு செய்வதற்கு இவர்களுக்கு எவ்விதம் பணம் கிடைத்தது என்பதும் ஒரு பிரச்சினையாக பேசப்பட்டு வருகின்றது. இவர்களின் பொருளாதார பின்னணியுடன் பார்க்கும் பொழுது இவர்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தான் இத்தகைய பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை உணரமுடிகின்றது. கடந்த வாரம் கண்டியில் நடந்த பிரச்சாரக் கூட்டங்களில் பங்கு பற்றிய பிரதி அமைச்சர் ஒருவர் கண்டி மாநகர சபையை ஐ.தே. கட்சி கைப்பற்றுமேயானால் அதற்கு அரசாங்கத்திடமிருந்து 5 சதம் கூட வழங்கப்பட மாட்டாதென பயமுறுத்தியிருக்கின்றார். இது கட்சியின் இலாபம் கருதி அரசைப் பயன்படுத்துகின்ற ஒரு பகிரங்கமான ஊழல் நடவடிக்கையாகும். இவ்வகையிலேயே தேர்தல் ஊழல்களிலே ஐ.தே.கட்சியை மிஞ்சி செயற்பட்டு வருகின்றது பொ.ஐ.முன்னணி.
ஜனாதிபதித் தேர்தலிலே பொ.ஐ.மு பெற்ற 62% வாக்குகளை விட மேலதிகமான வாக்குகளை பெற்று விட வேண்டும் என்னும் பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. எவ்வகையிலும் இவ்விலக்கை மிஞ்சி விடுவதை நோக்காகக் கொண்டு சகல விதமான தேர்தல் அடாவடித்தனங்களிலும் பொ.ஐ.மு. இறங்கியிருக்கின்றது. சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான மக்களின் உரிமை இப்பொழுதே குழி தோண்டிப்புதைக்கப்பட்டு விட்டது. எனவே தேர்தல் தினம் நெருங்க நெருங்க வன்முறை சம்பவங்களும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன.
இத்தேர்தலானது இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்குத் தேவையான அரச யாப்பு சீர்திருத்தத்திற்கு மக்களின் அங்கீகாரத்தை உறுதி செய்வதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பின் முன் பரீட்சையாக நடத்தப்படுவதாக பிரச்சாரப் படுத்தப்பட்டுள்ளது. ஊழலான தேர்தல்கள் மூலம் தேர்தலின் தார்மீகத் தன்மையை இழந்து நிற்கின்ற இத்தேர்தலானது இனப்பிரச்சினைத் தீர்வின் நடைமுறையிலும் ஒரு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமென்பதில் சந்தேகமில்லை. எதிர்க்கட்சியைச் சார்ந்த சிங்கள மக்களின் சுதந்திரமான வாக்களிக்கும் உரிமையை இல்லாதொழிக்கின்ற பொ.ஐ.மு. தமிழ்மக்களின் உரிமையை எவ்வகையில் அங்கீகரிக்கப் போகின்றது என்ற சந்தேகமும் ஒரு நியாயமான சந்தேகமானதாகவே அமைந்துள்ளது.

**ச.பாலகிருஷ்ணன்**

---

3→

## பன்றிக்...

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் சொல்லியாக வேண்டும். பொது சன ஐக்கிய முன்னணி "சனநாயமா? இனவாதமா?" என்ற தலைப்பில் ஒரு முழுப்பக்க விளம்பரத்தை தமிழ் நாளிதழில் வெளியிட்டிருக்கிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று விடயங்கள் முக்கியமானவை.

-சனநாயகமென்பது பெரும்பான்மை மக்களின் கருத்துப்படியான ஆட்சியென்பதை பெரும்பான்மை மக்களின் ஆட்சியென்று திரிபுவாதம் பேசினார்கள்.

-சிங்கள பௌத்தர்களே பெரும்பான்மை மக்கள். ஆகவே நாடும் அதன் ஆட்சியும் அவர்களுக்கே சொந்தமென்பது இனவெறிக்கு நெய்வார்த்தார்கள்.

-தேசியம் என்ற பேரில் ஒரு புறம் சிங்கள இனவாதம் மறுபுறத்தில் விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் பயங்கரவாதம் தலைதூக்கியது.

பொ.ஐ.மு சிங்கள நாளிதழில் வெளியிட்ட விளம்பரத்தில் இவை இல்லாமல் போய்விட்டது தான் துயரம். அது யுத்தத்துக்கு செலவு செய்து கொண்டே, கிராம அபிவிருத்திக்கும் செலவு செய்த பெருமையை பீற்றுவதாக இருந்தது. சிங்கள மக்களுக்கு சிங்கள பௌத்த பாதுகாவலராயும், தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தின் பாதுகாவலராயும் பொ.ஐ.மு காட்டும் முகத்தில் எது உண்மையென்று கேள்வி கேட்டு அறிந்து கொள்ள வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு இருக்கப் போவதில்லை.

ஐ.தே.க.வுக்கும், பொ.ஐ.முவுக்கும் அடுத்ததாக பெருமளவு இடங்களில் போட்டியிடுகிறது ஜே.வி.பி. ஜே.வி.பியும் நவ சமசமாஜக் கட்சியுமே இது வரை தேர்தல் வன்முறைகளில் ஈடுபடவில்லை என்று தேர்தல் கண்காணிப்புக் குழு அறிக்கை கூறுகிறது.

ஜே.வி.பி. வன்முறையிலீடுபடாத போதும் ஜே.வி.பிக்கு எதிரான வன்முறையை பொ.ஐ.முவும், ஐ.தே.கவும் மேற்கொண்டிருக்கின்றன. ஜே.வி.பியின் பேரை மாசுபடுத்தும் வித்தில் அதன் பேரில் பொ.ஐ.முவினர் துண்டுப் பிரசுரம் அடித்து விநியோகித்துள்ளதாக ஜே.வி.பி. முறைப்பாடு செய்துள்ளது.

யுக்திய, ராவ்ய ஆகிய இரு பத்திரிகைகளும் ஜனநாயக வழிக்கு வந்த ஜே.வி.பியினை மீண்டும் வன்முறை அரசியலுக்குள் தள்ளிவிட வேண்டாம் என்று பொ.ஐ.முவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

மார்ச் 18ம் திகதிய லங்காதீபவில் ஜே.வி.பி. ஒரு முழுப்பக்க விளம்பரத்தை வெளியிட்டிருந்தது. நாய் ஒன்று குந்தியிருக்கும் படத்தின் மீது புள்ளடியிடப்பட்டிருந்தது. கட்சியின் வெற்றிகாய் அல்லாமல் நபர்களுடைய வெற்றிக்காய் கட்சிக்குள்ளேயே நடக்கும் போட்டியை "நாய்க் குஸ்தி" என்று அது கிண்டலடித்திருக்கிறது. மந்திரிகளாகி நான்கு பரம்பரைக்கு சொத்து சேர்ப்பதற்காகவே இவர்கள் நாய்க்குஸ்தியில் ஈடுபட்டிருப்பதாக அது சொல்கிறது. இந்த நாய்க் குஸ்தியில் நாமும் பங்காளியாவதா? என்ற கேள்வியெழுப்பி அதில் ஈடுபடாத தமக்கு வாக்களிக்குமாறு கோருகிறது ஜே.வி.பி.

நாய்க் குஸ்தியில் ஈடுபட விரும்பவில்லையெனக் கூறிக்கொண்டே முதலாளித்துவப் பாராளுமன்ற சகதிக் குழிக்குள் நடக்கும் பன்றிக் குஸ்தியில் இறங்கியுள்ள ஜே.வி.பி.யால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக் கொண்டு மீண்டுவரத்தான் முடியுமா?

இவை ஒரு சில கேள்விகளே. இந்தக் கேள்விகளுடன் அருகிலுள்ள விளம்பரத்தைப் பாருங்கள். அதிலுள்ள கேள்விகளிலிருந்து தான் நாம் மீளவும் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

அரும்பாடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தேசிய வாதம்:தொடரும் விவாதம்-

# 20ம்நூற்றாண்டு தேசியங்களின் ஆண்டு

**வி.கே.எஸ்.பாரதி**

இருபத்தியோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கும், நமக்கு இந்நூற்றாண்டு, "தேசியங்களின் நூற்றாண்டு" என இன்றைய வரலாறு கூறுகின்றது. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைப் போராட்டங்கள், பரந்தளவில் நாடுகள் பலவற்றில், முனைப்படைந்து வரும் இன்றைய யதார்த்தம், இக்கூற்றை மேலும் உறுதி செய்கின்றது.

ஒரு மக்கள் குழுமம் இன்னொரு மக்கள் குழுமத்தினால் ஏதாவது ஒரு அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு, வேறுபடுத்தப்பட்டு, மேலாதிக்கம் செலுத்தப்படும்போது, ஒடுக்கப்படும் மக்கள் தம்மை ஒரு தேசிய இனமாக அடையாளங் கண்டு, தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவது தவிர்க்கப்பட முடியாததே. இது மனித உரிமைகளின் அடிப்படையிலும் கூட நியாயமானது. இந்த ஒடுக்குமுறை என்ற அம்சமே "தேசியம்" என்பதை "கற்பிதம்" செய்வதற்கு, ஒடுக்குமுறைக்குள்ளான மக்களை நிர்ப்பந்திக்கிறது. இத் "தேசியம்" ஆனது அம் மக்களின் "தேசம்" எது என்பதையும் வரையறை செய்கின்றது. ஆகவே "தேசம்" என்பதற்கு கறாரான வரையறை இருக்க முடியாது. ஏனெனில் கற்பிதம் செய்யப்பட்ட தேசியம் என்பதற்கு அமைவாகவும் தன் மீதான ஒடுக்குமுறை அம்சத்தைப் பொறுத்துமே, "தேசம்" என்பது வரையறை செய்யப்படுகிறது.

தேசியம் என்பது ஒரு ஒடுக்கப்படும் மக்கள் குழுமத்தின் பொதுவான உணர்வுகளின் அடிப்படையிலேயே, கற்பிதம் செய்யப்படுகிறது. இப் பொதுவுணர்வுகளின் எழுச்சிக்கு அடிப்படையாக இருப்பது, ஒடுக்குமுறை என்ற அம்சமே. இந்த ஒடுக்குமுறையானது, காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம், சூழலுக்கு சூழல் வேறுபட்டுள்ளது - வேறுபடுகின்றது. ஏனெனில் ஒடுக்குமுறையானது, இனம், மொழி, நிறம், கலாசாரம், பிரதேசம், ஏன் மத அடிப்படையில் கூட இடம்பெறலாம். ஒடுக்குமுறைக்கு பல்வேறு வடிவங்களும் தன்மைகளும் இருந்துள்ளன - இருந்துவருகின்றன. இதனால்தான் தேசியம் என்பது கறாரான வரையறைக்கு அப்பாற்பட்டு நிற்கின்றது.

ஒரு மனுசிக்கு - மனிதனுக்கு தான் சார்ந்த நலன்கள் தொடர்பான ஆர்வமும் அக்கறையும் அதிகம். இத் தன்மையானது தனது குடும்பம், சமூகம், பிரதேசம், தேசம், நாடு...என தனது இருப்பின் - அடையாளத்தின் அடிப்படையில் பன்முகத்தன்மை பெற்று விரிவடைந்து செல்லும். இவ்வடிப்படையில், உருவாகும் உணர்வுகள், ஒடுக்கப்படும் போது, நசுக்கப்படும்போது, களங்கப்படுத்தப்படும் போது, நகைப்புக்கிடமாக்கப்படும் போது ஏற்படும் விளைவுகள், மிகவும் சக்தி வாய்ந்தவையாகும். இவ் விளைவுகளுக்கு காரணமான உணர்வே "தேசிய குணாம்சமாக" வெளிப்படுகின்றது. இக் குணாம்சத்துக்கு அதற்கே உரிய பலமும், பலவீனமும் இருக்கும் என்பது உணரக்கூடியதே.

## வரலாற்றில் தேசியம்:

மனுசி - மனிதன் ஒருவரின் சுய உணர்வு என்பது மிகவும் சக்தி வாய்ந்தது. இவ் உணர்வானது மானுடத்தின் தோற்றத்துடனேயே ஆரம்பிக்கின்றது என்றால் மிகையல்ல. ஒரு மக்கள் குழுமம் தாம் வாழும், சூழலுக்கு ஏற்ப தமக்குள் பொதுவான ஒரு உணர்வின் அடிப்படையில் ஒன்றுபடுவது, சாதாரணமாக சமூக வாழ்வில் இடம்பெறும் ஒரு நிகழ்வாகும். இதுவே சமூக, மானுட வரலாறுமாகும். இப் பொதுவுணர்வானது முதலாளித்துவத்தின் பிறப்பிற்கு முன்பே, மக்கள் குழுமங்களிடம் இருந்திருக்க வேண்டும். ஆனால் முதலாளித்துவ சமூகம் அளித்த பேச்சுரிமை, எழுத்துரிமை, ஜனநாயகம் (இவை முழுமையாக நடைமுறையில் இல்லாத போதும்) என்பவற்றின் விளைவு இப் பொது உணர்வுகள் வெளிவரவும், சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தவும் காரணமாகின எனக் கூறலாம். இதே வேளை சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்திய மக்கள் குழுமங்கள் தம் பொதுவுணர்வு சித்தாந்தத்தை பரந்தளவில் நிலைநாட்டும் நோக்குடன் பிற மக்கள் குழுமங்கள் மீது பலவந்தமாக திணிக்க முயன்றன. ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டன. இவ் ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்கள் குழுமங்கள் தமது விடுதலைக் கோட்பாடாக தம் பொதுவுணர்வு சித்தாந்தத்தை மாற்றினர். இதுவே "தேசியம்" என்ற கோட்பாடாக வரலாற்றில் பிறந்தது. இத் "தேசியம்" ஆனது பொதுவுணர்வு சித்தாந்தத்தின் அடிப்படையில் கற்பிதம் செய்யப்பட்ட ஒன்றே. ஒடுக்குமுறைக்குள்ளான மக்கள், தாம் "கற்பிதம் செய்த தேசியம்" என்பதை அடிப்படையாகக் கொண்டு தம்மை ஒரு சுயநிர்ணய உரிமையுள்ள மக்கள் குழுமமாக வெளிப்படுத்தினர். இம் மக்கள் குழுமமே தனக்கென ஒரு "தேசத்தையும்" வரையறை செய்து கொண்டது.

ஆகவே, தேசியம், அல்லது தேசிய உணர்வு என்பது வரலாற்றில், முதலாளித்துவத்துடன் பிறக்கவில்லை. முன்பே, மக்களிடம் இருந்த பொதுவுணர்வு முதலாளித்துவத்தின் பிறப்புடன் தேசிய உணர்வாக எழுச்சி கொண்டது எனக் கூறுவது பொருத்தமானதாக இருக்கும். இத் தேசிய எழுச்சியே தத்துவஞானிகளுக்கும், அரசியல் சிந்தனையாளர்களுக்கும், "தேசியம்" தொடர்பான அவர்களது கருத்தை அல்லது வரையறையைக் கூற நிர்ப்பந்தித்தது. ஐரோப்பிய மேலாதிக்க சிந்தனையில் இருந்து விடுபடாதவரும் கருத்துமுதல்வாதியுமான ஹெகல் தேசங்கள் தொடர்பான தனது கருத்துரையில் "காட்டுமிராண்டித்தனமான, தேசங்களின் உரிமைகள் சுதந்திர உணர்வை உண்மையாகவே முன்னெடுத்துச் செல்லும், நாகரிகமடைந்த தேசங்களின்" உரிமைகளுக்கு சமனில்லாதவை எனக் கூறினார். இக் கூற்றின் மூலம், தெளிவான ஒரு வரையறையை அவர் முன்வைக்கிறார். அதாவது மேலைத்தேய நாடுகள், நாகரிகமடைந்த தேசங்கள் என்றும், அவையே உண்மையான சுதந்திரத்துக்காகப் போராடுகின்றன. அவர்களது உரிமைகளே நியாயமானவையாகவும், உயர்ந்தவையாகவும் இருக்கும் எனவும் கூறுகின்றார். அவரைப் பொறுத்த வரை கீழைத்தேய மக்கள் காட்டுமிராண்டித்தனமானவர்கள். இவர்களது சுதந்திரத்துக்கான போராட்டம் உண்மையானதோ, நியாயமானதோ அல்ல. இக் கூற்று எந்த அடிப்படையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு பிழையான கூற்றாகும்.

தத்துவஞானத்தில், ஹெகலைத் தலைகீழாக மாற்றியவர் என கார்ல் மார்க்ஸைக் குறிப்பிடுவது வழக்கம். ஆனால் மார்க்சும் ஏங்கல்சும், தேசியம் தேசம் தொடர்பான கருத்துக்களில் ஹெகலின் தாக்கத்திலிருந்து விடுபடாதவர்களாகவே இருந்துள்ளனர். இவர்களது பின்வரும் இரு கூற்றுக்களிலும் இருந்து இதைப் புரிந்து கொள்ளலாம். "தேசியவாத இயக்கங்கள் வரலாறு அற்ற" மக்களின் முதலாளித்துவத்தின் சர்வவியாபக எழுச்சியினதும் மாற்றங்களின் போதும் தாக்குப்பிடிக்கும் ஆற்றலில்லாத விவசாய நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பை அடிப்படையாகக்கொண்ட தேசிய சமூகங்கள் மத்தியில் தோற்றுமானால் இவை தனியான தனித்துவங்கள் என்ற வகையில் மறைந்தொழிய வேண்டும்.

"இந்த தேசிய சமூகங்கள் பூர்சுவாக்களின் ஐக்கியப்படுத்தும் தலைமைக்கு வழிவிடுவதற்காக கலாசார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் நிச்சயம் மறைந்தொழிய வேண்டும்.

இங்கு இவர்கள் முன்வைக்கும் முக்கியமான மூன்று அடிப்படைக் கருத்துக்களும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியவையே.

அ) வரலாறு அற்ற மக்கள் கூட்டங்கள்.

ஆ) அரசமைப்பை கட்டமைக்க முடியாத மக்கள்.

இ) அரசியல் கலாசார ரீதியில், மறைந்தொழிய வேண்டிய மக்கள்.

மானுட வரலாற்றில் தோற்றம் பெற்ற எந்த மக்களுக்கும் வரலாறு இல்லாமல் போனதில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர் வரலாறு உண்டு. இது வரை அறியப்பட்ட பெறப்பட்ட, எழுதப்பட்ட வரலாறு, மேலாதிக்கம் செலுத்திய மக்கள் குழுமங்களதும், அதன் தலைமைகளினதுமே. இதுவே மானுட வரலாறாகவும் கணிக்கப்படுகிறது. துரதிருஷ்டவசமாக இம்மேலாதிக்க சக்திகளின், ஒடுக்கு முறையின் கீழ்வாழ்ந்த ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் வரலாறு புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது. இவர்களது வரலாறு வரலாறாக கணிக்கப்பட்டதில்லை. ஏன்? மானுட இயல்பானது தான் வாழும் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ப தன்னை இசைவாக்கமடையச் செய்வதும் மாற்றிக் கொள்வதுமாகும். அதாவது தனக்குத் தேவையெனக் கருதும் போது அரசமைப்பொன்றைக் கட்டமைக்கக் கூடிய சக்தியையும் ஆற்றலையும் கொண்டது. ஆகவே எந்த மக்கள் கூட்டத்தினருக்கும் அரசமைப்பைக் கட்டமைக்கும் ஆற்றல் இல்லை எனக் கூற முடியாது. ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் அரசியல், கலாசார உரிமைகளை மறுத்து மறைந்து போக அழிந்து போக வேண்டுமென நினைப்பது நிர்ப்பந்திப்பது அழிப்பதுதான் காட்டுமிராண்டித்தனமாகும். அடிப்படை உரிமை மீறலுமாகும். இந்த அடிப்படைகளில் மேற்கூறிய மூன்று கூற்றுக்களும் அர்த்தமற்றவை மட்டுமல்ல வலுவிழந்தும போகின்றன.

மார்க்சும் ஏங்கல்சும் ஒரு தேசத்தையும் தேசியத்தையும் கீழ்வரும் கருத்துக்களின் அடிப்படையிலேயே வரையறுக்கின்றனர். அதாவது,

"போட்டியிடும் வர்க்கங்களைக் கொண்ட ஒரு முதலாளித்துவ சமுதாயத்தைக் குணாம்சப்படுத்தும் உள்நாட்டு உழைப்புப் பிரிவினையை அனுமதிப்பதற்கு போதுமான அளவு மிகப்பெரிய ஜனத்தொகை."

"ஒரு நடைமுறைச் சாத்தியமுள்ள அரசுக்கான அடிப்படையை வழங்கக்கூடிய ஒன்றிணைந்த போதுமான அளவுக்கு பெரியதான பிரதேசம்."

இந்த அடிப்படைகளிலேயே, பிரஞ்சு தேசத்தையும் அதன் தேசியத்தையும் ஏற்றுக்கொண்டு பிரஞ்சுப் புரட்சியை ஆதரித்தனர். அதேவேளை, "சிறிய தேசங்களை ஒன்று கலப்பதற்கு வழிவகுக்கும் தேசிய ஒன்றிணைப்பு தான் சமூக முன்னேற்றத்திற்கு ஒரேயொரு நீடித்திருக்கக்கூடிய பாதையாகும்" என்ற நம்பிக்கையில் இப்ரகாம் நிம்னி தனது கட்டுரையில் குறிப்பிட்ட "பிரான்சின் வரம்பற்ற அரசும் அரசில் வாழ்ந்த சிறுபான்மையினரால் மட்டும் பேசப்பட்ட பிரஞ்சு மொழியும் பிரஞ்சு அல்லாத தேசிய சமூகங்களின் நிர்வாக, கலாசார, சுயாட்சி, பிரஞ்சு புரட்சிகர அரசால் அழிக்க நேர்ந்ததை" இவர்கள் இருவரும் ஏற்றுக்கொண்டனர்.

ஒவ்வொரு தேசிய சமூகமும் தனது தேசியம், தனது மொழி, தனது கலாசாரம் தனித்துவமானது, உயர்ந்தது என நினைப்பதில் நம்புவதில் தவறில்லை. ஆனால் தனது தேசியத்தையே, மொழியையே கலாசாரத்தையே மற்றைய தேசிய சமூகங்கள் பின்பற்ற வேண்டும் என நிர்ப்பந்தித்து, திணித்து, மற்ற தேசிய சமூகங்களை அழிக்க முற்படுவது, அவர்களது உரிமைகளை மறுப்பது எந்த அடிப்படைகளிலும் அது ஒரு ஒடுக்குமுறை செயற்பாட்டு வடிவமாகும். பிரஞ்சு புரட்சியும் பிரஞ்சு தேசமும் தன்னுடன் வாழ்ந்த பிற தேசிய சமூகங்களுக்கு இந்த ஒடுக்குமுறையைத்தான் செய்தன. இதை ஏற்றுக்கொண்ட மார்க்சும், ஏங்கல்சும் ஐரிஸ் மக்களின் போராட்டம் தொடர்பான தமது வர்க்க பொருளாதார ரீதியான ஆய்வுரையில்

அ) . சந்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கான போராட்டம் முதலாளித்துவ சக்திகளுக்கிடையே மோதலை ஏற்படுத்துகின்றது.

ஆ) ஒரு தேசமானது மற்றொன்றால் சுரண்டப்படுவதானது தேசியக் குரோதத்தை உருவாக்குகிறது..

இ) இனவெறியானது பாட்டாளி வர்க்கத்தின் மீது பூர்சுவா, வர்க்கம், தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதை சாத்தியப்படுத்தும் சித்தாந்தக் கருவிகளில் ஒன்றாகும்.

என்ற அடிப்படையில், ஐரிஸ் மக்களின் போராட்டம், இங்கிலாந்தின் தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றியின் மூலமே சாத்தியமாகும் என 1860 இற்கு முன் கூறிய கார்ல் மார்க்ஸ், இதன் பின் ஆங்கிலேயப் பாட்டாளி வர்க்கத்தின் விமோசனத்திற்கு அயர்லாந்தினை விடுதலை செய்வது முன்நிபந்தனையாகும் எனக் கூறவேண்டி ஏற்பட்டது. இந்த மாற்றத்தின் விளைவினால் பின்வரும் கருத்துக்களை முன்வைத்தார்.

அ) ஒடுக்கப்படும் தேசத்தின் விடுதலை ஒடுக்கும் - ஒடுக்கப்படும் தேசங்களின் தொழிலாளர் வர்க்கத்தை பொது எதிரியான முதலாளித்துவத்திற்கு எதிராக ஐக்கியப்படுத்துகிறது.

ஆ) ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளர் வர்க்கத்தின் மீது முதலாளித்துவ சிந்தனை மேலாதிக்கம் செய்கிறது. இன்னொரு தேசத்தை ஒடுக்கும் ஒவ்வொரு தேசமும் தனது அடிமைத் தளைகளை தானே உருவாக்குகிறது.

மார்க்சும், ஏங்கல்சும் இந்த அடிப்படைகளில் மட்டுமே ஐரிஸ் விடுதலைப் பேராட்டத்தை ஆதரிக்கவில்லை. இதை விட முக்கியமாக "வரலாற்று பூர்வமான சமூகம்" என்பதாலும் தான் ஆதரித்தனர். ஏனெனில் அவர்களது கணிப்பின்படி "வரலாற்று பூர்வமற்ற சமூகங்களில்" அதேவேளை நடைபெற்ற பல தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்கவில்லை.

இதன்பின் "தேசியம்" தொடர்பான கருத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றவரும் அதற்கு ஒரு அரசியல் பரிமாணத்தைக் கொடுத்தவரும் லெனின் என அரசியல் விமர்சகர்களால் கருதப்படுவது மிகையான ஒன்றல்ல. லெனின், சமூக மாற்றத்திற்கான புரட்சியின் அடிப்படையில் சோஷலிசத்திற்கான முன்நிபந்தனையாகவே தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரித்தார். தேசங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதன் மூலமே பரந்துபட்ட தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தி ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடலாம் எனக் கூறினார். ஆனால், இவர் ஒட்டோ பவரின் "தேசிய குணாம்சம்" என்ற கருத்தாக்கத்தை முழுமையாக நிராகரித்தமையானது தேசியவாத கோட்பாட்டின் எல்லையானது பொருளாதாரவாதத்துடன் மட்டும் நின்றுவிட வழிவகுத்தது.

இதே வேளை, தேசிய இனப்பிரச்சினையில் கூடிய அக்கறை செலுத்தியவர் எனக் கருதப்படும் ஸ்டாலின், தனது தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பிரசித்தி பெற்ற நூலில் பவரின் தேசிய குணாம்ச கலாசார கருத்துக்களை ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் ஸ்டாலினது தேசம் தொடர்பான இறுக்கமான வரையறையானது பொதுவான மொழி, பிரதேசம், பொருளாதார வாழ்க்கை, உளவியல் உருவாக்கம் ஆகியவற்றின் அனைத்துக் குணவியல்புகளும் ஒரு சேர இருக்கும் போது மாத்திரமே நாம் ஒரு தேசத்தைப் பெறுவோம்" எனக் குறிப்பிடுகிறது. இது வரலாற்றில், தேசிய இனப்பிரச்சினை தொடர்பான தீர்வில் பல பிரச்சினைகளை உருவாக்கி விட்டது.

ஏங்கல்ஸின் வரலாறு அற்ற மக்கள் என்ற கூற்றை மறுக்கும் ஸ்டாலின் தனது கருத்துரையில், "முன்பு தேசியப் பிரச்சினையானது வழமையாக முதன்மையான நாகரிகமுற்ற தேசிய இனங்கள், ஐரிஷ், ஹங்கேரியர்கள், போலந்தியர்கள், பின்லாந்தியர்கள், சேர்பியர்கள் மற்றும் சில ஐரோப்பிய தேசிய இனங்கள் சம்பந்தமான பிரச்சினைகளின் ஒரு குறுகிய வட்டத்துள் வரம்புபட்டிருந்தது.

இதுசமதையற்ற மக்கள் சமூகங்களின் வட்டமாகும். இந்தச் சமூகங்களின் கதி குறித்தே, இரண்டாம் அகிலத் தலைவர்கள் ஆர்வங்காட்டி வந்தனர். ஆகவும் காட்டுமிராண்டித்தனமான குரூரமான வடிவத்தில் தேசிய ஒடுக்குமுறையால் துன்புறும் கோடிக் கணக்கான ஆசிய ஆபிரிக்க மக்கள் சமூகங்கள் வழமையாகவே அவர்களின் பார்வைக்கு வெளியில் இருந்தன." எனக் கூறுகின்றார். ஆனால் இதற்கு முரண்பட்ட விதமாக காசக்கின் தேசிய பிரச்சினை தொடர்பாக கூறுகையில், "பின் தங்கிய தேசங்களையும், மக்கள் சமூகங்களையும் உயர்ந்த கலாசாரத்தின் பொதுவான நீரோட்டத்திற்குள் ஈர்த்தெடுப்பதன் மூலமே காசகியத் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்." என்றார்.

அடுத்த இதழில் முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துயரம் மலையளவுதான்: ஆனால் மௌனங்காத்தல் சாத்தியமில்லை



ராதிகா குமாரசாமி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பெண்கள் குறித்த எனது கட்டுரையை மொழி பெயர்த்து ''சரிநிகர்'' இதழ்கள் 112, 113 இல் தொடராக வெளியிட்டமைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் சமூகத்தில் பெண்கள் வகிக்கும் பாத்திரம் குறித்த விவாதத்தின் முக்கிய பகுதியாகத் தெரிவிக்கப்பட்ட எனது கருத்துக்களுக்கு எதிர்வினையாகத் தெரிவிக்கப்பட்டவற்றையும் நான் வரவேற்கிறேன். ஆயினும், எஸ்.ஜி. ராகவன் போன்றோர் கூறும் சில கூற்றுக்கள் மற்றும் கருத்துரைகள் எனது வாதத்தைப் பாரதூரமாகக் குறை கூறுவதால் நான் இக்கலந்துரையாடலில் மீண்டும் குறுக்கிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மேலும் எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய விழுமியங்கள் மற்றும் கருத்துக்களுக்காகப் போராடி முன்செல்லும் ஒரு கருத்து மோதல் காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம் என்பதும் எனது எண்ணமாகும்.

இன்றைய அரசியல் போராட்டம் தமிழ் மக்களுக்கு நீதி கிட்ட வேண்டும் என்ற நோக்கத்துக்காக மட்டுமன்றி ஜனநாயக விழுமியங்கள் மற்றும் சகல மக்களினதும் மனித உரிமைகள் என்பவற்றுக்காகவும் இடம் பெறும் ஒன்றாகும். எங்களில் அநேகரைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டம் சர்வதேச மனித உரிமைகளில் அடங்கியுள்ள விசாலமான விழுமியங்களுக்கான அர்ப்பண பொறுப்புணர்விலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒன்றாகும். தமிழினத்தை வழிநடத்தும் அபிலாஷை கொண்ட எந்தக் குழுவும் இந்த அபிப்பிராயத்தின் காத்திரத்தைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். தமிழ் மக்களுக்கு நீதியென்பது தமிழினத்தினுள் மனித உரிமைகளை மதிப்பதை (ஆகவே பெண்களின் உரிமைகளை மதிப்பதை) உள்ளடக்குதல் வேண்டுமென்பதைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். தமிழினத்தின் அரசியல் தலைவர்கள் வெறுமனே தாங்கள் ஒரு அடக்குமுறை வரலாற்றை அனுபவித்தவர்கள் என்ற காரணத்துக்காக தாம் மனித உரிமை மீறல் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்களென்று நினைத்துக் கொள்ளக் கூடாது. இரண்டாம் உலக மகாயுத்த காலகட்டத்தில் யூத மக்கள் சொல்லொணாத் தொடர்வதைகளை அனுபவித்தனர். ஆயினும் அதற்காக பலஸ்தீனியர்களை ஒடுக்குவதற்கு யூத அரசியல்தலைவர்களுக்கு உரிமையுண்டென்று வாதிடல் முடியாது. மானிடத் துயர்கள் குறித்த விடயத்தில் தமிழ் மக்கள் ஏகபோகம் வகிக்கின்றனர் எனக் கூறமுடியாது. வரலாற்றிலிருந்து நாம் கற்க வேண்டும். இத்தகைய கற்றலில் ஒரு தெளிவான பாடம் முடிவுகள் வழிவகைகளை நியாயப் படுத்துவதில்லை என்பதாகும். வளங்களைத் திரட்டி ஆற்றுப்படுத்துதல் மற்றும் மோதல்கள் காலகட்டத்தின் போது மனித உரிமைகளை உதாசீனஞ் செய்யும் அரசியல் இயக்கங்கள் பதவிக்கு வந்த பின்னர் அவற்றை மதிக்கும் என்பது வெறும் கனவாகும்.

அடிப்படையாக நோக்குமிடத்து ராகவன் அவர்கள் எனக்குச் சொல்ல முயலுவது - 'தமிழ் மக்கள் கொடுமைகளுக்கு முகம் கொடுப்பதால் மௌனமாயிருங்கள்' என்பதாகும். அவர்கள் மலையளவு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்பது உண்மையாகும். ஆயினும் எமது மனிதாபிமானத்தை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நேரமும் இதுவே ஆகும். இப்படியான சந்தர்ப்பங்களே நாம் தெளிவாகப் பேசுவதையும் எமது அரசியல் தலைவர்கள் தமது நீதிக்கும் பழிவாங்குதலுக்குமான அதீத ஆசையில் அடிப்படை மனித விழுமியங்களைத் துவம்சம் செய்வதைத் தடுப்பதையும் அவாவி நிற்கின்றன. நான் முன்பே குறிப்பிட்டது போன்று அவர்கள் சர்வதேச மனித உரிமைகள் அபிப்பிராயத்தின் காத்திரத்தை உணருதல் வேண்டும். ஒரு தமிழ் மனிதாபிமானத்தின் தெளிவான குரல் அவர்களின் செவிகளில் ஒலித்தல் வேண்டும்.

எனது கட்டுரை குறித்த கருத்துக்கள் சம்பந்தமாகச் சில அடிப்படை விடயங்களுக்கு மீள விரும்புகிறேன்.

1. இக்கட்டுரைக்குப் பிரதி விளைவுப் பங்களிப்பு நல்கியோர் அனைவருமே ஆண்களாகத் தென்படுகின்றனர். ஒரு பக்கத்தில் ஆண்டாண்டு காலமாக நிலவி வந்த பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கும், மறுபுறத்தில் இராணுவ உத்தியில் பெண்களை நினைத்தவாறு உபயோகப்படுத்தும் ''தீவிரவாத இராணுவ மயப்படுத்தலை'' நியாயப்படுத்துவதற்கும் முயலும் இவர்களின் குரல்கள் சில நேரங்களில் தமிழ்த் தந்தை வழிக் குடும்ப அமைப்பின் கீறல் விழுந்த இசைத்தட்டுக் குரல்களைப் போல் ஒலிக்கின்றன. பெண்களும் அபிப்பிராயம் தெரிவித்தால் சுவாரசியமாக இருக்கும்.

2. இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதி கிட்ட வேண்டுமெனில் வன்முறைப் போராட்டமே ஒரேயொரு சட்ட நிலைத் தகவுள்ள வழியென்று எஸ்.ஜி.ராகவன் அவர்களின் இரு பதில் கட்டுரைகளும் எதுவித கேள்விக்குமிடமின்றி ஏற்றுக்கொள்வது போலத் தோன்றுகிறது. ஆகவே பெண்களையும் இதனுள் கொண்டு வருதல் இந்த எடுகோளின் ஒரு விஸ்தரிப்பு ஆகும். ஆயுத மோதல்கள் குறித்த சகல மனிதாபிமானச் சட்டங்களுக்கும் எதிரானதாக இருந்த போதிலும், சிறுவர்களை இதனுள் கொண்டு வருதலும் இந்த எடுகோளின் தர்க்க ரீதியான ஒரு விஸ்தரிப்பேயாகும். வன்செயலின் உபயோகமும், இராணுவ மயப்படுத்துதலும் தமிழ் மக்களைச் சொந்த நாட்டில் அகதிகளாக்கி வெளிநாடுகளில் அவர்களை வேண்டத்தகாத வந்தேறு குடிகளாக்கியுள்ளதென்று நான் கருத்துச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். எந்த வடிவத்திலான முரண்பாட்டையும் தீர்ப்பதற்கு பலாத்காரத்தை வழிமுறையாகப் பயன்படுத்துவதற்கு நான் உடன்பாடில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இதுவே என் வாதத்தின் அடிப்படை நிலையாகும். எனது கலந்துரையாடல்களுக்கு அடிநாதமாக விளங்கும் நம்பிக்கையுமாகும்.

3. ராகவன் அவர்கள் தனது கூற்றை மறுத்து, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினுள் பெண்கள் சமமாக நடத்தப்படுவதாகக் கூறுகின்றார். தமிழீழ விடுதலைப்புலிகளின் உயர் இராணுவ மற்றும் அரசியல் மன்றங்களில் அங்கத்தினராயுள்ள பெண்கள் எத்தனை பேர்? உண்மையில் தீர்மானங்களைச் செய்வோர் யார்? இராணுவ முகாம்கள் மீதான தாக்குதல்களில் முதல் அலையாகவும், துப்பாக்கித் தீனியாகவும் பயன்படுவோரில் பெண்களின் தொகை எப்பொழுதும் விகிதாசாரமற்ற முறையில் இருப்பது ஏன்? பெண்கள் தீர்மானங்களை எடுப்பதில் சமத்துவம் பெற்றோராய்த் தோன்றவில்லை. வேறு ஒருவரின் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோராகவே காட்சியளிக்கின்றனர்.

4. தனிப்பட்ட சில இளவரசிகளுக்கு இராணுவப் பயிற்சியளிக்கப்பட்ட ஒரு சில தொடர்பற்ற சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும் சங்க கால இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்ற ராகவன் அவர்கள் கன்னிப் பெண்கள் எதிரியுடன் போர் புரிவதற்கென உண்மையில் ஒரு முறைமை ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஒரு முன்நிகழ்வைக் கூற முடியுமா? இது ஒரு நவீன காலப் புதிது புனைதல் என்பதை அவர் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

5. தமிழரின் பாரம்பரிய மரபுரிமை பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை அம்சங்களைக்கொண்டுள்ளதென நான் வாதிப்பது உண்மையாகும். பெண்களை விடுதலையாக்கிய சில நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் எடுத்துள்ளார்கள் எனக் கூறுவதும் உண்மையாகும். ஆயினும், கொலைக்குத் தயாராக ஆயுதமேந்திய கன்னியாகச் சித்திரிக்கப்படும் புதிய தமிழ்ப் பெண் மனித உரிமைகளுக்கும் பெண்ணியல்வாத தத்துவம், நடைமுறைகளுக்கும் பாரதூரமான பிரச்சினைகளை ஏற்படுத்துகிறாள் என்னும் கருதுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். ராகவனைப் போல் இந்த வாதத்தில் எதுவித முரண்பாடோ தெளிவின்மையோ எனக்குத் தென்படவில்லை.

6. (துர்க்கை தனது யுத்தங்களில் செய்தது போன்று) பெண்கள் புரளும் கூந்தலுடனும், அணிமணிகளுடனும் யுத்தத்துக்குச் செல்ல வேண்டுமென்று நான் கூறவில்லை. என்னைப் பொறுத்த வரையில் பெண்கள் அறவே யுத்தத்துக்குச் செல்லாதிருந்தால் நன்றாக இருக்கும். அதுவே கட்டுரையின் முழுக் கருப்பொருளாகும். யுத்தத்துக்குச் செல்லுமாறு பலவந்தப்படுத்துவதனால் அவர்கள் தமது பெண்மையைக் கைவிடும் பலவந்தம் ஏற்படுகின்றது. பெண்ணியல் தத்துவார்த்தவாதிகள் 'ஆக்கிரமிப்பு' மற்றும் 'தலைமைப்படி முறை குறித்த ஆண் ஆதிக்கவாத விழுமியங்கள்' எனக் கூறுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு பலவந்தப்படுத்தப்படுகின்றனர். பெண்மை பெண்களை 'ஊட்டிவளர்ப்போராகவும், 'வாழ்வளிப் போராகவும்' ஆக்குகிறது. ஆண்மை ஆக்கிரமிப்பைக் கோரியும் வீரச்சாவைக் கொண்டாடியும் நிற்கிறது. ஆணின் பாத்திரத்தினுள் பெண்களை வலிந்து திணிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்ச் சமுதாயத்தின் பெண்மை விழுமியங்களாக அழைக்கப்படும் பேணிப் பாதுகாத்தல் கருணை மற்றும் மேலும் முக்கியமாக மனித உயிரின் புனிதத்தை மதித்தல் போன்றவற்றை அவர்களிடமிருந்து திருடி விடுகின்றனர்.

7. பாலியல் குறித்த எனது விவாதங்களுக்கு எதிராக, ராகவன் அவர்கள் ''கட்டற்ற பாலியல் உறவு'' எனும் விடயத்தைக் குறிப்பிடுகிறார். இது பெண்களின் உரிமைகளுக்காக போராடும் பெண்களை கேவலப்படுத்த காலாகாலமாக உபயோகப்பட்டுவரும், வெட்கப்பட வேண்டிய ஆணியல்வாத நடைமுறையாகும். பெண்களின் பாலியல் குறித்த பயம் ஆபிரிக்காவில் சில பகுதிகளில் பெண்களின் பாலியல் உறுப்புக்களை சிதைப்பதற்கும் உலகில் எஞ்சிய பகுதிகளில் பெண்களை அடிமைத்தளையில் வைத்திருக்க உதவும் சமூக வழக்கங்கள், நடைமுறைகளை அங்கீகரிப்பதற்கும் இட்டுச் சென்றுள்ளது. இன்று ஒரு பெண்ணின் பாலியல் உரிமையும், அவளின் இனபெருக்க உரிமைகளும், அவளின் மனித உரிமைகளும் முக்கிய அம்சங்களாகக் கணிக்கப்படுகின்றன. இது எனது கண்டுபிடிப்பு அல்ல. ராகவன் அவர்கள் 1995 பீஜிங் நடவடிக்கை மேடை அறிக்கையை வாசிப்பதோடு தற்போதைய சர்வதேச போக்குகளையும் அறிதல் வேண்டும். அவரால் தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாடு என அழைக்கப்படும் பலவந்த ஆட்சேர்ப்புக்கும் பின்னர் இடம் பெறும் விடயம் இராணுவ வாதிகளுக்கு விளங்கும் ஒன்றாக இருக்கக்கூடும். ஆனால் சமூகத்தில் பெண்கள் தமது உரிமைகளை பிரயோகிப்பதையும், உணர்வியல் மற்றும் பாலியல் அனுபவங்களை துய்ப்பதையும் தடுப்பதற்கு பொதுவாக கூறப்படும் சாட்டு ''கட்டுப்பாடு'' என்பதாகும்.

8. நான் கருத்துரைகளை வழங்குவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலோ, கிழக்கிலோ வாழ வேண்டுமென்று ராகவன் அவர்கள் ஆலோசனை கூறியுள்ளார். சந்தேகத்திற்கு இடமின்றி இப்பிரதேசத்தில் வாழும் தமிழ்ப் பெண்கள் எதிர்நோக்கும் உண்மையான நெருக்கடி குறித்து நான் ஆழமாக அறிந்துகொள்ள இது உதவும். ஆயினும், ''காட்சிக் கோலம்'' என்பது ஒரு சிக்கலான விடயமாகும். சில நேரங்களில் யுத்தப் பிராந்தியத்தில் வாழ்வது அறிவை ஆழமாக்குவதற்கு உதவியற்ற ஒன்றாகவும் இருக்கலாம், நிலைமைகளை பகுத்தாராய்வதில் ஒருவரில் இயலுமையை மழுங்கடிப்பதாகவும் இருக்கலாம். சமாதான மற்றும், நல்லிணக்கக் காலத்தில் பாரிய சந்தர்ப்பங்கள் மறைக்கப்பட்டு ஒருவர் ''பாதுகாப்பரண்'' அல்லது ''கிணற்று தவளை'' மனப்பான்மையையும் அபிவிருத்தி செய்து கொள்ளக்கூடும். யுத்தப் பிராந்தியத்திலுள்ள எமது சகோதர, சகோதரிகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டும். அதேவேளையில் அவர்களும் எமது கருத்துரைகளும் மற்றும் கணிப்புகளிலிருந்தும் பயன்பெறுதல் கூடும்.

9. ராகவன் அவர்களின் வாதங்கள் மற்றும் ''திவயின'', ''லங்காதீப'' செய்தித்தாள்களில் எனது கட்டுரையின் மொழிபெயர்ப்புகள் இரண்டிலுமே கலாசாரப் பன்மைத்துவம் குறித்த எனது பகுதி பூரணமாகவே உதாசீனஞ் செய்யப்பட்டுள்ளது. ஒரு வகையில் பார்த்தால் எனது வாதத்தின் மையப்புள்ளியே இக் கலாசாரப்பன்மைத்துவம் எனலாம். அதிகாரப் பகிர்வு மற்றும் இனப்பிரச்சினைக்கு ஒரு சமஷ்டித் தீர்வு என்பவற்றுக்காக நான் வாதாடி வந்துள்ள போதிலும், சில தமிழ் அரசியல் தலைவர்களின் ''கலாசார ஒருமைத்துவம்'' என்னைக் கவலைக்குள்ளாக்குகின்றது. மனித உரிமைகளுக்காகவும் பன்மைத்துவத்துக்காகவும் போரிடும் அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட எம்மைப் போன்றவர்களுக்கு இனத்துவப் பெருமை மற்றும் தேசிய சுயநிர்ணயம் என்பவற்றை விட முக்கியத்துவம் கூடிய உலகளாவிய விழுமியங்கள் உள்ளன. இலங்கையை நோக்கினாலும் சரி, முழு உலகையும் எடுத்துக் கொண்டாலும் சரி இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனித உரிமைகளை ஈட்டிக் கொள்வதற்கு எதிராகப் பெரும் தடைக்கற்களாக உள்ளவை மத, இனத்துவ மற்றும் தேசியவாதத் தத்துவார்த்தங்களே. இந்த யதார்த்த நிலையை ராகவனோ அல்லது பெயர் அறியாத எனது சிங்கள மொழி பெயர்ப்பாளர்களோ எதிர்நோக்க விரும்பவில்லையெனத் தோன்றுகிறது.

10. இறுதியாக ராகவன் அவர்கள் என்னை ஒரு புத்தகப் பூச்சியென ஒதுக்க முயலுகின்றார். ஆம், இவ்விடயத்தில் எனக்கு எதிர்வாதம் இல்லை. நான் புத்தகங்களை உண்மையில் நேசிக்கிறேன் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

www.tamilarangam.net



# கறுப்புப் பிசாசுகளும் அமெரிக்காவும்





**இந்தியாவின் பங்கு பற்றிய எதிர்பார்ப்புகள்:**

1983 ஜூலையில் நடைபெற்ற இனக்கலவரத்தின் தாள முடியாத துயரத்தைத் தொடர்ந்த சில வாரங்களில் இலங்கைத் தமிழர்களின் பெரும்பகுதியினர் தமது பாதுகாப்பிற்கு இந்தியாவையே நம்பியிருந்தனர். முதலில் தனது வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவையும் பின்னர் இலங்கை அரசுக்கும் தமிழ் பிரதிநிதிகளுக்குமிடையே சமரசத் தீர்வை ஏற்படுத்து முகமாக தனது சிறப்பு தூதுவரான கோபாலசாமி பார்த்தசாரதியையும் இலங்கைக்கு அனுப்பியதன் மூலம் இந்தியாவும் இந்த நெருக்கடி நிலைக்குப் பதிலளிக்கவே முனைந்தது. பார்த்தசாரதி அவர்கள் கண்ணியத்துடனும் இனிமையுடனும் கூடிய சிரமமான அறிவார்த்தமான முயற்சிகளை மேற்கொண்டாரென தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நீலன் திருச்செல்வம் 1987ஒகஸ்ட் 16ம் திகதிய சண்டே டைம்ஸ் பத்திரிகையில் பாராட்டியிருந்தார். ஜனாதிபதி ஜயவர்த்தனாவுடன் கலந்தாலோசித்து பார்த்தசாரதி அவர்கள் வரைந்த திட்ட ஆலோசனைகளின் சாராம்சம் ஜனாதிபதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்னிணைப்பு 'சி' எனக் குறிக்கப்பட்டு பிரதான ஆவணத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் ஜனாதிபதியின் மனதில் வேறு யோசனைகள் தோன்றி, தான் ஏற்றுக் கொண்ட ஆலோசனைகளுக்கு நேர் மாறாக நடந்து கொள்ள ஆரம்பித்து விட்டார். இந்தத் தீர்வு ஆலோசனைகள் சிற்சில மாறுபாடுகளுடன் அமைந்திருந்த போதிலும், அவை இந்தியாவின் நிலைப்பாட்டையே பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

டிசெம்பர் 19ம் திகதித் தீர்மானங்களிலும் பின்னர் 1987 ஜூலை 29ம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திலும் ஏறத்தாழ ஒரே விதமான சிந்தனைகளே இழையோடி நிற்கின்றன.

இவை அனைத்தும் சட்டம், கல்வி, காவல் ஆகியவற்றில் போதுமான அதிகாரங்கள் கொண்ட மாகாண சபைகளையே கருத்தில் கொண்டிருந்தன. தமிழர்கள் நியாயமாகவே அச்சம் கொண்டிருந்த குடியேற்றத் திட்டங்கள் போன்ற ஏமாற்றப் படக்கூடிய பிரச்சினைகளே ஆலோசனைகளின் போது கணிசமான நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவுக்கும், இலங்கையுடன் சில வெளி உறவுக் கொள்கை சம்பந்தப்பட்ட அக்கறை இருந்தது என்பதை அனைவரும் அறிவர். இந்திய உறவுகளைப் பொறுத்த வரையில் இந்தியா கூட்டுச் சேராக் கொள்கையைப் பின்பற்றியமை இலங்கைக்குச் சாதகமாக இருந்தது. ஆனால் ஜயவர்த்தன அரசு மேலை நாடுகளுக்குச் சார்பான நிலையை எடுத்ததும் இது இலங்கை - இந்திய உறவில் விரிசலை ஏற்படுத்தியிருந்தது. தங்களுக்கு எதிரான சக்திகள் எதுவும் திருகோணமலையில் அமைந்திருந்த இயற்கைத் துறைமுகத்தை பயன்படுத்திக் கொள்ள மாட்டாது என்பதை இந்தியா உறுதிப்படுத்திக்கொள்ள முனைந்தது. ஆனால் இப்போது இவை குறித்து அதிகம் கவலை கொள்ளவில்லை. இந்தியா தங்களை ஒரு நாளும் கைவிடமாட்டாது என்று தமிழர்கள் உறுதியாக நம்பினர். இந்தக்கட்டம் வரை இந்தியாவின் முயற்சிகள் குறித்து பாராட்டு வார்த்தைகள் மட்டுமே கூறப்பட்டன.

1983 ஜூலைக்குப் பின்னர் அகதிகளுடன் சேர்ந்து போராளிகளும் பெருந்தொகையில் தமிழ்நாடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். இப்போராளிகள் பயிற்சி பெறும் நோக்கத்திற்காகவே தமிழகம் சென்றனர். பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் பட்சத்தில் இந்தியா பாவிக்க முனைந்த இரண்டாவது தளமாக இது இருந்தது. இந்தத் தளம் எவ்வாறு கையாளப்பட்டது என்பதிலிருந்து தான் இன்றைய பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன.

பார்த்தசாரதி அவர்களின் திட்ட ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டதன் பிற்பாடு 1984 ஜனவரியில் லலித் அத்துலத்முதலி புதிதாக அமைக்கப்பட்ட தேசியபாதுகாப்பு அமைச்சின் அமைச்சராக நியமிக்கப்பட்டார். பாதுகாப்புக்கான செலவீடு சடுதியாக 1500கோடி ரூபா என்ற அளவுக்கு அதிகரித்தது. இது இலங்கையின் தேசிய வரவு செலவு திட்டத்தில் பதினைந்திலிருந்து இருபது வீதமாகும். தமிழர்களின் பிரச்சினைக்கு இராணுவரீதியான தீர்வு காணும் புதிய முயற்சியில் மேற்கு நாடுகளுடன் புதிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இலங்கை மேற்கத்தைய வல்லரசுகளின் பக்கம் நகர்ந்து கொண்டிருந்தது வெகு விரைவிலேயே தெளிவானது. 1970ல் இலங்கை இஸ்ரேலுடன் தூதரகத் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டிருந்த போதிலும் 1984ல் இஸ்ரேலிய நலன்களுக்கான பிரிவு ஒன்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகக் கட்டிடத்தில் நிறுவப்பட்டது.

இரகசியமான உளவு வேலைகளில் நிபுணத்துவம் கொண்ட இஸ்ரேலிய ஏஜென்சிகளான மொசாட், ஷின் - பெட் ஆகியன இலங்கை இராணுவதற்கு உதவ ஆரம்பித்தன. (1986 மே மாதம் வெளியான இஸ்ரேலிய வெளி உறவுகள் என்ற சஞ்சிகையில் ஜேன் ஹண்டர் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி) பிரிட்டிஷ் பாதுகாப்பு நிறுவனமான கே.எம்.எஸ். எனப்படும் கீனி மீனி சேர்விஸஸ் இலங்கையில் பேர் போன பயங்கரமான விசேஷ அதிரடிப்படை (எஸ்.டி.எப்)க்குப் பயிற்சி வழங்க முன்னாள் எஸ்.ஏ.எஸ். அமைப்பானது ஆட்களைத் தந்து உதவியது. இது ஒரு தனியார் நிறுவனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான வெறும் ஒரு வர்த்தக ரீதியான ஏற்பாடு தான் என்கிற பிரிட்டிஷ் அதிகாரிகளின் வாதம் வெறும் சம்பிரதாயத்துக்காக என்றே கருதப்பட்டது. இலங்கை இராணுவத்தின் கறுப்புச்சீருடை தரித்த கருஞ்சட்டைப் பிரிவிற்கும் ஊர்காவல் படைக்கும் பாகிஸ்தானிலும் இலங்கையிலும் பயிற்சி வழங்குவதில் பாகிஸ்தான் பயிற்சி நிபுணர்கள் ஈடுபட்டனர்.

கறுப்புப்பிசாசுகள் என்ற பெயரில் பிரபலப்பட்டிருந்த இந்தக் கருஞ்சட்டைகள் தமிழர்களை விரோதிகள் என்று கருதும் அடிப்படையிலேயே பயிற்சி அளித்தது. அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்த திருகோணமலை மாவட்டத்தில் இருந்த தமிழ்க் கிராமங்கள் பூண்டோடு அழிக்கப்பட்டதிலிருந்து இது தெளிவானது.

இந்த ஏற்பாடுகளில் எல்லாம் அமெரிக்கா வகித்த பங்கு மிகவும் முக்கியமானது. பின்னாளில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அமெரிக்க தூதராக நியமிக்கப்படவிருந்த ஜெனரல் வெர்னன் வால்டர்ஸ் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகனின் தூதராக 1984 டிசெம்பரில் கொழும்பிற்கு வருகை தந்து ஜனாதிபதி ஜயவர்த்தனவுடனும், லலித் அத்துலத்முதலியுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார் என்பது தெரியவந்தது. இந்தியா தமிழ்ப் போராளிகளுக்குப் புகலிடம் வழங்கிய நிலையில் 1984லிருந்து 1987ம் ஆண்டு நடுப்பகுதி வரை இந்தியாவுக்கும் மேற்கத்தைய நலன்களுக்கும் இடையிலான ஒரு மறைமுகப்போர் இலங்கையில் நடந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. இந்தக் காலகட்டத்தில் இலங்கை அரசு உருவாக்கிய பரா இராணுவப் படை பல்கிப் பெருகி தன்னளவில் தீவிரமடைந்தது.

வரும்..

# திருமலை: சமுர்த்தி நியமனத்தில் குழறுபடி?

திருகோணமலை மாவட்ட சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் 97பெப்.18ம் திகதியன்று திருமலை நகராட்சி மண்டபத்தில் சமுர்த்திப் பிரதிப் பணிப்பாளர் நடேசராசா அவர்களினால் வழங்கப்பட்டது. இம்மாவட்டத்தின் 11 பிரதேச சபைகளிலும் மொத்தமாக 230 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் தமிழர்களுக்காக 81 பிரிவுகளும், முஸ்லிம்களுக்காக 76 பிரிவுகளும், சிங்களவர்களுக்காக 73 பிரிவுகளும் உள்ளடங்குகின்றன.

இவ்விபரம் தொடர்பான பட்டியல் பின்வருமாறு:-

| பிரதேசங்கள் | தமிழர்கள் | முஸ்லிம்கள் | சிங்களவர்கள் |
|---|---|---|---|
| பட்டணமும் சூழலும் | 30 | 03 | 09 |
| மூதூர | 22 | 20 | -- |
| கிண்ணியா | 02 | 29 | -- |
| தம்பலகாமம் | 04 | 04 | 04 |
| கந்தளாய் | -- | 03 | 20 |
| குச்சவெளி | 12 | 12 | -- |
| மொறவெவ | 02 | -- | 08 |
| கோமரங்கடவெல | -- | -- | 10 |
| பதவிய ஸ்ரீ புர | -- | -- | 10 |
| சேருவில | -- | 05 | 12 |
| ஈச்சலம்பற்றை (வெருகல்) | 09 | -- | -- |

பெரும்பான்மையினத்தவர்கள் வசிக்கும் பிரதேசத்திற்கும் மற்றும் தம்பலகாமம் பிரதேசத்தின் 04 சிங்கள கி/உத்தியோகத்தர்கள் பிரிவுகளுக்கும் இந்நியமனங்கள் ஏற்கெனவே (பல மாதங்கள் முன்னர்) வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பட்டணமும் சூழலும் மற்றும் கிண்ணியா பிரதேசங்களுக்கான நியமனக்கடிதம் தொடர்பான பெயர்விபரப்பட்டியலின் பிரகாரம் நியமனம் பெறுபவர்களுக்கான கடிதங்கள் பிரதேச செயலாளரினால் (ப/சூழலும்) 96.நவ.15ம் திகதியன்று அனுப்பிவைக்கப்பட்டு பின்னர் அந்நியமனங்கள் இடை நிறுத்தப்பட்டன. ஏற்கெனவே முஸ்லிம்களுக்கான பெயர் விபரங்கள் சம்பந்தப்பட்ட பா.உறுப்பினரினால் சிபாரிசு செய்யப்பட்டு சமுர்த்தி அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அப்பட்டியலில் ஜின்னா நகர் (கி/உ பிரிவு, இல, 244ஒ), வெள்ளைமணல் (கி/உ பிரிவு, இல, 229), நாச்சிக்குடா (கி/உ. பிரிவு, இல, 229 சீ) போன்ற முஸ்லிம்கள் அதிபெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளும் அதற்கான நியமனங்கள் பெறுவோரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. அத்துடன் சோனகவாடி (கி/உ பிரிவு, இல, 242ஏ) பகுதிக்கு எம்.எம்.சாலி என்பவரது பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. (பிரதேச செயலாளரின் கடித இல, டி.எஸ்./ரிஜி/ஏஏ-96.11.15ம் திகதி) மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டிருந்த நியமனப் பட்டியலில் இப்பகுதியில் ஏற்கெனவே சிபாரிசுடன் வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டவருக்குப் பதிலாக இரண்டு தமிழர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதிக எண்ணிக்கையுடன் இரண்டாம் தர நிலைமையில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளானசோனகவாடி, முருகாபுரி (கி/உ பிரிவு, இல, 243 ஜீ - ஜமாலியா பகுதியும்) மற்றும் மட்கோவ் (கி/உ பிரிவு, இல, 244 எம்) ஆகிய பகுதிகளில் முஸ்லிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதையும் காணக் கூடியதாக உள்ளது. இன்னும், பீலியடி (கி/உ பிரிவு, இல, 243 ஜே), கிண்ணியா (கி/உ பிரிவு, இல, 243 பி) மற்றும் மாங்காயூத்து (கி/உ பிரிவு, இல, 243 கே) போன்ற பகுதிகள் முற்றாகவே எவரும் வசிக்காத வெறிச்சோடிய இடங்களாகும்.

ஆரம்ப நியமனப்பட்டியலில் இப்பகுதிகளும் குறிப்பிடப்பட்டிருந்தன. இதே நிலைமையில் காணப்படும் முத்துநகர் கி/உ பிரிவில் 175 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்திருந்தும் ஏனோ ஆரம்பப் பட்டியலில் அப்பகுதி விடப்பட்டிருந்தது. ஆனால் புதிய நியமனப்பட்டியலில் அக்கிராம உத்தியோகத்தர் பிரிவு குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்கு தமிழ்ப் பெண்ணொருவரின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. (நியமனக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது).

இவ்விடயங்கள் அனைத்தையும் கவனத்திற் கொண்ட திருகோணமலை ஸ்ரீ.ல.மு.கா. அமைப்பாளர் ஜனாப் அபூபக்கர் முகம்மது அனஸ் அவர்கள் உடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தது மட்டுமன்றி தமது அதிருப்தியையும் பகிரங்கப்படுத்தினார். 'பழைய' பட்டியலில் காணப்பட்ட பெயர்கள் காலாவதியாகிவிட்டதாகவும், புதிய நபர்களின் பெயர் விபரங்கள் இன்னும் சிபாரிசுடன் தமக்குக் கிடைக்கப் பெறவில்லை' என்பதாகவும் பொருத்தமற்ற சமாதானம் கூறப்பட்டது. ஏற்கெனவே முஸ்லிம்களின் பெயர் விபரங்கள் நஜீப் அப்துல் மஜீட் (பா.உ) அவர்களினால் சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அப்பெயர்களும் முன்னைய நியமனப் பட்டியலில் குறிப்பிடப்பட்டு காணப்படும் போது புதிய சிபாரிசுடன் கூடிய பெயர் விபரங்கள் எதற்காக?

மேலும் ஏனைய பிரதேசங்கள் பாதுகாப்பற்ற நிலைமையில் காணப்படுகின்றது என்ற காரணத்தை முன்வைத்து நியமனங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும் போது, முற்று முழுதாக பாதுகாப்பிற்குள்ளாக்கப்படாத ஈச்சிலம்பற்றை பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு மாத்திரம் எப்படி நியமனங்கள் வழங்க முடிந்தது?

பட்டணமும் சூழலும் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கென வழங்கப்பட வேண்டிய மொத்த நியமனங்கள் 9 ஆகும். ஆனால் முன்னைய பட்டியலின் பிரகாரம் 4 நபர்களுக்கும், தற்போதைய பட்டிலின் பிரகாரம் ஆக

→ 18

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடக்கு-கிழக்கு:
# காணாமற்போவோரும் கரையொதுங்கும் சடலங்களும்

முன்னெப்போதுமில்லாத விதத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் இப்போது பாவனைப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களினூடாக விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தில் ஒழுங்கீனங்கள் உள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கொழும்புக்கும், வெளி இடங்களுக்கும் கொண்டு செல்லப்படுவதில்லை. இது பா.உ. எஸ். சிவதாசனால் பாராளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டது.

பொது மக்கள் சென்று வருவதைக் கட்டுப்படுத்தும் விதத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு வேலியிடப்பட்டும் அருகிலுள்ள பகுதிகள் மண் அணைகளினால் வேறு பிரிக்கப்பட்டுமுள்ளன. அங்கே அடிக்கடி சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கைகளும், கைதுகளும், இளைஞர்கள் பலர் காணாமல் போதலும் தொடர்கின்றன. மனித உரிமைகள் மீறலுக்கான எடுத்துக் காட்டாக அப்பாவிப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், வல்லுறவுகளும் கூடவே வெளிவந்துள்ளன.

சாவகச்சேரியிலுள்ள எழுதுமட்டுவாளில் காணாமற் போனவர்களைத் தேடுகையில் கிடைத்த அடையாளங்காணப்பட்ட சடலங்கள்:-

இராமு மாணிக்கம் (43)
பொன்னு அமிர்தரட்ணம் (33)
கந்தசாமி புலேந்திரராஜா (16)
கந்தையா தியாகராஜா (16)

உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இரு சடலங்கள் அடையாளங் காணப்படவில்லை.

மல்லாகத்தைச் சேர்ந்த எஸ். பாக்கியநாதன் என்பவரும், மாங்குளத்தைச் சேர்ந்த கே. கனகரட்ணம் என்பவரும் 21.11.1996 அன்று கைது செய்யப்பட்டு இதுவரை விடுவிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலுள்ள அச்சுவேலி - பத்தமேனியைச் சேர்ந்த தனுஜா செல்வராஜா (10) என்ற பெண் பிள்ளை இராணுவத்தால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்புத்துறையைச் சேர்ந்த எஸ். பிரதீபன் (20) என்ற மாணவன் பிரத்தியேக வகுப்புக்குச் சென்று விட்டுத் திரும்புகையில் 09.08.1996 அன்று இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருக்கிறார். இன்று வரை அவர் பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

சாவகச்சேரி- மீசாலையைச் சேர்ந்த காசித்தம்பி தர்மதாசன் (20) 16.08.1996 அன்று இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருக்கிறார். இன்று வரை அவர் பற்றியும் எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

சாவகச்சேரியைச் சேர்ந்த தங்கவேலு இராஜேந்திரகுமார் 18.09.1996 அன்று இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் பற்றியும் ஒரு தகவலுமில்லை.

கொழும்புத்துறையைச் சேர்ந்த சிவந்தி ஆறுமுகம் (16) யாழ்ப்பாணத் தபால் நிலையத்துக்கு முன்னால் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் பற்றியும் இதுவரை எதுவித தகவலுமில்லை.

அரசாங்கம் 14,000 தொன் உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க உடன்பட்டிருந்தாலும் இதுவரை 3000 தொன் மட்டுமே அனுப்பப்பட்டது.

யாழ்ப்பான அரசாங்க அதிபர் யாழ்ப்பாணத்தில் 536 பேர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைப் பணிக் குழுவிடம் (HRTF) அறிவித்துள்ளார். எவ்வாறெனினும் 376 பேர் மட்டுமே தம்மால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக இராணுவத் தலைமையகம் அறிவிக்கிறது. மிகுதி 160 பேருக்கு என்ன நடந்தது. அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? எனத் தெரியவில்லை.

23.12.1996 அன்று சாவகச்சேரியில் இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கையொன்றின் போது பொது மக்களில் ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறந்தவர்களது சடலங்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டது.

1996 டிசெம்பர் மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவியது.

சாவகச்சேரி - மறவன்புலவைச் சேர்ந்த சுப்பிரமணியம் தர்மராஜா, (28), சிவபாதம் தனபாலன் (30) ஆகியோர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். பின்பு அவர்களது இறந்த உடல்கள் வீதியோரத்தில் கிடக்கக் காணப்பட்டன.

பருத்தித்துறை - முதலாம் ஒழுங்கையைச் சேர்ந்த செல்வராஜா கோபிராஜ் (18) 21.08.1996 அன்று யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். அவர் எங்கிருக்கிறார் என்பது இதுவரை தெரியாதுள்ளது.

சாவகச்சேரியில் 10.08.1996 அன்று ஆசிரியர்களான அப்பாதுரை ஸ்ரீஸ்ஹரன், சதாசிவம் விவேகானந்தன் ஆகியோர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் ஆசிரியர் சங்கம் இவ்விரு அப்பாவி நபர்களையும் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்குமாறு கோரியுள்ளது.

இராணுவ சிவில் நிர்வாகத்தின் கீழ் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் கடினமானது என அரசாங்க சார்பில்லாத அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

20.11.1996 அன்று 9மணிக்கு மட்டக்களப்பின் விடுவிக்கப்பட்ட பகுதியான செங்கலடியில் படுவான் கரை தமிழ்க் கிராமங்கள் மீது குறி வைத்து எறிகணைத் (ஷெல்) தாக்குதல்களும், ஆகாயத்திலிருந்து குண்டுகளும் போடப்பட்டன.

வாழைச்சேனை - புதுக்குடியிருப்பில் கிராமசேவையாளர் ஒருவருக்குச் சொந்தமான வீடொன்றின் மீது அருகாமையிலுள்ள இராணுவ முகாமொன்றிலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் காரணமாக வீடு பலத்த சேதத்துக்குள்ளானது.

முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண சபைத் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த க.பொ.த. (சாதாரணதர) வகுப்பு மாணவனான தம்பிமுத்து சாந்தலிங்கம் (18) பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டார். அவருடன் கூடச் சென்ற பாதுகாப்புப் படையினர் அவரது வீட்டையும் காணியையும் சோதனையிட்டனர். பின்பு பெற்றோர் முகாமுக்கு வந்து தமது மகனை விடுவிக்குமாறு கோரியபோது பாதுகாப்புப் படையினர் இம்மாணவன் பற்றித் தமக்கு எதுவும் தெரியாதென மறுத்தனர். இன்னமும் அவர் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவு, கொக்கட்டிச்சோலை, இலுப்படிச்சேனை, பாவற்கொடிச்சேனை, தாண்டியடி ஆகிய இடங்கள் மீது 1996 நவம்பர் 19,20ம் திகதிகளில் ஆகாய மார்க்கமாகக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. குடியிருப்பாளர்கள் தமது வீடுகளை விட்டு அகன்று விட்டனர். 12 பேர் காயமடைந்தும், ஐந்து வீடுகள் சேதமாக்கப்பட்டும் உள்ளன.

25.11.1996 அன்று இலங்கை இராணுவம் கிரான் பிரதேசத்தைத் தாக்கத் தொடங்கியது. நாலவர் காயமடைந்தனர். அவர்களில் எஸ். இராமச்சந்திரன் (40) எஸ். இரங்கசாமி (45) ஆகியோர் படுகாயமடைந்தனர். மூன்று பிள்ளைகளின் தந்தையான வர்த்தகர் கந்தையா பத்மநாதன் (38) முஸ்லிம் வாலிபரான மொஹிதீன் பாவா தசீஸ் (22) ஆகிய இருவரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளாகி வைத்திய உதவி எதனையும் வழங்க முடியாததனால் இறந்தனர்.

கிரான் மகா வித்தியாலய ஆசிரியர்
களும், மாணவர்க
டனர். ஆசிரியை
யோகேஸ்வரி கா
வைத்தியசாலையி
வேண்டி ஏற்பட்ட
கானந்த வித்தியா
மோசமாகத் தாக்
காயங்களுக்கும்,
காகவும் சிகிச்சை
யதாயிற்று. அப்பா
60 வயதான எஸ்.
என்பவரும் இராணு
கணைத்தாக்குதலி
பட்டார். பல இ
பெண்களும்
தாக்கப்பட்டனர்.
26.11.1996 மட்டக்
சத்தின் கிரான் கிரா
பலத்த எறிகணை
நடத்தப்பட்டது.
கீழே பெயர்கள்
மட்டக்களப்பைச்
இளம், வயதான '
செய்யப்பட்டு வெ
சாலையில் கடந்த 1
தடுத்து வைக்கப்பட்
1. சிவாஜினி சிவலி
2. மேரிஸ்ரெல்லா
3. இந்திராணி ஐயா
4. பிரேமராணி செ
5. என்.லீலா லக்ஷ்
6. விமலாதேவி ம
27.11.1996 படுவா
சத்தை நோக்கி மட்
முகாம்களிலிருந்
தாக்குதல்கள் நடத்
தீவிரவாதிகள் க
கூறப்படும் மட்டக்
தையைச் சேர்ந்த
உத்தியோகத்தர் ஒ
களஞ்சிய முகாமை
உட்பட ஏழு பேர்
பட்டனர்.
மட்டக்களப்பைச்
ளைகளின் தந்தை
தம்பி குகானந்த
ளைகளின் தந்தை
தம்பி பேரின்பரா
இருவரும் பொலஸ்
சாரினால் கைது
காணாமற் போயுள்
07.12.1996 முதல்
வாகரை பாதை வ
லீடுபடும் பஸ்க
பாதுகாப்புப்
நிறுத்தப்பட்
மட்டக்களப்புப் பி
பாலமீன்மடு, தி
இடங்களில் இரவ
பிடிப்பதைப் பாது
நிறுத்தியுள்ளன.
இராணுவம் ஐந்து
தும் முன்னேறி
சோலை, பழுகாம
அடுத்துள்ள பிர
மேற்கொண்ட ''பா
தல் காரணமாக
சங்களின் குடியிரு
வுப் பொருட்களை
அனுமதிக்கப்பட
டவர்கள் கூட மரு
அனுமதிக்கப்பட
16.12.1996 கொ
யைச்சேர்ந்த விவ
என்பவர் இராணு
கொல்லப்பட்டார்
21.12.1996 இரா
சேனையிலிருந்து
குச் சென்ற
அப்பாவிப் பொது
கேடயங்களாகப்
மட்டக்களப்புப்
வாகரைக் கிராம
னைப் பொருட்
செல்வதை இரா
ளது. அப்பிரதே
உணவு பற்றாக்
யுள்ளது.
19.12.1996 இரா
முகாம்களிலிரு
கணைத் தாக்கு





முல்லைத்தீவுக் கடற்கரையில் கரையொதுங்கிய சடலமொன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ம் தாக்கப்பட்
பான எஸ்.
மடைந்ததால்
அனுமதிக்க
கிரான் விவே
அதிபர் மிக
ப்பட்டதால்
க உடைவிற்
பறவேண்டி
த் தமிழரான
செல்லத்தம்பி
வத்தின் எறி
ல் கொல்லப்
ம் வயதான
டையினரால்

ாப்புப்பிரதே
தை நோக்கிப்
த்தாக்குதல்

ப்பட்டுள்ள
சேர்ந்த ஆறு
ண்கள் கைது
கடை சிறைச்
ாதங்களாகத்
ள்ளனர்.
கம்.
வலிங்கம்.
துரை.
பரத்தினம்.

லிங்கம்.
கரைப்பிரதே
ளப்புப்பகுதி
எறிகணைத்
பட்டன.
தாகக்
ப்பு அரைப்பா
ராம சேவை
ர் கூட்டுறவுக்
ளர் ஒருவர்
கது செய்யப்

சேர்ந்த 6 பிள்
ன இளைய
35), 4 பிள்
ன சின்னத்
(36) ஆகிய
றுவை பொலி
ப்பட்டுக்
னர்.
டக்களப்பு -
ல் சேவையி
அனைத்தும்
டையினரால்

தசத்திலுள்ள
மடு ஆகிய
நரத்தில் மீன்
புப்படைகள்

சைகளிலிருந்
காக்கட்டிச்
றும் அதனை
சங்கள் மீது
மீன்'' தாக்கு
கூறிய பிரதே
ளர்கள் உண
கூட வாங்க
லை. காயப்பட்
வ உதவிபெற
லை.
ட்டிச்சோலை
யான சிவகுரு
தால் சுட்டுக்

வம் வாழைச்
வங்கேணிக்
அவர்கள்
களை மனிதக்
த்தனர்.
தசத்திலுள்ள
க்குப் பாவ
எடுத்துச்
ம் தடுத்துள்
தில் பாரிய
ற தோன்றி

ட்டக்களப்பு
பாரிய எறி
ள் நடத்தப்

பட்டதால் கிரானிலுள்ள வீடொன்றும், சைவ சமயக்கோவிலொன்றும் சேதமாக்கப்பட்டன.

மட்டக்களப்பில் ''பாடும் மீன்'' நடவடிக்கையின் போது இராணுவம் பல வயல் வெளிகளிலுள்ள இரவுக்காவல் குடிசைகளை எரியூட்டியுள்ளது.

அருச்சுணன் சுந்தரலிங்கம்(56) எனப்படும் ஆஸ்துமா நோயாளி வவுனியாவிலுள்ள அகதிகள் முகாமொன்றில் போடப்பட்டார். அவரது மனைவி வேறோர் முகாமில் இருந்தார். அவரது உறவினர்கள் இன்னோர் முகாமில் இருந்தனர். நோயாளிக்கு அருகே இருப்பதற்கு அவரது மனைவியும், உறவினர்களும் செய்த மனுக்கள் எல்லாம் மறுக்கப்பட்டது. இறுதியாக 22.11.1996 அன்று அந்நோயாளி மருத்துவ கவனிப்பேதுமில்லாததால் மரணமடைந்தார்.

மன்னாருக்கான பிரயாணிகள் எதுவித காரணமுமின்றி மூன்று நாட்களுக்குக்கற்பிட்டியில் தாமதிக்கப்பட்ட பின்பே அவர்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக அரசாங்க ஊழியர்களும், ஏனைய தொழிலாளர்களும் பாரிய நடைமுறைக் கஷ்டங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

வவுனியா கோழிக்கூட்டு முகாமைச் சேர்ந்த 10 வயதுப் பிள்ளையான நித்தியானந்தன் கெட்ஷியாவை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல அதிகாரிகள் அனுமதி மறுத்ததால் அச்சிறுமி மரணமடைந்தாள்.

வன்னியிலிருந்து வவுனியாவுக்குள் ஆயிரக்கணக்கானவர்கள் வந்து குவிந்து கொண்டிருப்பதோடு, அரசாங்கம் போதியளவு சுகாதார வசதிகள் இல்லாது அகதி முகாம்களில் தங்குமாறு அவர்களை நிர்ப்பந்திக்கிறது; அவர்களில் அநேகமாக 90%னோர் சுகவீனமடைந்த நிலையிலேயே உள்ளனர்.

அண்மையில் மூன்று பெண் பிள்ளைகளின் சடலங்களைக் கொண்ட சாக்குகள் முல்லைத்தீவுக் கடற்கரையில் கரையொதுங்கின. ஒரு பெண் பிள்ளையின் பள்ளி சீருடையில் சுண்டிக்குளி பெண்கள் கல்லூரிச் சின்னம் காணப்பட்டது. இப்பெண் பிள்ளைகள் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் மாணவர்களெனவும், இவர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டிருப்பர் எனவும் ஊகிக்கலாம். மேலும் பல உருக்குலைந்த அடையாளங்காணப்படாத சடலங்கள் முல்லைத்தீவுக் கடற்கரையில் கரையொதுங்குகின்றன.

வவுனியா அகதி முகாம்களின் சுகாதாரச் சீர்கேடு காரணமாகவும் அளவுக்கதிகமான சன நெருக்கடி காரணமாகவும் டெங்குக் காய்ச்சல் பரவலாம் என அஞ்சப்படுகிறது.

வன்னிப் பிரதேசத்தில் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக பல நோயாளிகள் மரணிக்கிறார்கள். பல நூற்றுக்கணக்கானவர்கள் அக்கராயன், ஒட்டிச்சுட்டான் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகத் தினசரி வரிசையில் நிற்கின்றனர். ஆறுமுகம் சந்திரகுமார் என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பௌதீக விஞ்ஞான பீட (under Graduate பயிலுனர் பட்டதாரி) மாணவன் மலேரியா நோய்க்குட்பட்டு மருந்து இல்லாத காரணத்தால் அதே நோயினால் மரணமானார்.

கிளிநொச்சி விநாயக புரத்தைச் சேர்ந்த கந்தையா ஜெகதீஸ்(21), கந்தையா ஜெகதீஸ்வரன் (20) ஆகிய இரு சகோதரர்களும், கனகபுரத்தைச் சேர்ந்த சசிகலா நடராஜாவும்(19) தாம் விட்டு வந்த வீடுகளைப் பார்த்துவரச் சென்ற சமயம் இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டதால் அம்மூவரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.

திருகோணமலையிலுள்ள லிங்க நகரிலுள்ள 40 தமிழ்க் குடும்பங்கள் அண்மையில் அமைக்கப்பட்ட இராணுவ முகாமுக்கு அருகாமையில் இருப்பதாகக் கூறப்பட்டுப் பாதுகாப்புப் படைகளினால் அவர்களது இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

23.11.1996 திருகோணமலையிலுள்ள உவர் மலையைச் சேர்ந்த பெண்களும், பிள்ளைகளும் கைது செய்யப்பட்டு ஈவிரக்கமின்றித் தாக்கப்பட்டனர்.

திருகோணமலைக்குள் பிரவேசிப்பவர்கள் தேசிய அடையாள அட்டைகளை இராணுவத்திடம் கையளித்துவிட்டு, அவர்கள் வழங்கும் அட்டைகளை நுழை வாயில்களில் உள்ள சோதனைச் சாவடிகளில் கொண்டு செல்லுமாறும் கூறப்பட்டுள்ளது.

திருகோணமலை நகர சபைத் தலைவர் பிரதான மரக்கறிச் சந்தைக் குத்தகையை ஒரு குத்தகைக்காரருக்கு வழங்கியிருந்தார். சிங்கள வர்த்தகர் ஒருவர் சந்தைக் குத்தகை தனக்கே தரப்படவேண்டுமென வலியுறுத்திக் கேட்டுள்ளார். இணைப்பதிகாரியான இராணுவ பிரிகேடியர் ஒருவர் வழங்கப்பட்ட குத்தகையை அவசர காலச் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்துள்ளார். நகர சபைத் தலைவர் சபை வழமையான நிர்வாக நடவடிக்கையினுள் பிரிகேடியர் தலையிட்டதாகக் குற்றஞ் சுமத்தித் தான் இராஜினாமாச் செய்யப் போவதாக அச்சுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மோகனராஜா துரைசிங்கம் (20) ஜேர்மனியில் புகலிடம் மறுக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார். அவர் கொழும்பு விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவர் தற்போது எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரியவில்லை.

1996 டிசெம்பரில் கொழும்பு கொம்பனித்தெருவில் 8 பெண் பிள்ளைகள் உட்படப் பல தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நவகம்புரவில் வாழ்ந்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என் துரைராஜா (67) என்பவர் காணாமற் போயுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

கொழும்பு பம்பலப்பிட்டியில் வாழ்ந்து வந்த ஓய்வுப்பெற்ற இலங்கை மின்சார சபைப் பொறியியலாளரான மகாதேவா அவரது இல்லத்திலிருந்து அடையாளந் தெரியாத நபர்களினால் பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவர் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்பது பற்றியும் தெரிய வில்லை.

காப்புறுதிக் கூட்டுத்தாபன விருது வழங்கும் வைபவமொன்றிற்காக கொழும்புக்கு வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காப்புறுதி முகவர் ஒருவர் வைபவம் நடந்த இடத்திலேயே வைத்துக் கைது செய்யப்பட்டார்.

13.12.1996 இலண்டனுக்குப்பிரயாணம் மேற்கொள்ளத் தேவையான பயண ஆவணங்களுடன் கொழும்புக்கு வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 5பேர் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

[INDEPENDENT REGIONAL ASSOCIATED NETWORK - I.R.A.N.]
***ஜனவரி 1997.***
***தமிழில் சி.செ.ராஜா.***



# மட்டக்களப்பு: மர்மக் கொலைகள்!

கடந்த சில வாரங்களாக இராணுவத்தினாலும், (Counter Subversive Unit) பொலிசாராலும் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான நடவடிக்கைகள் பொது மக்கள் மத்தியிலும் மாண்வர்கள் மத்தியிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நடவடிக்கைகள் 90களில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொலைகளையும், வன்முறைகளையும் ஒத்ததாகவே இருக்கின்றன. கல்லடி சிவானந்த பாடசாலை மாணவன் மகாராஜா ''சித்தா'' குழுவினரால் மிகவும் கொடூரமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறான். கிறிஸ்தவர்களின், முட்டையடித் திருநாளன்று உதய் சேகரன் என்ற 17வயது மாணவனும் ஜெயந்திபுர பொலிசாரால் சுட்டுக் கொல்லப்படடான். இம்மாணவன் சம்பவ தினம் பாடசாலையிலிருந்து 10.45 மணியளவில் வீட்டுக்கு வந்து இவனது வீட்டிலிருந்து 300யார் தூரமுள்ள சேனைத் தெருவிலுள்ள சினேகிதன் வீட்டுக்குச் செல்லும் போது ஜெயந்திபுர பொலிசாரால் வழிமறிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் சேட்டைக் கழற்றி, கைகளை கட்டி கொடூரமான முறையில் தாக்கியுள்ளனர். தங்களிடமுள்ள ஆயுதங்களைக் கொடுத்து வைத்துக் கொள்ளும்படி கூறியபோது இம்மாணவன் மறுத்திருக்கிறான். அதன் பின் முழங்காலில் இருத்தி, முகத்தை கறுப்புத் துணியால் கட்டிய பொலிசார் தோள் புயத்தில் சுட்டு தகப்பனாரின் பெயரைக் கேட்டனராம். அவனும் அரைமயக்கத்தில் தகப்பனாரின் பெயரைக் கூறியபடி 'சுடவேண்டாம், பள்ளியில் படிக்கிறன் நான்' என்று சொல்லிய பின் மீண்டும் இரண்டு வெடிச்சத்தம் கேட்டது. இந்த இடத்தில் பிரதீபன் என்ற ஒரு அப்பாவி இளைஞனும் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த மாணவனின் மரணச்சடங்கு நடந்த வீட்டுக்கு சென்ற பொலிஸ்கோஷ்டி ஒன்று அங்கு வந்திருந்தவர்களை தாக்கியுள்ளது. உதயசேகரனின் கொலையைக் கண்ணால் கண்டவர்கள் கூட வாய்விட்டு சொல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

இது போன்ற ஒரு நிகழ்வு மார்ச் 7 அன்று அதிகாலை 5.45 மணியளவிலும் நடைபெற்றது. மட்டக்களப்பு பாரதி வீதியைச் சேர்ந்த கோமஸ் அன்ரன் ராஜ் என்ற 24வயது இளைஞன் பார் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டான். இவன் வழமை போல் தனது வீட்டிலிருந்து தனது வியாபாரஸ்தாபனத்துக்கு செல்லும் போதே சுட்டுக் கொல்லப்பட்டான். இவ்விளைஞன் கொண்டு சென்ற பத்தாயிரம் ரூபா பணமும் கைச்சங்கிலி, மணிக்கூடு, மாலை என்பவற்றையும் காணவில்லை என்றும் சைக்கிள் மாத்திரம் கிடைத்தது என்றும் பெற்றோர் கூறுகின்றனர். சம்பவதினம் இவ்விடத்தில் இராணுவத்தினரே கடமையில் ஈடுபட்டிருந்தனர். இச்சம்பவம் வவுணத்தீவு தாக்குதலின் எதிரொலியாகவும் இருக்கலாம் என மக்கள் கூறுகின்றனர். இவ்வாறாக மர்மமான முறையில் கொலைகள் இடம்பெற்று வருவது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் ஒரு பெண்ணை புளொட் இயக்கத்தைச் சேர்ந்த குயில் என்பவன் நகரில் வைத்து ஓட்டோவில் கடத்திச் சென்று பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ளான். தன்னை இந்தப்பெண் காதலிக்கவில்லை என்பதற்காக அவளை மானபங்கப்படுத்தி அவளது உள்ளாடைகளை வீதிக்கு கொண்டு வந்திருக்கிறான். இவ்வாறான வெறிபிடித்தவர்கள் ஆயுதங்களுடன் இருப்பதனால் வெளியில் யாரிடமும் சொல்ல முடியாத நிலையில் மக்கள் இருக்கின்றனர். மனித உரிமைகள் மீறப்படுவதைக் கண்டித்தும் பெண்களின் மீதான வன்முறை களை எதிர்த்தும் எத்தனையோ பெண்களின் அமைப்புகளும், கூட்டமைப்புகளும் மட்டக்களப்பில் இயங்கி வருகின்றன. ஆனால், தற்போது குறித்த பெண் பாதிக்கப்பட்டது தொடர்பாக இந்த அமைப்புகள் கூட மௌனிகளாகவே இருக்கின்றன.

கடந்த ஒரு மாத காலமாக தோட்டமுனைப் பாலத்தின் இராணுவச் சோதனைச் சாவடியில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் இராணுவத்தினர் வீதிச் சோதனைக் கடமைகளில் ஈடுபடுத்துகின்றனர். புலிகள் மாணவர் சீருடையில் பாடசாலை நேரத்தில் வருவதால் அவர்களை இனம் காண்பதற்காக நகரில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஒவ்வொரு ஆசிரியரும் இரு மாணவர்களும் காலை 7.15ல் இருந்து ஒன்பது மணிவரை கடமையில் ஈடுபடவேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் கல்விக்கும் ஆசிரியரின் கடமைக்கும் மேலதிகமாக, இந்தச் சேவையையும் செய்ய வேண்டும் என்று அதிபர்களும் கல்விப்பணிப்பாளரும் கூட பணித்துள்ளனர்.

இதேபோன்று மண்முனைப் பாதையில் பயணம் செய்யும் பொது மக்கள் அங்கிருக்கும் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். என்பவற்றிலிருந்து பிரிந்து இராணுவத்திற்கு உதவி செய்பவர்களாக காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கும் சின்னவர், இன்பன் என்பவர்களின் தொல்லைகளுக்கும் அடி உதைகளுக்கும் ஆளாகவேண்டியிருக்கின்றனது. இதனால் நகரிலிருந்து படுவான்கரை பகுதிக்குச் செல்லும் அரச ஊழியர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்களும் இப்பகுதிக்குச் சென்று தங்களின் கடமைகளை செய்ய முடியாது உள்ளது. இன்றைய நிலைமையில் மட்டக்களப்பைப் பொறுத்தமட்டில் எந்த ஒரு பிரச்சினையையும் தட்டிக்கேட்க முடியாத நிலையிலும், வாய்விட்டு சொல்ல முடியாத நிலையிலும் ஆயுதபலமே மேலோங்கி உள்ளது.


*''கண்டவர் சொல்லிடார் - தட்டிக் கேட்டவர் தப்பிடார்''*

**கரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 26




மூலம்: டொக்டர் ஜெயிம் ஜி ஜினோல்ட்
தமிழில் - அபேணி

### துயரமான பாரம்பரியம்

சகோதரர்களுக்கிடையே பொறாமை நிலவுவது ஒரு பழைமை வாய்ந்த பாரம்பரியமாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் முதலாவது சகோதரப் படுகொலையாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது காயின் தனது சகோதரனான ஆபேலைக் கொன்ற சம்பவமாகும். இந்தக் கொலைக்கான காரணம் தாயாதிச் சண்டையாகும். ஜாக்கோப் தனது சகோதரனான ஈசாவின் கையால் கொல்லப்படுவதிலிருந்தும் தப்பிக் கொண்டார். அதுவும் வீட்டை விட்டு வெளியேறி ஒரு அந்நிய நாட்டில் ஒழிந்து வாழ்வதன் மூலமே அவரால் தப்பிக் கொள்ள முடிந்தது. ஜாக்கோப்பின் புத்திரர்களோ தங்கள் இளைய சகோதரனான ஜோசேப்பின் அதிர்ஷ்டம் குறித்துப் பொறாமை கொண்டவர்களாக அவன் மீது விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை, ஆயுட் தண்டனையாக மாற்றப்பட்டு, பாலைவனத்தில் போய்க் கொண்டிருந்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்து விடுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அதற்கு முன்பாக பாம்புகள் நிறைந்த கிணற்றினுள் வீசினார்கள்.

பொறாமையின் இயல்பு, தோற்றம் என்பவை குறித்து பைபிள் என்ன சொல்கிறது? இச்சம்பவங்கள் ஒவ்வொன்றிலும் பொறாமையானது ஒரு குறிப்பிட்ட குழந்தைக்கு மட்டும் அதிகளவு ஆதரவை ஒரு பெற்றார் காட்டியதன் அடியாக உருவாகியிருப்பதைக் காணலாம். காயின் தனது சகோதரனான ஆபேலின் பரிசை கடவுள் ஏற்றுக் கொண்டு தன்னுடையதை ஏற்காததன் காரணமாக எழுந்த பொறாமையில் அவனைக் கொன்றார். தகப்பனாரது ஆசீர்வாதத்தைப் பெறுவதில் ஜாக்கோபிற்கு தாயார் உதவியதைக் கண்டபோது ஈசாவுக்குப் பொறாமை வெடித்தது. அதேபோல்தான், மற்றெல்லோரையும்விட அதிகமாக தனது தகப்பனால் யோசேப் அன்பு காட்டப்படுகிறார் என்பதே மற்றவர்களுடைய பொறாமைக்குக் காரணமாக இருந்தது. தகப்பனார் அவனுக்கு பல வர்ணக் கோட் ஒன்றைப் பரிசளித்ததுடன் அவன் தவறுகள் செய்யும் போது அவனைக் கண்டிக்காமலும் இருந்தார்.

குழந்தைகள் வரலாற்று சம்பவங்களை, இழப்பு, பழிவாங்கல் என்பன குறித்த வரலாறுகளை கேட்கவும் படிக்கவும் விரும்புவர். இக்கதைகளின் போக்கு அவர்களை உற்சாகப்படுத்துவதுடன், அவர்களது மனங்களைத் தொட்டும் விடுகிறது. இதில் உள்ள கவனிப்புக்குரிய விடயம் என்னவென்றால் எல்லா நேரங்களிலும் அவர்களது அனுதாபம் பாதிக்கப்படுபவர்களின் பக்கத்தினை நோக்கிச் செல்வதில்லை என்பதுதான்.

### அவ்வளவாக ஆசிர்வதிக்கப்படாத நிகழ்ச்சி

பெற்றோர்களைப் போல் சிறி குழந்தைகள் குடும்பத்தில் பொறாமை நிலவுவதை கேள்விக்குட்படுத்துவதில்லை. அவர்கள் அதன் அர்த்தத்தையும், தாக்கத்தையும் நன்றாகவே அறிவார்கள். அவர்கள் எவ்வளவுதான் தயார் செய்யப்பட்டிருந்தாலும், ஒரு புதிய குழந்தை குடும்பத்துள் வரும்போது அவர்களிடம் பொறாமை ஏற்படவே செய்கிறது; பாதிப்பு உருவாகவே செய்கிறது.

கணவனின் எத்தகைய விளக்கங்களும், வீட்டுக்கு புதிதாகக் கூட்டி வரும் அவளது ஆசைநாயகி குறித்து அமைதியாக இருக்கும் நிலையை மனைவிக்கு வழங்கவிடப்போவதில்லை. பொறாமை, எரிச்சல் மற்றும் போட்டிப்போர் என்பவை அங்கு தவிர்க்க முடியாமல் வந்தே சேரும். இவற்றை எதிர்பாராமல் இருப்பதோ, இவ்வாறான நிகழ்ச்சிகளால் அதிர்ச்சி அடைவதோ அறியாமையாகும்.

இரண்டாவது குழந்தை வருவது என்பது ஒரு இளம் பிள்ளையின் வாழ்வின் முதற்கட்ட நெருக்கடியாகும். அதன் கட்டற்ற வாழிடம் திடீரென மாறுதலடைகிறது. அதற்கு இதனைப் பழகிக் கொள்ளவும் இப்புதிய வாழ்க்கையை ஓட்டவும் உதவி தேவைப்படுகிறது. வெறும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துபவர்களாய் இல்லாமல் அதற்கு உதவியாக இருப்பதற்கு நாம் எம்மையும் அக்குழந்தையின் உணர்வுகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

குழந்தை பிறப்பது போன்ற ஆசீர்வதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் வீட்டிலுள்ள பிள்ளைக்கு பெரிய விளக்கம் அளிப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் குழந்தைக்கு, ''நாங்கள் உங்களை மிகவும் நேசிக்கிறோம். நீங்களும் ஒரு அருமையான பிள்ளைதான். இப்போது நாங்கள் உங்களைப் போல் இன்னொரு குழந்தையை கொண்டுவர நினைக்கிறோம். நீங்கள் அந்தக் குழந்தையை விரும்புவீர்கள். அது உங்களது குழந்தையும் தான். அதையிட்டு நீங்கள் பெருமைப்படுவீர்கள். உங்களுக்கு எந்த நேரமும் விளையாட ஒரு பிள்ளை கிடைக்கப் போகிறது'' போன்ற தவறான வாக்குறுதிகளை வழங்கக்கூடாது.

இத்தகைய விளக்கம் நேர்மையானது அல்ல என்பது மட்டுமல்லாமல், இது திருப்திதரக்கூடிய ஒரு விளக்கமுமல்ல. இது குழந்தையை இப்படித்தான் சிந்திக்கத் தூண்டும். ''இவர்கள் உண்மையாக எங்களில் அன்புவைத்திருந்தால் இன்னொரு குழந்தையை ஏன் கொண்டு வருகிறார்கள். நான் அவ்வளவு சரியில்லை. அதனால் தான் இன்னொன்றை எனக்குப் பதிலாகக் கொண்டு வருகிறார்கள்.

தாயின் அன்பைப் பங்கு போட்டுக்கொள்வது மனதைப்பாதிக்கும் ஒரு விடயமாகும். குழந்தைகளின் மனசைப் பொறுத்தவரை பகிர்தல் என்பது குறைவாகப் பெறுதலாகும். ஒரு அப்பிளை அல்லது மிட்டாயைப் பகிர்ந்து கொள்வது போல அம்மாவின் அன்பைப் பகிர்வது மிகவும் கவலையூட்டும் ஒரு விடயமாகும். ஆனால் நாமோ அதன் தர்க்கவியலுக்கு அப்பால் போய் குழந்தை மகிழ்ச்சி அடைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். தாயின் வயிற்றிலுள்ள கர்ப்பம் வளர வளர குழந்தையின் சந்தேகமும் அதிகமாக வளர்கிறது. பிறக்கப் போகும் குழந்தை வருவதற்கு முன்பே தாயின் வயிற்றில் இடம் பிடித்து விட்டதாக அது கருதுகிறது. குழந்தையின் வழமையான தாயுடனான விளையாட்டுக்கள் குறைகின்றன. தாய் குழந்தையுடன் சேரும் நேரம் குறைகிறது. அவள் சுகயீனமாகக் கட்டிலில் படுத்திருப்பாள். அல்லது இளைத்துப் போய் ஓய்வெடுப்பாள். அவளது மடியில் உட்காரவே சாத்தியம் இல்லாமல் போகிறது. இவையெல்லாம் இன்னும் வெளிவராத ஒரு அந்நிய உயிரினால் ஏற்படுவதாக அது கருதுகிறது.

- வரும் -

# மகளிர் தினக் கருத்தரங்கு



பெண்கள் கல்வி ஆய்வு வட்டமும் 'விப்வி' தமிழ்ப் பிரிவும் சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 அன்று பெண்கள் தொடர்பான கலந்துரையாடலொன்றை ஏற்பாடு செய்திருந்தன.

பெண்கள் கல்வி ஆய்வு வட்ட மண்டபத்தில் இடம் பெற்ற இக்கலந்துரையாடலை அந்நிலையப் பணிப்பாளர் கலாநிதி செல்வி திருச்சந்திரன் நடாத்தி வைத்தார்.

'தமிழ்ப் படைப்பிலக்கியங்களில் பெண்கள்' என்ற பொதுவான தலைப்பில் இந்நிகழ்வு இடம்பெற்றது. மதுபாஷினி 'கலை இலக்கிய பிரதிகளின் பெண்ணிய விமர்சனம்' எனும் தலைப்பிலும், ஔவை 'தமிழ்க் கவிதைகளில் பெண்ணிய நோக்கு' எனும் தலைப்பிலும், விஜித்சிங் 'சிவரமணியின் கவிதைகள்' எனும் தலைப்பிலும் அங்கு உரை நிகழ்த்தினர். 'பெண்ணிலைக் கருத்தாடல்களில் வித்தியாசங்கள் என்கின்ற எண்ணக்கரு' எனும் கமலினிக்கு வழங்கப்பட்டிருந்த தலைப்பிலான கட்டுரையை அவர் சமூகமளிக்காததால் செல்வி திருச்சந்திரன் அவர்கள் வாசித்துக் கருத்துப் பரிமாறினார்.

பெரும்பாலும் வழமையாக வருபவர்களும் சில புதியவர்களாக முப்பது பேரளவில் கலந்து கொண்டனர்.

ஆண்களால் படைக்கப்பட்ட இலக்கியம் அவர்களே உருவாக்கிக் கொண்ட இலக்கணம் எல்லாம் ஆணியப்படுத்தப்பட்டிருப்பது பற்றியும் தற்காலத்திய கவிஞர்களின் ஆணிலைப்பட்ட கருத்துக்கள் பெண்ணைப் பாலியல் பண்டமாகவே மாத்திரம் நோக்குகிற போக்குகளெல்லாம் அடையாளம் காணப்பட்டு பேசப்பட்டன. ஈழத்தின் மிக முக்கிய கவிஞர்களின் ''அடிச்சறுக்கல்கள்'' உதாரணம் காணப்பட்டன.

'சிவரமணியின் கவிதைகள் என்ற தலைப்பிலான உரையும் கருத்துப் பரிமாறலும் பெண்கள் அல்லது பெண்ணியம் என்ற பொது நோக்கிலிருந்து விலகி அரசியல் விவாதங்களுக்கு இட்டுச் சென்றது. இவ்விவாதத்தின் அரசியற் பின்னணிகள் உட்பட கதைக்கப்பட்ட பழைய கதைகள் யாவும் யாழ்ப்பாணம் மையப்பட்ட பிரச்சினைகளாகவே எழுந்தன. யாழ்ப்பாணத்தவர்களால்லாத அல்லது போர்ச்சூழலின் ஆக்கிரமிப்புக்குள் அதிகம் இழுக்கப்படாதவர்களுக்கு இது புதிதாய் இருந்தாலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவத்தை எல்லோரிலும் எழுப்பியது.

'சிவரமணியின் கவிதைகள்' என்று மட்டும் தலைப்பிட்டது இவ்வாறான திரும்புதல்களுக்கு காரணமென நினைக்கிறேன். பொதுத்தலைப்போடு சற்றேனும் தொடர்புபடுகிற வகையில் 'பெண்களின் கவிதைகள்' என்று எடுத்திருக்கலாம். அல்லது 'தமிழில் பெண்ணியக் கவிதைகள்' என்றாவது எடுத்திருக்கலாம். (இக்கட்டுரைகளின் நூற்தொகுப்பின் போது இதை கருத்திற்கெடுக்கலாம்)

கவிதைகளை கவிதைகளாகவும், கவிஞர்களை கவிஞர்களாகவும் அல்லது கவிஞர்களை கவிதைகள் மூலமாகவும் கவிதைகளை கவிஞர்கள் மூலமாகவுமே ஒரு பொதுவாசகன் தேடுவான். இதெல்லாமல் கவிதைகளுடன் நேரடித் தொடர்பற்ற ஒருவரது இறந்தகாலங்களைத் தேடுவதன் மூலம் அல்லது கற்பிதங்களை ஏற்படுத்துவதன் மூலம் நாம் கவிதை வாசிப்பை தற்போது குறுகிக் கொச்சைப்படுத்தி வருகிறோம்.

உதாரணமாக சிவரமணியின் கவிதைகளை எடுத்துக்கொள்வோம். ஒரு 'நல்ல' வாசகன் அவற்றில் யாரும் சொல்லித்தெரியவைக்கத் தேவையில்லாமலே நிறைய விஷயங்களைப் பெறுவான். கவிதையின் ஆளுமையே இதுதான். காலம் கடந்து இனம் இடம் கடந்து எல்லோருக்குமானதாக இருக்கும். இந்த ஆளுமைதான் சிவரமணியின் கவிதைகள் மூலம் தனிப்பட்ட பின்னணி அறியாத என்னையும் உள்வாங்கியது.

ஆனால் அன்றைய கலந்துரையாடல் இதல்லாத விடயங்களை 'கிண்டுவதன்' மூலமாகவே அவரது கவிதைகளை விளங்கலாம் என்பதாக அமைந்தது. இதுவே மிக நீண்ட 'அரசியல் தனமானதும் தர்க்கவியலான (Logical) துமான கருத்து மோதல்களுக்கு இட்டுச் சென்றது.

எப்படியாயினும் இதன் மூலம் பல விடயங்களை அறிந்து கொள்ள முடியுமாகயிருந்தது. இது இன்னும் பரவலாக்கப்பட வேண்டும். ஆரோக்கியமாக்கப்பட வேண்டும்.

இக்கருத்தரங்கக் கட்டுரைகள் தொகுப்பாய் வரவுள்ளது என ஏற்பாட்டாளர் தெரிவித்தார். விரைவாயும் விரிவாயும் வரவேண்டுமென்பது எனது ஆவா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எங்கெங்கு காணினும்..

ஆழ்வார்க்குட்டி

வடமராட்சி பனைகளுக்குப்பேர் போன இடம். 'சீசன்' காலத்தில் பனங்காய்கள் பொத்துப் பொத்தென பற்றைகளுக்குள் விழுவது போல, இப்போ 'பொஸ்தவங்கள்' எம்மீது தொப்புத் தொப்பென விழுகின்றன. வடமராட்சியில் அல்ல; கொழும்பில்!

அண்மையில் ஒரு வெளியீட்டு விழா நிகழ்ந்தது. அந்தப் புத்தகம் சரியான இருட்டுக்குள் இருந்தபடி எழுதப்பட்டதோ என்னவோ? புத்தகத்தின் பெயர் ''விடியட்டும் பார்ப்போம்!''

உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் ஆகியோர் இவ் (வெளியீட்டு விழா) அறிவித்தலை ஏற்றுக் கொண்டு வந்து சோடா குடித்து, வருகின்ற கொட்டாவிகளைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களது குழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடி அல்லது அழுது ரகளை செய்து விழாவுக்கு வந்திருந்த என் போன்ற சில 'வேலை மினைக்கெட்டவர்களுக்கு', 'பிராக்கு' காட்டினார்கள். குழந்தைகளை தெய்வங்களுக்கு ஒப்பிடுவது அதனால் தான் போலும்!

ஆசியுரை, அருளுரை, ஆக்ரோஷ உரை, வரவேற்புரை, சிறப்புரை, சீலம்பாயுரை, விமர்சன உரை, கருத்துரை, கண்டறியாத உரை, நன்றி உரை, நயவஞ்சக உரை போன்ற உரைகளை ஆற்ற வந்திருந்த 'புத்திசீவிகள்' (காதிலை பூ கந்தசாமிக்கு நன்றி) கண்டறியாதனவற்றையெல்லாம் கண்டு விண்டுரைத்தார்கள்.

ஒரு ஆய்வாளினி 'நானும் வடமராட்சி, ஆசிரியரும் வடமராட்சி; அதனால்தான் ஆசிரியர் பெண்களைப்பற்றி துணிச்சலாக எழுதுகிறார்' என்கிற பாணியில் ஒப்பியல் ஆய்வு நிகழ்த்தியபோது ஆழ்வார்க்குட்டிக்கு புல்லரித்தது! ஏனெனில், ஆழ்வார்க்குட்டியும் அஃதே!!

அத்துடன் நின்றுவிடாமல் தனக்கே சொந்தமான; பஸ் , பலசரக்குக் கடை அனுபவங்களையும் பகிர்ந்தளிக்கத் தொடங்கிய போது விழா களை கட்டியது! விழா முடிந்து வெளியேறிக் கொண்டிருந்த சில ''மம்முதக்குஞ்சுகள்'' - 'பெட்டையளோடை சேட்டை விடுகிறதுக்கு சில புதுச் சொற்பிரயோகங்களையும் செய்முறை விளக்கங்களையும் அறிந்து கொண்டதாக' திருப்தி தெரிவித்தார்கள்!!

இன்னொரு ஆய்வாளர் ஏதாவது நாலு நல்ல வார்த்தைகளும் சொல்ல வேண்டிய ஆதங்கத்தில் அடவியன், விளக்குமாறு, தும்புத்தடி..., மூடல் குஞ்சுப்பெட்டி, கடகம்..., ஒல்லுப் போல, ஒண்டுமில்லைப்போல... போன்ற அருஞ்சொற்கள் புத்தகம் எங்கும் விரவிக்கிடப்பதாக உரைத்தார். அது மட்டுமன்றி 'பட்டினியைப் போக்குவதற்கு வயிற்றைச் சுற்றி ஈரத்துணி கட்டலாம்' என்கின்ற பிரயோசமான வாழ்வியல் உண்மையையும் தம்மால் இப் புத்தகத்திலிருந்து அறிந்து கொள்ள முடிந்ததாக நன்றி பாராட்டி னார். ஆய்வாளர் என்ன செய்வது, புத்தகத்தின் கனதி அப்படி?!

ஆனால் அச்சமயத்தில் எனக்கு ஒரு அற்புதமான 'ஐடியா' தோன்றியது. ஒரு பத்திரிகை விளம்பரம் செய்யலாம்!

'பட்டினி கிடப்போரே! பாக்கியவான்களே! எம்மிடம் வாருங்கள்! பட்டினியைப் போக்குவதற்கான அரிய யோசனைகள் அடங்கிய சிறுகதைத்தொகுப்பு ஒன்று விற்பனையாகின்றது! சொற்ப பிரதிகளே கைவசம் உண்டு. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே விரைய வேண்டிய முகவரி...''

அத்துடன் ஒரு ஈரச்சேலை பரிசுத் திட்டத்தையும் அறிவிக்கலாம்!!

இன்னொரு ஆய்வாளர் ''யதார்த்த வாதமே மெய்வாதம். மற்றெல்லாம் பொய்வாதம் மற்றவை பற்றி செவ்வையாக அறிந்தவர்கள் தப்பாமல் செப்புங்கள்'' என்று சவால் விடுத்தார். இதற்கெல்லாம் பதிலாக ஒரே ஒரு விதமான வாதமுறைதான் ஞாபகத்துக்கு வருகின்றது! வேண்டுமானால் அனல்வாதம் புனல்வாதம் செய்து பார்க்கலாம்!!

இதே ஆய்வாளர் சில நாட்களுக்கு முன்பு ''சிவத்தம்பி எங்களையெல்லாம் நடுத்தெருவில் விட்டுவிட்டாரே! இது தகுமா? முறையா?'' என்று புலம்பியதாக பத்திரிகைகள் வாயிலாக வாசகர்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள்.

இந்த ஆய்வாளருக்கு ஒரு உபயோகரமான தகவல் தெரிவிக்க வேண்டியுள்ளது. கருத்தரங்குகளும், கலந்துரையாடல்களும் நடைபெறுகின்ற இடங்களுக்கு வந்திருந்து உங்களது கருத்துக்களையும் தெரிவியுங்கள். கேளுங்கள்! கொடுக்கப்படும்!!

இன்னொரு ஆசியாளர் 'ஆசிரியர், முற்போக்கு எழுத்தாளராகக் கடவர்' என்று ஆசி கூறினார். முற்போக்குகள் தான் உச்சங்களைத் தொட்டவர்கள் என்று ஆயிரத்தோராவது தடவையாகப் பிரகடனம் செய்தார்.

இதே ஆசியாளர், சில மாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்த இதே ஆசிரியரின் இன்னொரு புத்தக வெளியீட்டில் 'எதிர்க்கட்சி ஒப்புக் கொண்டால் நாளைக்கே தீர்வுத் திட்டம் தயார்' என்று கனகம்பீரமாக கூறியும் 'அப்ளாஸ்' வாங்க முடியாமல் போனது ஞாபகமிருக்கலாம்.

சிலவேளை 'இத்தனை மணிக்கு தயாராகும்' என்று நேரத்தையும் அறுதியிட்டு கூறியிருந்தாரானால் யாராவது போனால் போகிறதென்று கை தட்டியிருக்கக் கூடும்!

நேற்று வரை 'மணிவிழா' என்றாலே எனக்கு 'அலேர்ஜி' ஆனால், சிலருக்கு உடனடியாக 'கட்டாய மணி விழா' நடாத்தி விடுவது உசிதம் என்று இப்போது தோன்றுகிறது.

ஆனால் ஒரேயொரு நிபந்தனை! 'இனிமேல் இலக்கியப் 'பனி' செய்வதை விட்டு விட வேண்டும்! வேண்டுமானால் 'இலக்சன்' கேட்கலாம்!!''

00000

அண்மையில் ஒருநாள் தேர்தல் தொல்லை பரப்பும் கூட்டமொன்றை கடந்து சென்றுகொண்டிருக்கையில் கர்ணகடூரமான குரலொன்று சிங்களத்தில் பின்வருமாறு கூறியது: ''ஆத்திரத்துக்கு மூத்திரம் பெய்யாதவன் என்று கூறுகிறார்கள். வேண்டுமானால் நான் மூத்திரம் பெய்து தருவேன். ஆனால்... (சஸ்பென்ஸான மௌனம்) எனது வாக்கை மாத்திரம் கேட்காதீர்கள்'' ஒரே அப்ளாஸ் போங்கள்!

இன்னொரு நாள் ஒரு கடை வாசலில் நின்று கொண்டிருந்தேன். அன்று வேட்பு மனுதாக்கல் செய்யும் இறுதிநாள். ஒரு வேட்பாளர் வேட்பு மனுவை வெற்றிகரமாகத் தாக்கல் செய்து விட்டு அன்பர்கள், ஆதரவாளர்கள் புடைசூழ திக் விஜயம் செய்து கொண்டிருந்தார். முன்னே சென்று கொண்டிருந்த தேர்தல் அணி வாகனம் ஒன்று பாதை மாறி செல்ல முற்பட்டது.

வேட்பாளருக்கு வந்த கோபத்தில் வாயில் கொறித்துக் கொண்டிந்த கடலையைத் 'தூ' எனத் துப்பினார். பின்னர் 'அந்த ... மேனை பாதையைப் பாத்து போகச் சொல்லுடா' என்கின்ற தமது கொள்கையை செந்தமிழில் மொழிந்தார்.

'செவிகாள் கேண்மின்களோ...' என்று அப்பர் சும்மாவா உருகினார்! என்னே பாக்கியம்... போங்கள்!!

'அதிகாரம் சகல மட்டங்களுக்கும் பரவலாக்கப்படுகின்றது' என்பதற்கு இவற்றை விட வேறு என்ன சாட்சியங்கள் வேண்டும்?

இந்து சமுத்திரத்தின் முத்தே!
எம்மருமைத் தாயகமே! - நீ
என்ன மாதவம் செய்தனையோ?

00000

ஈச்சம்பத்தையுக்குள்ளே கூத்துப் பாத்த கதை:

இரண்டு குருடர்கள் கூத்துப்பார்க்கப் போனார்களாம். ஒருவாறு தட்டித் தடவிப் போய் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். அது ஒரு ஈச்சம்பற்றை. அதனுள் இருந்த முயல் அசையும் சத்தத்தைக் கேட்டு அதுதான் 'கூத்து' என முடிவு செய்து 'ஜோராக' ரசித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவருக்கு நித்திரை மயக்கத்தில் கொட்டாவி வந்தது. அவர் கொட்டாவி விட்ட சத்தத்தில் முயல் ஓடிவிட்டது. அதற்குப்பிறகு சத்தம் சந்தடி ஒன்றுமே இல்லை. நமது கதாநாயகர்கள் 'கூத்து' முடிந்து விட்டதாக முடிவு பண்ணிக் கொண்டு வீட்டைப் பார்த்து நடையைக் கட்டினார்களாம்!

பூர்வஜென்ம புண்ணியத்தின் பயனாக அண்மையில் தமிழ்க் கலைஞர்கள் சிலர் வெகுசிரத்தையாகத் தயாரித்துக் கொண்டிருக்கும் ஒரு தொலைக்காட்சி நாடகத்தின் படப்பிடிப்பின் போது சில மணித்தியாலங்கள் உடனிருக்கும் 'நற்பேறு' கிடைத்தது.

அப்போது தான் மேற்கூறிய நாட்டார்கதை எனக்கு ஞாபகம் வந்தது. எங்களுக்கெல்லாம் எவ்வளவு 'அச்சா'வாகப் பொருந்துகிறது பாருங்கள்!

ஒரேயிடத்திலேயே நங்கூரமிட்டு நின்ற கமெராவை ஸ்ரீதர் நகர்த்திக் காட்டியே சில பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன. இன்று தொழில்நுட்பம் எவ்வளவோ வளர்ந்து விட்டது. ஆனால் நாம் தான் விடாப்பிடியாக நகராமலேயே நங்கூரம் பாய்ச்சி நிற்கிறோம். 21ம் நூற்றாண்டின் தலைவாயிலில் வந்துள்ள போதும் 21ம் ஆண்டு கோடிப்புறத்திலேயே தடக்கி விழுந்து கொண்டிருக்கிறோம்! தமிழர்கள் சில விடயங்களில் மாறவே மாட்டார்களா?

நடித்துக் கொண்டிருந்த நடிகர்கள் பாரிசவாத நோயாளிகளாக நடிப்பதற்கு மிகவும் பொருத்தமானவர்கள்! கை, கால், கழுத்து, உடல், முகம் முழுக்க விறைத்துப் போன ஒரு நிலையில் இழுத்து இழுத்து 'வசனம்' வாசித்தார்கள். இவர்களுடன் ஒப்பிடுகையில் நமது செய்தி அறிவிப்பாளர்கள் நல்ல நடிகர்களாகத் தோன்றுகிறார்கள். சில வேளைகளில் அவர்கள் திக்குவாயுடன் திணறுவதைப் பார்க்க வேண்டுமே!


நெறியாளராக தம்மை வலிந்து புகுத்திக் கொண்டவர் இடைக்கிடையே சைலன்ஸ், ஆக்ஷன், கட் என்று தாறுமாறாகப் பினாத்திக் கொண்டிருந்தார். தெரியாத்தனமாக இவரிடம் மாட்டிக்கொண்டுவிட்டு தயாரிப்பாளர் செய்வதறியாது கைகளைப் பிசைந்தபடியே கதவிடுக்கில் அகப்பட்டுக்கொண்ட எலிபோல முழிசிக் கொண்டிருந்தார்.

நெறியாளருக்கு திரைச்சுவடி, திரைமொழி என்பனவெல்லாம் சுட்டுப்போட்டாலும் வராது. ஒளி, நிழல், இருள்... ஒலி, சத்தம், இசை... மொழி, மௌனம், என்பவற்றின் அர்த்தங்களை இவரால் அகராதியில் தேடியும் புரிந்து கொள்ள முடியாது! அவையெல்லாம் குற்றம் குறை சொல்பவர்கள் பாவிப்பதற்கான விஷயங்கள் என்பது அவரது முடிந்த முடிவு!

இனியென்ன?

மேலும் சில வருடங்களுக்கு நமது பாரம்பரிய 'கலை' வெளிப்பாடுகளான பூப்புனித நீராட்டு விழா, விவாகசோபனவிழா, செத்தவீடு, அந்தியேட்டி என்பவற்றின் வீடியோக் காட்சிகளை நாம் கண்டு களித்து இன்புற்றிருப்போமாக!

அத்துடன் இடைக்கிடை பிறமொழிப் படங்களைப்பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கலாம்!!



## தனிமூலைத் தாகம்

இன்றைக்குப் புழுக்கம் அதிகம்.

உழுத்துப்போய்
கொலு கொலுத்து வீழுமோ நெஞ்சு?
முங்கிப் பிடிப்பதையும் தவறி
தொப்பென்று!
இருக்கலாம்:
வாந்தி எடுத்து,
தொட்டிழுத்துக் கோடுபோடவும்
மற்றய மூலையில் சளி பின்னவும்.
-------துடிப்புக்கும்
சப்தத்திற்கும் இடையில்
தன்னினத்தின் முழி தோண்டி
சீழிழுத்து தொங்கி கிடப்பதை
நினைத்து.

நான் புரண்டு படுக்கிறேன்
என் படுக்கை அறையும்
இழுத்துப்போர்த்திய
இருளுமாய்
நெஞ்சையும் சேர்த்து
முக்காடு சாத்தி.

நெஞ்சே! நீ கவனம்,
ஒவ்வொரு மூலையிலும்
ஒவ்வொரு சிலந்தி
சீழிழுத்து சளி பின்னி
தன்னினம் உண்ண.

1995.10.16

அல்வாய் முகிலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உதிர்ப்பு

தெளிவத்தை ஜோசப்



வேர் செத்த பிறகும் விழ மனம் இல்லை.

எகிறின் பிடிப்பில் அழுந்தி நின்று கொண்டு அடம் பிடிக்கிறது எனது முன்கடைவாய்ப் பல்.

நாக்கால் தொட்டால் சோளக் கொட்டை போல் நாலாபுறமும் உலாப் போகிறது! ஆனால் விழ மாட்டேன் என்கிறது.

அது தரும் நோவும் அடம் பிடித்து ஏற்படுத்தும் அசௌகரியங்களும்......... அப்பப்பா பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை..

வயிற்றிலே பசியா அல்லது வலியா அல்லது வேறு எங்காவது நோகிறதா என்று சொல்லத் தெரியாமல் சதா ''நை நை' என்று கத்தித் தீர்க்கும் குழந்தை போல்...

என்ன செய்வதென்றே தெரியாமல் எகிற்றில் வீக்கம் கண்டு...

கேவலம் ஒரு பல்! அதுவும் எனது பல்! வாயில் ஒன்றும் வைத்து விட முடியாது. நீர் பட்டால் இழுக்கிறது சாப்பிடும் போது ஏதாவது தப்பித் தவறி பட்டு விட்டால் உயிர் நிலையில் அடிப் பட்ட மாதிரி...

அப்படியே கன்னத்தை அழுத்திப்பிடி ந்துக் கொண்டு கண்ணீர் சிந்துவேன்.

கையைக் கழுவிக் கொண்டு எழுந்து விடுவேன்.

பல்லின் அடம் வயிற்றுக்குத் தெரிகிறதா?

''என்னங்க இப்பவும் சாப்பிடாமல் எழுந்திறிச்சிட்டீங்க.. அந்தப்பக்கம் போகாம பாத்து மெது மெதுவா மென்று முழுங்கிடுங்க.. இப்படி"பட்டினி கெடந்தா எப்படி? வயித்துக்கு எதையாவது போட்டாகணுமே...!

....ஒங்களுக்கும் ஒங்க பல்லுக்காகவுமே தான் சோத்தையும் கொஞ்சம் கொழைய விட்டு ரசமும் வச்சிருக்கேன். நல்லா பெனைஞ்சி நைசா முழுங்கிடுங்க...

...பட்டினியோட போறிங்க மயக்கம் போட்டு எங்கயாச்சும் ரோட்டுல விழுந்திட்டீங்கன்னா.. தடிச்சிட்டு விழுந்து கிடக்குறதா நாலு பேர் நெனைப்பானுக!

மனைவி சொல்வதில் இருக்கும் நியாயம் எனக்கு தெரிகின்றது.

ஆனாலும் அவளை முறைக்கின்றேன்.

'எனக்கல்லவா தெரியும் எனது வேதனை உனக்கெப்படித் தெரியும்' என்னும் அந்த முறைப்பின் எரிச்சல் ஏவுகணை போல் அவளது கண்வழி நுழைந்து உடலுக்குள் 'சர் சர்'ரென்று ஊடுருவி ஓடி இதயத்தைத் தேடித் தாக்குகின்றது.

காலங் காலமாய் எனக்குச் சகலமுமாகி எனது சகலவற்றையும் பகிர்ந்து கொண்டு எனக்காகவே வாழும் அவள் இப்போது அயலவளாகத் தோன்றுகின்றாள். அன்னியவளாகத் தெரிகின்றாள்.

என்னுடைய வேதனை உனக்கெப்படித் தெரியும்' என்கிறேன்.

காரணம் இந்தப் பல்லும் அதன் பயங்கர வாதமும்.

தாகத்திற்குத்தண்ணீரைத் தவிர வேறு எதையுமே வாயில் வைத்தறியாத என்னை நாலு பேர் குடிகாரன் என்றும் குடித்து விட்டு றோட்டில் விழுந்து கிடக்கிறவன் என்றும் குறை பேச வைக்குமா இந்தப் பல்.

இத்தினையூண்டான இந்தப் பல்லின் சில்லறை விளையாட்டுக்கள் என் கௌரவத்திற்கு இழுக்கைத் தேடித் தரும் ஒரு திட்டமிட்ட செயலாகத் தான் இருக்க வேண்டும்.

கோபத்தால் பல்லைக் கடித்தேன்.

'அம்மோவ்...!' தொலைந்தேன்!

கீழ்ப் பல்லின் அழுத்தத்தால் சற்றே ஒருக்கழித்து வரிசையாக விட்டு விலகி கன்னத்தில் மென்மையைக் கீறிக்கொண்டு...

ஒரு கணம் உயிர் போய்த் திரும்புகிறது.

எகிறில் ரத்தம் ஊர்வது போன்ற ஒரு இழைதல், எச்சிலை உறிஞ்சிச் சுவைக்கின்றேன் ரத்த வாடை இல்லை!

இருக்கும் இடம் விலகியதால் ஏற்பட்ட இடைஞ்சல் என்னை சித்திரவதைப் படுத்துகிறது.

பல்லுக்கு மேலாக நாவைச் கழற்றித் தடவிப் பார்க்கின்றேன்.

நிற்கவும் முடியாமல் விழவும் மனமில்லாமல் மண்ணின் பிடிப்பில் வேரூன்றி சரிந்து நிற்கும் மரம் போல் அடிப்பல் எகிறின் உள்ளும் நுனிப்பல் கன்னத்தைத் தொட்டுக் கொண்டும்...

பல்லின் மேல் நாக்குப் பட்டது தான் தாமதம்.

கோபித்துக்கொண்டு வாசல் கல்லில் போய் அமர்ந்து கொண்ட கிழம் யாராவது கூப்பிட மாட்டார்களா என்பதற்காகக் காத்திருந்து 'உள்ள வாயேன் காத்தடிக்குதில்லே...' என்ற குரல் கேட்டதும் ஓடி வந்து நுழைந்து கொள்ளுவதைப் போல...

''டடக்' கென்று மீண்டு வந்து வரிசையில் நின்று கொண்டது பல்.

பல்லை மெதுவாக மீண்டும் மீண்டும் நாக்கு தடவுகிறது.

அடிப்பல்லின ஓரம் நாவைக் கீறினாலும் தடவல் இதமாக இருக்கிறது.

விலகி வெளியே வந்த அளவு உள்ளே போகுமா என்னும் பரிசோதனையில் நாவால் மெதுவாக உந்துகிறேன்.
வரிசை விட்டு விலகிவெளியே வந்தது போலவே உள்ளேயும் போகிறது.

பற்களை மெதுவாகக் கடித்து ஆடும் பல்லை உட்பக்கமாக அழுத்தினேன். பிறகு மீண்டும் கடித்து வெளிப்பக்கமாக அழுத்தினேன்.

தள்ளூஞ்சல் மாதிரி உள்ளேயும் போகிறது வெளியேயும் போகிறது.

ஆனால் கழன்ற பாடில்லை.

கண்ணாடி முன் நின்று வாயை அகலத் திறந்து பார்க்கின்றேன்.

வலிக்குப் பயந்து அந்தப்பக்கம் பிரஷ் போடுவதே இல்லை.

லேசாக மஞ்சள் பூத்துப் போய் வழ வழத்துக்கொண்டு....

எழும்பவும் ஜீவனற்று புரட்டிப் போடவும் நாதியில்லாமல் ஈரமும் பிசு பிசுப்புமாய் கட்டிலில் கிடக்கும் கிழம் போல...

அருவருப்பு என்னை அரிக்கின்றது!

'இந்த இளவையெல்லாம் வாய்க்குள் வைத்துக்கொண்டு...

எரிச்சல் எரிச்சலாக வருகின்றது!

விரலால் அழுத்தமாகப் பிடித்து மெதுவாகச் சுழற்றிப் பார்க்கின்றேன்.

உதட்டை நீவிக்கொண்டு விரல் உள்ளே நுழைந்ததும் கோணல் முகமும் விரலும் மட்டுமே கண்ணாடியில் பெரிதாய் தெரிகின்றன. பல்லும் பல்லின் நடமாட்டமும் தெரியவில்லை..

கண்கள் கலங்கிச் சிவந்ததுதான் கண்ட பலன். பல் கையில் வரவில்லை.

எனது மெது மெதுவான பலாத்காரப் பிரயோகங்களுக்கெல்லாம் பல் மசிந்து கொடுப்பதாகத் தெரியவில்லை.

நான் எத்தனை பெரியவன்! எத்தனை எத்தனை பிரமாண்டங்களை எல்லாம் செய்து காட்டியவன்! எனக்குத் தெரிய முளைத்தது இந்தப் பல். எனது சுண்டு விரல் நகம் அளவு இருந்து கொண்டு...

பல் எல்லாம் மனிதனுக்கு அவசியமா? என்ன? என்னும் நினைவு எழுகிறது.

நெருக்கடிகள் தான் ஒரு வரலாற்றுத் தேடல்களுக்கான நெருக்குதலை உயிர்ப்பிக்கின்றனவோ!

பொக்கை வாயாக இருந்து - மண்ணைக் கீறிக்கொண்டு மேலெழும் விதை முளை போல் சின்னதாக வெள்ளையாக எகிறை முட்டிக் கொண்டு ஒன்று எட்டிப் பார்க்கையில் எத்தனை குதூகலம் கொண்டிருப்பார்கள் பெற்றவர்கள். விரலால் தடவிப் பார்த்து பல்தான் என்று உறுதிப் படுததிக்கொண்டதும் அவசர அவசரமாக அரிசி இடித்து பல் கொழுக்கட்டை பிடித்து......

எத்தனை வரவேற்பு!

பிறகு ஒவ்வொன்றாய் முளைத்து வளர்ந்து வாய்நிறைத்து - கீறிப்போட்ட தேங்காய்க் கீற்றுப் போல் வரிசையாக...

முகத்துக்கே ஒரு தேஜசாய்...

எத்தனை பேர் என் பற்களைப் பார்த்து பொறாமைப் படவில்லை! முன்னிரு பற்களும் அதனை ஒட்டி வளர்ந்த மற்ற பற்களும் - ஒரே சீரான அளவுடன் வரிசை மாறாமல் - வெளியே தெத்தித் துருத்தாமல்...

எகிறின் சிவப்பும் அதில் பளிங்கு பதித்தாற் போன்ற பல் வரிசையும்...

எனது சிரிப்பின் மோகனம் எத்தனை பேரை வசீகரித்திருக்கின்றது! என் மேல் மோகம் கொள்ளச் செய்திருக்கின்றது!

இந்தப் பற்களால் முகத்துக்கொரு களையும் எனக்கொரு கௌரவமும் கிடைத்ததே!

அதே பற்களில் ஒன்று, இன்று என் கௌரவத்திற்கே இழுக்குச் செய்யத் துணிந்திருக்குமா?

நம்ப முடியவில்லை!

என்னால் அதற்கு ஏதாவது இடைஞ்சல்கள் - அநீதி அக்கிரமங்கள் எப்போதாவது ஏற்பட்டிருக்குமா? தெரிந்தோ தெரியாமலோ,

இல்லை என்றால் இது ஏன் என்னை இப்படி இம்சிக்கிறது - துன்புறுத்துகிறது. எதற்காகவோ பழி வாங்குவது போல்.

"Every Action Has a Reaction" என்பது எத்தனை சத்யமானது!

ஆலும் வேலும் ... என்பதற்கிசைய ஆலங் குச்சியை மென்று பல் தேய்க்கவில்லை தான் நான். இன்றைய விஞ்ஞான வேகத்தில் இதெல்லாம் சாத்தியப்படுவதில்லை.. குச்சியையும் கொம்பையும் எங்கே போய்த் தேடுவது!

இருக்கவே இருக்கின்றன றெடிமேட் குச்சிகள், விதவிதமான வண்ணங்கள் வளைவுகளுடன்.

பல் வரிசையில் உள்ளும் வெளியுமாகக் கையை ஒட்டி ஒட்டி இடைஞ்சலின்றி லாவகமாக பிரஷ் செய்வதற்கான விஞ்ஞான கண்டு பிடிப்புத்தான் இவ்வளைவுகள் என்னும், விளம்பரங்களுடன்

பல்லின் மேல் உள்ள பற்றுதல் பாசத்தில் - அக்கறையில் அழகழகான அதிக விலையான பிரஷ்களையே பாவிப்பேன். அடிக்கடி புதிதாக பிரஷ் வாங்கி வாங்கியே அம்மாவிடம் ஏச்சுப் பட்டிருக்கின்றேன். குப்பையாகச் சேர்ந்து விடுவதால் எங்கே கொட்டுவது என்பதும் ஒரு பிரச்சினைதான்.

தங்கள் தங்கள் மேம்பாட்டுக்காக வன்றி பற்களின் மேம்பாட்டுக்காகவே - நலன்களுக்காகவே தயாரிப்பதற்காக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் பற்பசைகளில் பெரிதாகத் தம்பட்டம் அடிக்கும் பற்பசையைத்தான் தேர்ந்தெடுத்துப் பாவித்தேன். பாவிக்கின்றேன்.

பொங்கும் பால் நுரை நுரையாகக் கிளம்பி வாய் எது பல் எது என்று தெரியாமல் பொங்கிப் பூரித்து துப்பும் போதும் துப்பிய பின்பும் அது மணக்கும் மணம்...

கொப்பளித்து துப்பிய பின்பும் பல்லைச் சுற்றிச் சுற்றி ஓடி வரும் அந்த சில்லென்றச் சுகந்தம்...

எத்தனை செய்திருக்கின்றேன் இதற்காக!

பிள்ளைக்கு நல்லதே என்று தினமும் காலைக் கருக்கலில் நாலு மைல் தூரம் நடந்து போய் ஆட்டுப் பால் வாங்கி வந்து காய்த்து சீனி போட்டு கையில் எடுத்துக்கொண்ட பிறகுதான் எழுப்புவேன் இவனை... இப்போது எவளோ ஒருத்தியின் பின்னால் ஓடிக்கொண்டு நீ யார் என்று என்னையே கேட்கின்றான் என்று குமுறிப் புலம்பும் அப்பா போல்...

நானும்...!

'அது ஒரு தகப்பனாகப்பட்டவனின் கடமை' என்று அந்த மகன் சொல்லியிருப்பான்...

இந்த பல்லும்...!

நானும் தான் உனக்கு எத்தனை எத்தனையோ செய்திருக்கின்றேன் என்னைப் பத்திரமாக- சுகதேகியாக- மரியாதையாக - வைத்திருக்க வேண்டியது உனது கடமை என்று கூறுமோ...

கடிக்கவே முடியாத கடலைக் கொட்டையைக் கூட முந்திரிப் பருப்புப் போல் மென்று காட்டியிருக்கிறது எனது பல்.

இறைச்சியா எலும்பா? சோறா சோளமா? சகலமும் இதற்கு .யானை வாய்க் கரும்புதான்!

கரும்பை மட்டும் விட்டா வைத்தேன்.
முன் கடைவாய் பல்லால் ஓரத்தை ஒரு கடி கடித்து இழுத்தேன் என்றால் டர் டர் ரென்று உரிந்து வரும் பட்டை.

உதடு லேசாக நசிந்து எரியும் , நற நற வென்று கடித்து மெல்கையில் சர சர வென்று கருப் பஞ்சாறு தொண்டைக்குள் இறங்கும். வெளியேயும் வீசித் தெறிக்கும்.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல்லிடுக்கில் சிக்கி நிற்கும் சின்னச் சின்ன சக்கை வலி கொடுக்கும்.

பல்லைக் கடித்து வாயைச் சுழித்து 'க்ஸ்ஷ்' என்று பலமாகக் காற்றை உள்ளிழுத்தால் சிக்கிக் கொண்டிருந்த கரும்புச் செதில் 'கப்' பென்று தொண்டைக்குள் போய் விழும்.

காறி உமிழ்ந்து விட்டு மீண்டும் நற நற வென்று கடித்து மென்று ... இனிக்க இனிக்க சாறு விழுங்கி.

கருப்பஞ்சாற்றைப் போலவே அந்த நாட்களும் மிக இனிமையானவை.

இப்போது கரும்பென்று நினைக்கையிலேயே குலை நடுங்குகிறது, கடிக்கவா - இழுக்கவா ...மெல்லவா..!

உறைக்க உறைக்க ஆஸ் ஊஸ் சென்று இறைச்சியும் சோறும்மென்று முடித்து கை வாய் கழுவியதும் அம்மாவிடம் 'பின்' கேட்பேன்.

ஆறேழு இடங்களில் குத்தி எடுத்தால் தான் விடுதலை கிடைக்கும், இறைச்சித் துரும்புகளை குத்தி எடுக்கும் வரை பற்களுக்கு சிலுவையில் தொங்கும் ஒரு வேதனை..'

பல்லை எல்லாம் 'பின்'னால் குத்தக்கூடாது என்பார்கள் அம்மா ரவிக்கையில் கழற்றிய பின்னை நீட்டிக்கொண்டே.

பல்லிடுக்குகளை மெது மெதுவாகக் குத்தி சுத்தம் செய்து கொப்பளித்துத் துப்புகையில் தண்ணீர் லேசான சிவப்பாய்த் தெறிக்கும், மெலிதான இரத்த வாடையுடன்.

ஒட்டி நிற்கும் பற்களுக்குள் ஓட்டை போட்டு பிரித்து விடும் சூழ்ச்சி எதையும் நான் தெரிந்து செய்ய வில்லை,என்றாலும் எதிருகில் ஊசியை நுழைத்து பல் நுனி வரை இழுத்துப் பார்த்திருக்கின்றேன்.

ஏறக்குறைய ஒட்டியிருக்கும் இரண்டை வெவ்வேறாகப் பிரிப்பதற் கொப்பானது தான் இது!

ஆபீசில் வேலை பார்க்கும் ஆறேழு பெண்கள் ஒருநாள் வீட்டுக்கு வந்திருந்தனர். பேசிச் சிரித்து நாலைந்து குளிர் பானப் போத்தல்கள் வாங்கி...

இதெல்லாம் வழமைகள் தானே!

பெண்கள் என்றதும் மனம் சிலிர்த்துக் கொள்ளும் வயது அது!

மேசை மீது போத்தல்களை வைத்து விட்டு 'அம்மா கிளாஸ்' என்றேன்.

கிளாஸ்கள் மட்டுமே வந்தன. ஒப்பனர் வர வில்லை, கேட்டேன். அம்மா மறுபடியும் குசினிப் பக்கம் நடந்தார்கள்.

அதற்குள்...

கூடியிருந்த கும்மாளமிடும் 'யாரோ' இந்த பெண்களிடம் என்னுடைய கெட்டிக்காரத் தனத்தைக் காட்ட பலியாவது எனது பல்!

கடை வாய்ப் பல் இடுக்கில் போத்தலை வைத்துக் கடித்து 'கடக்' கென்னும் ஓசையுடன் ஒன்றைத் திறந்து காட்டினேன்!

'அம்மாடியோவ்' என்று ஒருத்தி குதூகலித்தாள். ஒப்பனருடன் அம்மா வருவதற்குள் நாலைந்து அம்மாடியோக்கள்...

டஸ்ஸென்று நுரை வழிய வழிய கிளாஸ்கள் நிறைந்தன.

அம்மா திகைத்து நின்று விட்டார்கள். பிறகு ஏசினார்கள்.

ஆனாலும் எனது பற்கள் மீதான என்னுடைய ஆதிக்கம்- சர்வதிகாரம்...!

எனது பல்தானே என்னும் ஏதேச்சாதிகார அசட்டை...!

தங்கள் தங்கள் குஷிகள் கொண்டாட்டங்களுக்காக அடிமைகளை துன்புறுத்தி இன்பம் காணும் எஜமானர்கள் போல்...

அம்மாவின் இடத்தை மனைவி பிடித்துக் கொண்ட பிறகும் பின்னால் பல்லுக்குத்தாதீங்க என்றபடி ரவிக்கையில் இருந்து பின் கழற்றிக்கொடுப்பது நடந்துகொண்டே இருந்தது.

நாசுக்கான இந்தப்பிளவு படுத்தும் வேலையை தனியாக மட்டுமின்றி கூட்டாகவும் செய்திருக்கின்றேன்.

இது நாசகார வேலையல்ல நமது பாரம்பரியம் என்னும் போலிப்பூச்சுடன்.

எங்கள் வீட்டில் ஒரு விருந்து!

பொரித்தாக்கிய கத்திரிக்காய் கூட்டும் உருளைக்கிழங்கை பிசைந்து மாவாக்கிய உருளைக் கிழங்கு உப்பு மாவையும் தவிர்ந்த மற்ற தெல்லாமே பல்லுடன் மல்லுக்கு நிற்கும் அயிட்டங்கள்.

இறால் வறுவல்; மாட்டிறைச்சிப் பிரட்டல்; கால் முள்ளும் சதையுமாக கோழி இறைச்சிக் கறி. மாட்டிறைச்சி வேண்டாம் என்பவர்களுக்காக குண்டு குண்டாய் எலும்புகளுடன் ஆட்டிறைச்சிப் பிரட்டல்...

கடிக்க முடியாதவைகளை வீசித்தொலைக்கின்றார்களா! இல்லை சப்புகின்றார்கள்: உறிஞ்சுகின்றார்கள்.. திருப்பித் திருப்பித் பார்த்து இடம் தேடிக் கண்டு... பல்லை நுழைத்து...

ஒரே போர்க்களம்!

கை கழுவித் துடைத்து பழம் தின்னும் முன் ஒவ்வொருவரும் பல்குச்சியும் தானுமாய்...

முன் கையால் வாயை மூடிக்கொண்டு முகங்களைக் கோணிக் கோணி.

பூச்சாடியின் பூக்களென ஊசி ஊசியாய் நீட்டிக் கொண்டு பற்-குச்சிகள் பக்கற்றுடன் வீற்றிருக்கிறது மேசையில்.

தலையைப் பலமாக உதறிக்கொண்டேன். சும்மாவே 'நொய் நொய்' என்று பிய்க்கும் பல்லுக்கு தலையின் பல்மான உதறல் வெறும் வாய்க்கு அவல் போட்டது போல்..!

விரலால் மெதுவாகத் தடவுகின்றேன்! பல்லின் வழுவழுப்பு விரலில் அருயையை ஏற்படுத்துகின்றது



நகத்தால் மெதுவாகச் சுரண்டியவாறே விரலி டுக்கில் பல்லை வைத்து பிடியைச் சற்று அழுத்தி...

ஒரு திருகு...!

அம்.. மோவ்..

பல் கையுடன் வந்து விட்டது போன்ற உணர்வு.. ஆனால், விரல் மட்டுமே வெளியே வந்தது, எச்சில் ஒழுகிக் கொண்டு!

இடுப்பில் குந்தியிருக்கும் குழந்தையைப் போல் எதிருக்கு வெளியே குந்தியிருக்கிறது பல்!

எகிறைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு.

நாவால் இழுத்துப் பார்க்கிறேன்.

வரிசைக்கு வர மறுத்து அடம் பிடிக்கிறது.

என்னுடைய பலாத்காரப்பிரயோகங்களுக்கான ஒரு எதிர்ப்புக் குரல் கொடுத்துக் கொண்டு!

கண்ணாடி முன் நின்று பல்லுடன் மல்லாடிக் கொண்டிருக்கும் என்னை வருவோர் போவோர் எல்லாம் ஏளனமாகப் பார்ப்பதும் - நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொள்வதுமாய்...

அவர்களுக்கு இப்படி ஏதும் இன்னும் வரவில்லையா அல்லது தங்களுடையவைகளை மறைத்துக் கொண்டு அயலவனை கேலி செய்யும் வேஷமா?

ஒரு விதமாகப் பல்லை சமாதானப் படுத்தி வரிசைக்கு கொண்டு வந்து விட்டேன்.

மெதுவாக விரலால் தொட்டுப் பார்க்கிறேன். விரல் நுனி படும் போதே விலகிச் செல்கின்றது!

எச்சில் சிவப்பாய் ஊறி ஊறி வாய் ரொம்புகிறது.

'தண்ணி... கொஞ்சம்...' என்று குழறியபடி வெளியே ஓடுகின்றேன்.

டம்ளரில் தண்ணீருடன் மனைவி வந்தாள்.

வழவழப்பும் சிவப்புமாய் எச்சிலைத் துப்பி விட்டு.. துப்புவது எங்கே- வாயைத் திறந்து குனிந்து வடித்து விட்டு நிமிர்ந்தேன்.

கிளாசை வாங்கி தண்ணீரை வாயில் ஊற்றியது தான் தாமதம்!

இழுத்ததே ஒரு இழுப்பு! கையில் இருந்த கிளாசை வீசி எறிந்தேன்.

ஏரி கொள்ளியை தண்ணீருக்குள் விட்டு இழுத்தது போல் புகையும் கொதிப்புமாய் ஏதோ ஒன்று சர் சர் ரென்று பல்லுக்குள் நுழைந்து எகிறுக்குள் ஏறி கன்னத்தில் வியாபித்து கண் நெற்றி என்று ஏறி ஏறி மண்டைக்குள் பிரவேசித்து மூளையைத் தேடி...

என்னால் நிற்க முடியவில்லை. நின்றால் சாய்ந்து விடுவேன் என்பது திண்ணம்.

ஓடுகின்றேன். வீட்டை சுற்றி - கேட்டைத் தள்ளிக்கொண்டு றோட்டு வழியே...

சைக்கிள்-கார் -பஸ் என்று தாண்டி ஓடுகின்றேன்.

சிலர் நின்று திரும்பி என்னைப் பார்க்கின்றனர். பிறகு நடக்கின்றனர்.

நான் ஓடுகின்றேன். பின்னால் மனைவி ஓடி வருகின்றாள்.

நீண்டு நீண்டு வரும் அவளது கரம் எட்டி எட்டி என்னைப் பிடிக்க முயன்று முதுகில் பட்டு பட்டு விலகி...

எட்டிப்பிடித்து வேகத்தைக் குறைத்து ஓட்டத்தை நிறுத்தி உள்ளே கூட்டி வருகிறாள்.

எனக்கு சுயம் திரும்புகின்றது. வெட்கமாக இருக்கின்றது. அடங்கிப் போய் கதிரையில் அமர்கின்றேன்.

''இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இம்சைப்படப் போறீங்க. டாக்டர்கிட்ட போங்கன்னு நானும் எத்தனையோ தடவை சொல்லிட்டேன்... நேரம்மில்லைம்பீங்க ஆடுற பல் தானே விழுந்துடும்பீங்க.. அது உங்களை வீழ்த்திடும் போலிருக்கே..'

கலங்குகின்றாள் மனைவி.

'ஆம் அதுதான் சரியான வழி! 'நானும் தீர்மானித்துக்கொண்டேன்.

என்னுடைய எந்த விதமான சமரசங்களுடனும் அது ஒத்துப் போகவில்லை!

இதமான எனது தடவல்கள் அதைத் திருப்திப் படுத்தவில்லை.

எனது சின்ன சின்ன பலாத்காரங்களுக்கு அது மசியவில்லை.

இனி ஆயுதப் பிரயோகம்தான்!

ஊசி போட்டு உணர்வழித்து: உயர்ந்த கதிரையில் உட்கார்த்தி தலையை அழுத்தி வைத்து கிடுக்கி போட்டு இறுக்கி கத்தியால் கீறி குரட்டால் அழுத்திப் பிடித்து நெம்பி...

"Every Action Has a Reaction" என்பதன் இருப்பை நானும் நிலை நாட்ட வேண்டும்!

கன்னத்தில் கை பதித்து ஆயுத உதவி நாடி டாக்டரை அடைந்த போது எனக்குப் பகீர் என்றது

என்ன இத்தனை கூட்டம்!

கன்னத்திலும் தாவாயிலும் முன் வாயிலும் கை பதித்தவர்களாய் அத்தனை பேரும்!

முகத்தைக் கோணிக் கோணி அழுதபடி அம்மாவை அரவணைத்துக் கொண்டு அந்தச் சிறுவன்...

பள்ளிக்கூடக் கவுனும் தானுமாய் அப்பாவின் பிடிக்குள் நெளியும் அந்தச் சிறுமி...

பூவும் பிஞ்சும் காயும் பழமுமாய்...

இத்தனை பேருக்குமே பல் வலியா!

டாக்டரிடம் நானோ என்னிடம் டாக்டரோ எப்போது நெருங்குவது...

உலகம் அவசர அவசரமாகக் கிழண்டு போய்க் கொண்டிருக்கிறதோ!

டாக்டரே டாக்டர்களாகிப் பல்கிப் பெருகி...

கத்திகளும் - இடுக்கிகளும் - ஒன்றுடன் ஒன்று மோதும் கட முடா கட முடா வென்னும் ஆயுத ஒலிகள் இரைச்சலாகி... காது செவிடு படும் படி. .

ஆட்டம் போடும் இந்த பல்லை ஆயுதம் போட்டு அகற்றி அழித்து விட்டு...

நுனி நாவால் மெதுவாகத் தடவிப் பார்க்கின் றேன்.

பக்கத்துப் பல் ஏன் லேசாக வலிக்கிறது!!



# இராமச்சந்திரன் நினைவாக...

என் வாழ்வில் சந்தித்த எத்தனையோ நண்பர்களில் இனியவரும், நேர்மையாளருமான ஒரு மனிதர் தான் கு. இராமச்சந்திரன் அவர்கள். அவர் இலக்கியவாதி மட்டுமல்ல, வானொலி, தொலைக்காட்சி, மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளிலும் பிரகாசித்தவர். அவருடன் கழித்த நிகழ்வுகள் நினைவுகளாக என் நெஞ்சில் பதிந்திருக்கின்றன.

அவரின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ந்து விட்டேன். இந்த அற்புத மனிதர் என் ஆரம்ப அறிமுகத்தில் ஒரு அந்நியராகத் தோன்றினாராயினும், நாளடைவில் என் உணர்வோடும், செயலோடும் ஒன்றிணைந்து நெருக்கத்துக்குரியவரானார். அவரோடு கழித்த சில சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன.

சிலகாலம் நான் விகாரை ஒன்றில் வாசம் செய்த போது என்னிடம் அடிக்கடி வருவார். இரவிலும் தங்குவார். அச்சமயங்களில் இலக்கியம் சம்பந்தமாகவே அதிகமாக உரையாடுவார். புராணம், இதிகாசம், காவியங்கள் என்று எல்லா விஷயங்களிலும் ஈடுபாடு காட்டுவார். கருத்துக்கள் கூறுவார். இப்படி உரையாடும் சந்தர்ப்பங்களில் பலவிதமான சம்பவங்கள், கதைகள், கருத்துக்களையும் முன்வைப்பார். அவை யாவும் அருமையான கதைகளுக்கான கருக்களையும், மையங்களையும் கொண்டிருக்கும். அதில் ஒன்றுதான் ''கடமை'' (யுத்துகம) என்ற பெயரில் என்னால் உருவாக்கப்பட்ட தொலைக்காட்சி நாடகமாகும்.

இவரால் மொழி பெயர்க்கப்பட்ட ''அடிமைகள்'' என்ற வட இந்தியக் கவிதையை நான் வாசிக்க நேர்ந்த பொழுது அது ஒரு மொழிபெயர்ப்பென்றே கூற முடியாத அளவுக்கு தத்ரூபமாக இருந்தது. மலையாளத்திலிருந்தும் நேரடியாகத் தமிழுக்கு பல கவிதைகளை மொழி பெயர்த்திருக்கிறார்.

இவரின் குட்டிக் கதைகளிலே வரும் உண்மைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களையும், சுரண்டப்பட்டவர்களையும் காணலாம். வானொலிக்காக இவர் எழுதித்தந்த சிறுவர்களுக்கான நாடகங்கள் மிகவும் பிரபல்யம் பெற்றவை.

இவரின் மறைவு இலக்கிய உலகுக்கு மட்டுமல்லாமல் சமூக மட்டத்திலும் ஒரு பேரிழப்பாகும்.

**மடுளுகிரியே விஜயரத்ன**

அவர் மொழி பெயர்த்த கவிதை ஒன்று;

*அப்பாலிருக்கும் போர்முனையே*
*என் பிறந்த மண்.*
*இல்லாமலிருக்கும் இம்மண்ணே*
*என்தாயகம்*
*இங்கிருப்பினும் நான் அங்கே பார்க்கிறேன்*
*கருஞ்செங்குருதி.*
*என் நண்பர்கள், தோழர்கள்*
*காலித், ரஹீம், அன்வர் எங்கேயென*
*விழிக்கிறேன்.*
*எப்படி நாட்களைக் கழிக்கின்றனர்?*
*இருட்டறையில் சிறைக்கைதிகளாய்*
*அடைபட்டனரா?*
*நிலைகொள்ளாது மனம்*
*அலைக்கழியுதே..!*
*அப்பாலிருக்கும் போர்முனையே*
*என் பிறந்த மண்.*
*இல்லாமலிருக்கும் இம்மண்ணே*
*என் தாயகம்.*

**நரேந்திரநாத் சக்கரவர்த்தி (வங்கம்)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## நோபல் பரிசு பெற்ற பெண் கவிஞர்:

# விஸ்லாவா ஸிம்போஸ்கா

*சர்வதேச ரீதியில் பெண்ணினம் எதிர்நோக்கும் சவால்கள், அடக்கு முறைகள், பலாத்காரம், என்பவற்றிற்கெதிரான அரசியல் ரீதியான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்என்று போராடியவர் பிரபல எழுத்தாளரான, 1996ம் ஆண்டின் இலக்கியத்திற்கான 'நோபல்' பரிசைப்பெற்ற விஸ்லாவா ஸிம்போஸ்கா என்ற பெண் கவிஞராவர்.*

*73 வயது நிரம்பிய விஸ்லாவா ஸிம்போஸ்கா தனது சுதந்திரமான வெகுஜனமயப்பட்ட கவிதைகளின் மூலம் சர்வதேச மதிப்பைப் பெற்றவர். தனது ஆளுமையான கருத்துக்களின் மூலம் சர்வதேச விருதுகளை தனதாக்கிக்கொண்ட ஓர் புலமைத்துவவாதி.*

*சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் ஸ்டொக்ஹோமில் வைத்து தனது நோபல் பரிசைப் பெற்றுக் கொண்ட தன் பிற்பாடு, தான் ஓர் இலக்கியவாதி என்ற நிலையில் சந்தித்த சவால்களும் தனது இலக்கிய அனுபவங்களும் இன்றைய நிலையில் தனது எழுத்தியலின் தன்மை பற்றியும் 'நியூஸ்வீக்' வார சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் தமிழாக்கம்.*

**நீங்கள் நோபல் பரிசைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு உங்களில் ஏற்பட்ட 'வாழ்நிலை' மாற்றங்கள் பற்றி விபரிக்க முடியுமா?**

ஒவ்வொரு நிகழ்வும் மாற்றமாகவும் தலைகீழாகவும் சென்றுகொண்டிருக்கின்றது. எனக்கு எழுதுவதற்கு போதிய நேரம் கிடைப்பதில்லை. ஏனெனில் இவ்விருதோடு சம்பந்தப்பட்ட பல நிகழ்வுகளில் நான் கலந்து கொள்ள வேண்டி இருக்கின்றது. இவ்வாறான நிகழ்வுகளை நான் ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு முன்பு விருதுகளைத்தட்டிக்கொண்டவரும், பிரபல ஜரிஸ்கவிஞருமான சீமஸ்(Seamus) அவர்கள்தனது புத்தகம் ஒன்றிலே ''விருது பெற்ற பின்பு நிலைமை எப்படியிருக்கும்?'' என்பதை விபரிக்கின்றார். அவருடைய வாசகத்திலே இருந்த உண்மையை இப்போது உணர்கின்றேன். எமக்குத் தெரியாத சொந்தங்கள் உறவினர்களாகத் தோற்றம் பெறுவார்கள். இழந்து போன பாசபந்தங்கள் வீட்டு வாசற்படியை வருகையால் நிரப்பும். நெருங்கி இருந்த சொந்தங்கள் எம்மை விட்டுப் பிரிந்து போகக்கூடும். நண்பர்கள் விரோதிகளாவார்கள்'' இவற்றினை உணர்வுபூர்வமாக இப்போது அறிகின்றேன்.

சுற்றுலாக்கள், கருத்தரங்குகள், மேடைப்பேச்சு என்பவற்றிற்காக அழைககப்படுகின்றேன். இவற்றில் மேடைப்பேச்சிலிருந்து நான் ஒதுங்கிக்கொள்ள முயற்சி செய்கின்றேன். எனது இலக்கிய வாழ்வில் 3 முறைகள் மாத்திரம்தான் மேடைப் பேச்சிற்காக என்னைத் தயார்படுத்தியுள்ளேன். அவற்றை ஓர் சித்திரவதையாகவேகருதுகின்றேன்.

**இவ்விருதின் மூலம் ஏதாவது சிக்கலைச் சந்திக்கிறீர்களா?**

ஆம் ஒரு வகையில் நான் சில சிக்கல்களை சந்திக்க வேண்டியுள்ளது. ஏற்கெனவே நான் சந்தித்திராத பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. சட்டப் பிரச்சினை தலைதூக்கியுள்ளது. பல உடன்படிக்கைகளுக்கு நான் கைச்சாத்திட வேண்டியுள்ளது. இலக்கியம் செய்த எனக்கு இவை யாவும் புதுமையாகவே தெரிகிறது. கவிதை படைக்கும் நிம்மதியான அமைதிச் சூழ்நிலைக்கு திரும்புவதற்கு நீண்ட நாள் எடுக்கும் என்று நினைக்கின்றேன்.

**எவ்வாறிருப்பினும் இப்புகழின் மூலம் உங்களுடைய படைப்பு பல புதிய வாசகர்களை சென்றடை யுமல்லவா?**

ஆம். அவற்றினை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இது எனக்கு மகிழ்வையும் உளப்பூரிப்பையும் ஏற்படுத்துகிறது. அதேநேரம் ஒரு முக்கிய விடயத்தையும் கவனிக்க வேண்டியுள்ளது. விளம்பரத்தினால் விற்கப்படுகின்ற ஓர் வியாபாரப் பண்டம் கவிதையல்ல; கவிதைக்கென்று ஓர் த னித்துவம் இருக்கின்றது. கவிதைத்தொகுப்பின் சந்தைப் பெறுமானத்தை வைத்து அக் கவிதையை எடைப்போடக்கூடாது. நவீன காலத்துப் படைப்பாளிகள் தெரியவேண்டிய உண்மையென்ன வெனில், உலகின் குறுகிய குறிப்பிட்ட வட்டமே வாசிப்பில் ஆர்வம் காட்டுகின்றது. எல்லோரும் கவிதைகளில் ஆர்வம் கொண்டவர்களும் அல்ல. எல்லோருக்கும் அத்தேவையும் இல்லை. பலர் என்னுடைய கவிதைகளை வாங்குகின்றனர். இது என்னுடைய கவிதைகளின் கருத்தியலினால் ஏற்பட்ட தாக்கம் என்று நான் நினைப்பதில்லை. வெளிப்பகட்டுக்காவும் சிலர் கொள்வனவு செய்கின்றனர். இதனைவைத்துக்கொண்டு எனது படைப்புகள் பற்றி நான் பெருமைப்பட முடியாது.

கருத்தியலின் தாக்கத்தினால் உந்தப்பட்டு, சிந்தனை ரீதியான மறுமலர்ச்சி, கவித்துவ மோகம் என்பனவே வாசகனை கவிதையின் பக்கம் அழைத்துச் செல்ல வேண்டும். அப்போது தான் படைப்பாளியின் வேட்கையும், குறிகோளும் நிறைவேறும்.

அறிஞர்கள், சிந்தனைவாதிகள், தத்துவவாதிகள் என்போர்கள் கவித்துவ இலக்கியம் பற்றிய உணர்திறன் அணுகுமுறை அற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். இவற்றில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லையே?

**நவீன கவிதையியலின் தன்மை பற்றியும் (Contemporary Poet) கட்டற்ற கற்பனைக் கவிதையியல் (Romantic) பற்றியும் கூறமுடியுமா?**

றொமான்றிக் கவிதையில் கவிஞன் தனது கருத்துக்களின் மூலம் இறைமை பொருந்தியவனாகக்காணப்பட்டான். அதேநேரம் உலகிற்கு தனது கருத்துக்களை வற்புறுத்து பவனாகவும் விளங்கினான். நவீன கவிதையில் உண்மை நிலையினை உயர்த்திச் சொல்லும் தன்மை காணப்படுகிறது.

**அரசியல் மாற்றங்கள் உங்கள் கவிதையில் தாக்கத்தை ஏற்படுத்தியதா?**

1956ம் ஆண்டிற்கு பின்பு இருந்து தொடர்ச்சியாய் ஒரே கட்சியிலேயே இருந்து வருகின்றேன். அரசியல் ரீதியான கவிதைகளையும், அரசியல் சார்பு நிலைமை யினையும் எனது படைப்புக்குட்படுத்துவதில் இருந்தும் நான் தவிர்த்து வருகின்றேன். மக்களின் அன்றாட அணுகுமுறைளோடு எனது கவிதையியலைத் தொடர்பு படுத்தி வருகின்றேன்.

**'பெண்ணியல் புரட்சிக்கு' முன்னோடியாய் தங்களை மக்கள் அழைப்பது பற்றி...**

அப்படி எதையும் என்னால் காண முடியவில்லை. நான் எழுதிய 'Potrait of a woman' கவிதையிலே பெண்களின் அவல நிலை பற்றி குறிப்பிட்டிருந்தேன். ஆனால் ஆண்களை முற்றாக எதிர்க்கின்ற பெண்ணியல் வாதிகளுள் ஒருவராக என்னை அடையாளம் காட்டவில்லை. ஆண்களை மிகவும் விரும்புகின்றேன். பெண்கள் மீதான அடாவடித்தனம், அடக்குமுறை, துஷ்பிரயோகம் அதிகரிக்கும் போது பெண்ணியல் வாதத்தை ஆதரிக்கின்றேன். உதாரணமாக ஈரானில் பெண்கள் மீதான நடவடிக்கைக்கு பெண்ணியல்வாதம் அவசியமானது. 'எப்போதும்' ஆண்கள்மீதான எதிர்ப்பு ஓர் மிதமிஞ்சிய நடவடிக்கையே.

**பழைய அஞ்சல் அட்டை (Post card) சேகரிப்பதில் நீங்கள் விரும்பு அதிகம் உடையவராம்?**

ஆம், எனது பொழுதுபோக்குகளில் அதுவும் ஒன்று. என் இளவயதில் இருந்தே அதை மேற்கொண்டு வருகின்றேன். மனிதருக்கு இருக்கின்ற பல ரசனைகளில் இதுவும் ஒன்று.

**கற்பனையியலுக்கும் உளநிலைக்குமான தொடர்பினை ப் பற்றி...**

வயது மாற்றத்தின் அடிப்படையில் கற்பனை வளம் அதிகரிக்கிறது. சிறுவயதில் எமது உணர்வுகளை தொடாத விடயங்கள் இப்போது மாற்றமான உணர்வுகளைத்தருகிறது.

**வீட்டிற்கு விருந்தினர் வரும்போது பரிசுப்பொருட்கள் கொண்டு வருவதை விரும்புகிறீர்களா?**

(சிரித்துக்கொண்டே) ஆம், ஒவ்வொரு மனிதரிடத்திலும் ஏதாவது ஓர் சிறுபிள்ளைத்தனம் இருக்கும். இத்தன்மை என்றும் அவரிடத்தில் இருந்து மாறாது. இது பொதுவான தன்மை. சிறுபிள்ளையாய் நான் இருக்கும் போது பரிசுப்பொருட்களை அதிகம் விரும்புவேன். இது இன்னும் என்னை விட்டு நீங்கவில்லை.

*தமிழில்: ஐ. பயஸ் றெஸ்ஸாக்*

## ஹெராக்லிடஸ் ஆற்றில்

ஹெராக்லிடஸ் ஆற்றில் -
ஒரு மீன் இன்னொரு மீனை வேட்டையாடுகிறது.
ஒரு மீன் இன்னொரு கூர்முனை கொண்ட மீனால்
வேறொரு மீனை வெட்டித் துண்டாடுகிறது.
ஒரு மீன் இன்னொரு மீனை உருவாக்குகிறது.
ஒரு மீனில் இன்னொரு மீன் வாழ்கிறது.
ஒருமீன் தன்னை முற்றுகைப்படுத்தி விட்ட
இன்னொரு மீனிலிருந்து தப்பிச் செல்கிறது.

ஹெராக்லிடஸ் ஆற்றில் -
ஒரு மீன் இன்னொரு மீனை விரும்புகிறது.
அது சொல்கிறது:-
உன்னுடைய கண்கள் வானத்து மீன்களைப் போல்
பளிச்சிட்டு மின்னுகின்றன
ஓ! மீன்களின் உலகத்தின்
அதிசிறந்த அழகே..
பொதுமைக் கடல் நோக்கி
உன்னுடன் நான் ஒன்றாக நீந்தி வரவேண்டும்.

ஹெராக்லிடஸ் ஆற்றில் -
மீன்களில் மேலான இன்னொரு மீனை
ஒரு மீன் கண்டுபிடிக்கிறது.
ஒரு மீன் இன்னொரு மீனுக்கு முன்னால்
மண்டியிட்டு நிற்கிறது.
ஒரு மீன் இன்னொரு மீனுக்காய் பாடல் இசைக்கிறது.
ஒரு மீன் இன்னொரு மீனை
இலகுவாய் நீந்தக் கற்றுத்தரக் கேட்கிறது.

ஹெராக்லிடஸ் ஆற்றில் -
மீன் மரத்துக்கும் மீன் கல்லுக்கும் கீழான
தனியே கவனிப்பாரற்றுக் கிடக்கும் மீனாகிய நான்
சில போதுகளில் சின்ன மீனுக்கு
வெள்ளிச் செதில்களால் இவ்வாறெழுதி வினவ
அவாக் கொள்கிறேன்.
"சங்கடத்தில் கண்ணிமைக்கிற போதானதா
இருட்டு!?"

●

**மூலம்: விஸ்லாவா ஸிம்போஸ்கா**
**ஆங்கிலத்தில்: ஜொனரெறிக்**
**தமிழில் : நில்ஷா**

# மடிந்து போன ஆண்டு

### ஆவணி நான்கு

தேமாமலரின் திரள்கள்,
காற்றில் கிளரக் கடலின் திரையென உயரத்தாழ,
விசையுறும் உள்ளம்.
மாலைப் பொழுதில்
ஆழக் கடலின் மோகத்துளிகள் மோதிச் சிதறும் கரையில்
தனியக் கிடந்தேன்.

### ஆவணி முப்பது

கடலின் மடியில் நிலவின் தடமும் அழியும்;
முகிலின் திரளில்.
பின்னிரவில் பேய்க்காற்றில் பேதலித்தலையும் மரங்கள்.
மென்முலையோடணையா மழலைக்குரலோ உயர்கிறது?

### புரட்டாதி பத்து

காற்றடங்கிப் பகலில் மேமலர்களில் தீ எரிந்தது.
இன்றோ,
ஓங்கார ஓலமிட்டு உலகத்தின் உதிர்வெல்லாம்
அள்ளிவந்தது சோளகம்
நெடிதுயர்ந்த ஆலமரத்தின் கீழ்
நிலவில் இரவில் பாடும் பைத்தியக்காரனுடன்
தனித்திருந்தேன்.

### ஐப்பசி இருபத்தியிரண்டு

இரவினில், எங்கிருந்தோ வரும் இசையுள் மூழ்குதல்.
கனவினுள் அமிழ்ந்து கடலுடன் பேசுதல்.
இல்லை எனில்
கண்ணீர் வழிய
தேமாமரங்களும் தேம்பும்

### கார்த்திகை பதினைந்து

இரவின் மீது இரைகிற காற்றில்
விருட்சங்களின் இலைகள் பேசுகின்றன.
நிலவைத் தழுவ எழும்பும் கடலின் அலைகள்
ஏங்கி விழுகின்றன.

### மார்கழி இருபத்தொன்று

மானுட ஆன்மாவின் புன்னகையைத் தேடி நடந்த
காலித் திடலின் நடுவில்
புல்லற்ற தடமோ நீள்கிறது
மழையில் நனைந்து,
நிலவில் தனித்த பூக்கள்
உதிரும்.

### மார்கழி இருபத்திரெண்டு

மாரிகால இரவில் புதைந்து
மண் எது? விண் எது?
கரை எது? கடல் எது?
என்றறியா இருளிலும்
ஆழியின் இசை எனத் திரள்வது எதுவோ?

### மார்கழி முப்பத்தியொன்று

நீண்ட தெருக்களில் நிராசை சிந்த
அதிகாலைக் கடலில் ஆடும் படகில்
வாழ்க்கை,
தீராக் காதலைத் தேடி, தீராத காதலில்
ஆறாத இன்பம் அருளும் மாயக்
குகையுட் போனதென்றார்.

நாளை நதிமுகக் கலப்பில் இன்பம் நுரைக்கையில்
நறுமலர்ப் பொய்கையின் பொன்தாது கொண்டு வரும் என்றார்.
போரும்
பொய்மையின் பாடலில் போயழிந்த காலமும்
போற்றிப்பாடும் புலவரை நொந்து போனதென்றால்
பொய்யாம்,

அச்சமும்
அச்சத்தின் கனவுகளும் பற்றிப் பிடித்தலைக்க
ஆதரவற்ற காலத்தில் அணைந்து கொள்ள
ஆருமற்றுப் போனதடி வாழ்வு

வாழ்வென்று எவர்சொன்ன வாழ்வும் வாழ்வல்ல.
என்றறைகிறது ஆழி.

எல்லாமும் மூடிய இருளிலும்
வெள்ளி அலை வீசி விண்ணின் ஒளி வீழ்த்தும்
என் இனிய கடலே
ஆழத்தின் ஆழத்தில் உறையும்
உன் மௌன வர்மத்தின்
துளி பருகி உயிர் நிறைந்து,
உயர்ந்து வரும் என் வாழ்க்கை,
என்றுன் கரையில்
மணலின் துகள்கள் எண்ணிக் காத்திருப்பேன்.

www.tamilarangam.net



# KRAURYA

## க்ரௌர்யா (கன்னடம்)



# அனைத்துலகத்திரைப்பட விழா : திருவனந்தபுரம் — 1997

### கே.எஸ்.சிவகுமாரன்

கொடூரம், குரூரம் ஆகிய தமிழ்ச் சொற்களை உணர்த்துவிக்கும் கன்னடமொழிச் சொல் 'க்ரௌர்யா' (KRAURYA). இந்தத் தலைப்பிலே டி.என். சீதாராம் என்பவர் ஒரு கதையை எழுதியுள்ளார். அதற்குத் திரை நாடகம் (Script) எழுதி, அதனைப் படமாக்கியிருக்கிறார் கிரிஷ் கஸரவல்லி (Girish Kasara valli). அவருடைய மனைவி வைஷாலி இப்படத்திற்கு ஆடை, அணிகலன்களைத் தேர்ந்தெடுத்துள்ளார். நெறியாளரின் படங்கள் அனைத்திற்கும் படப்பிடிப்பாளராக விளங்குபவர் எஸ். ராமச்சந்திரா. இந்தப் படத்துக்கு இசை எல். வைத்தியநாதன். சுமார் இரண்டு மணிநேரம் ஓடும் ஓர் அழகிய வண்ணத் திரைப்படைப்பு க்ரௌர்யா.

இப் படத்தின் நெறியாளராகிய கிரிஷ் கஸரவல்லி கன்னட மொழித் திரைப்பட நெறியாளர்களுள் முக்கியமானவர். கிரிஷ் கர்நாட் (Girish Karnad) போன்று இந்தியாவில் நன்கு அறியப்பட்ட ஒரு கலைஞர். பூனே திரைப்பட / தொலைக் காட்சிப் பயிற்சி நிலையத்தில் பயின்ற பட்டதாரி. கடந்த 20 வருடங்களுக்குள் ஆறு படங்களை நெறிப்படுத்தித் தந்திருக்கிறார். அப் படங்களுள் மனே (மனை/வீடு) குறிப்பிடத்தக்க ஒரு கலைத்தரமான படம். இவருடைய படங்களாகிய கட்டஷிரத்தா (Ghadtashiraddha), தபரண கதே (Tabarana Kathe), பன்னடா வேஷ் (Bannada Vesh) ஆகியனவிருது பெற்ற படங்கள். கர்நாடக மாநில திரைப்படச் சங்கம் இவருடைய படங்கள் அனைத்திற்கும் விருதுகளை வழங்கியுள்ளது.

1996ல் சிறந்த கன்னட மொழிப் படமாக க்ரௌர்யா தெரிந்தெடுக்கப் பட்டது. படத்தின் கதாநாயகி உயிர்த்துடிப்புள்ள ஒரு கிழவி.

மத்திய தர பிராமண வகுப்பைச் சேர்ந்த ஒரு வயதான பாத்திரம் படக் கதாநாயகி. மூன்று பரம்பரைகளின் பிரதிநிதிகளுடன் அவள் சம்பந்தப்படும் வேளையில், அவள் எதிர்நோக்கும் உறவுகளும், எதிர்பார்ப்புகளும், ஏமாற்றங்களும் கதையின் உள்ளடக்கம். ஆயினும், சினிமா என்ற ஊடகம் மூலம் கதை என்பது ஒரு புறமிருக்க, அசையும் படிமங்கள் (Moving Images) வழியாக கலைத்துவம் பரிவர்த்தனை செய்யப்படுவதே முக்கியமாகிறது.

உயர்ந்த திரைப்படத் திறனாய்வு மட்டத்தில், திரையில் கதை சாதாரணமானது என்ற கருத்தோட்டம் பரவலாக வரவேற்புப்பெற்று வரும் இவ் வேளையிலும் கூட, இந்தியப் படங்கள் என்னும் பொழுது, நாம் திரைக்குள் கதையே பிரதானம் என்ற நம்பிக்கையில் இருந்து வருகிறோம். எனவே, தற்காலிகமாக, திரைப்படத்துக்கு கதை அவசியம் என்று ஏற்றுக் கொண்டு, க்ரௌர்யா படக் கதையையும், பாத்திரங்களையும் சிறிது பரிசீலிப்போம்.

பார்வையாளரின் நலன் கருதி, இந்தப்படத்தின் கதைச்சுருக்கத்தைத் தயாரிப்பாளரே தந்துள்ளார். அதன் தமிழ் வடிவம் பின்வருமாறு.

''வயதானவர்கள், பலமிழந்தவர்கள் போன்றோர் மீது காட்டப்படும் குரூரத்தை / கொடுமையைப் படம் சித்திரிக்கிறது. அவர்கள் மீது கட்டவிழ்க்கப்படும் வன்செயல், இடம் பெறவில்லையாயினும் இட் படம் வன்முறையை உள்ளடக்குகிறது.

ரங்காஜி என்ற 70 வயது மாது, கிராமியக் குழந்தைகளுக்குக் கதை சொல்வதில் பெரு விருப்புடையவர். வாசு என்ற இவருடைய மகன் இறந்து போனதும், இவரைப் பராமரிக்க யாரும் இல்லை. இவருக்குத் தூரத்து உறவினர் ராஜண்ணா. இந்தக் கிழவிக்கு உதவும்படி ராஜண்ணாவை வற்புறுத்துகின்றனர். இவர் பட்டுப்பூச்சி வளர்ப்பதைக் கிழவி என்றுமே விரும்பியதில்லை. ஆயினும் பொறுத்துக் கொண்டு ராஜண்ணா குடும்பத்துடன் கிழவி வாழத் தொடங்குகிறாள். அக் குடும்பத்தில் இளைய மகன் மூர்த்தி. அவனுடன் பட்சமாய் கிழவி இருக்கிறாள். மூத்த மகன் சுப்பண்ணா பெங்களூரில் தொழில் பார்ப்பவன். ஆயினும் அவன் உழைப்பு குடும்பத்திற்கு அனுப்பக் கூடியதாக இல்லை. ஒரு நாள், பெற்றோரைக் காண சுப்பண்ணா வந்த பொழுது, அவன் நிலைமையறிந்து அவனுக்குக் கடனாக 10,000 ரூபாவை வழங்குகின்றாள். இப் பணத்தைக் கொண்டு அவன் தனியாக சோப் முகவர் நிலையம் ஒன்றைத் திறப்பதாக ஏற்பாடு.

சுப்பண்ணா பின்னர் தனக்கு உதவுவான் என்பது கிழவியின் எதிர்பார்ப்பு. அது மாத்திரமல்லாமல், தனது இறந்துபோன கணவனின் கூட்டாளிகளாகிய பத்மநாபையாவை பெங்களூரில் தொடர்பு கொள்ள உதவுவான் என்றும் எதிர்பார்த்தாள். ஆனால் சுப்பண்ணா தனதுஉறுதி மொழியை மறந்தான். அவனுக்கு அவன் பிரச்சினைகள். சுப்பண்ணாவுக்கு ரங்காஜி கிழவி சமைத்துப்போட உதவுவாள் என்று கருதியும், அவளிடமிருந்து விடை பெறவும், அவளை தன் இளைய மகன் மூர்த்தியுடன் பெங்களூருக்கு ரங்கண்ணா அனுப்பிவைக்கிறான். ஆயினும், ரங்காஜி அனாதைப் பிணமாகிறாள்.



கிரிஸ் கஸரவல்லி

இது படக்கதை, ஆயினும், இதனை மீறி சதையும், இரத்தமும், நற்குணங்களும், வெறுக்கத்தக்க அம்சங்களும் கொண்ட ஓர் உயிர்த்துடிப்புள்ள பாத்திரத்தின் கதை, மனதில் பதியும் வண்ணம் துரிதப் படிமங்களாகச் சித்திரிக்கப்படுகிறது.

கதை சொல்பவள் ஒருத்தியின் கதை- அவள் கடைசிக் காலத்தின் கசப்பான அனுபவங்கள் ஒன்று திரள்கின்றன. அவள் பழைய பரம்பரையைச் சேர்ந்தவள். பாரம்பரிய வித்தியாச விழுமியங்கள் மோதுண்டு, ப்ரேமுக்கு ப்ரேம் (Frame) முரண்படு அம்சம் நிறைந்த நாடகத் தன்மையை உண்டு பண்ணுகின்றன. ஆரம்பக் காட்சிகளிலேயே, அவளுடைய உயித்துடிப்பான, இளமை மனோபாவம், அவள் கதை சொல்லும் உத்தி (Technique), நகைச் சுவைப் பாணி, சிறுவர்/ சிறுமியர் ஆவலைத் தூண்டும் வண்ணம் பளிச்சிடும் விறுவிறுப்பான, அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என்ற ஆர்வத்தை உண்டு பண்ணும் குரல் ஏற்ற இறக்கச் செயற்பாடு- அத்தனையும், அவளை தனது வயதை மீறிய அண்மைக்கால தொடர்பாடல் வல்லுனராகக் காட்டுகின்றன.

படத்தின் ஷொட்களும் (Close up and Dissolves), படிமச் சேர்க்கைகளும் விறுவிறுப்பாகச் செயற்படுவதனால், நாமும் கதை கேட்டுச் சிரித்து மகிழும் சிறுவர்கள் போல் அனுபவத்தைப்பெற்றுவிடுகிறோம்.

கதாபாத்திரத்தின் வீழ்ச்சி வரப் போகிறது என்பதைக் கோடி காட்டுமாப் போல, முன் கூட்டியே எதிர்மறையான மகிழ்ச்சி நிலை மனோரதியப்படுத்தப்படுகிறது.

படத்தின் முடிவு, கிழவியின் மரணத்தில் முடிந்தாலும், ஒரு பிராமண வைதீகப்பெண், அசாதாரணமான, பவித்திரம் குன்றிய சூழலில் மரணிப்பது தான், காப்பியநாயகியின் பரிதாபகரமான வீழ்ச்சிக்கு ஒப்பாக அமைகிறது. இது ஒரு துன்பியல் நாடகமான (Tragedy) முடிவல்ல. மாறாக, அசட்டு அபிமான உணர்ச்சியை (Sentimental) தவிர்த்த, பச்சாதாப உணர்வைக் கிழவி மேல் நாம் செலுத்த உதவும் ஓர் நெருடல் படத்தின் மூலம் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

நாம் இந்தக்கிழவியை ஒரு சாதாரண மனுஷியாகவே (இது ஒரு சாதாரண / சராசரி மனுஷியின் கதை) பார்க்கிறோம். இலட்சிய வார்ப்புகள், தியாக உணர்வு கொண்ட உன்னத மனுஷியாக நாம் காணவில்லை. இந்த மனுஷி, சுயநலமும், பரம்பரைப் பெருமையும், கஞ்சத் தனமும் கொண்ட பெண்ணாக இருக்கும் அதேவேளை, லேசான இளகும் நெஞ்சம் கொண்ட, தாய்மை உணர்ச்சியுடன் இருப்பதையும் நாம் அவதானிக்கின்றோம்.

ஒரு கிழவியை நாயகியாகக் கொண்டு, அற்புதமான பாவங்களைத் திரையில் கொண்டு வர கைதேர்ந்த நெறியாளர்களினால் தான் முடியும். பாலு மகேந்திராவின் சந்தியாராகம் இந்த இடத்தில் நினைவுக்கு வருகிறது.

இந்தப் படத்தில் தொக்கி நிற்கும், சொல்லாமற் சொல்லும் ஒரு கருத்து நிலையும் இருப்பது போல் தெரிகிறது. ஏனெனில், பட நெறியாளர் கிரிஷ் கஸரவல்லி, தனது கூற்றாக இதனைத் தெரிவிக்கிறார்:

''பாண்டவர் கதையை இக் கிழவி கூறுகிறார். இவர் கூறுவதைப் போல இந்தப் பயணம் (கிழவி பெங்களூர் சென்று, கிராமம் திரும்பும் வழியில் இறந்து போகிறார்.) எதனைக் குறிக்கிறது? தருமர் என்ற காலில்லாமல், கர்ம வினைப் பயணம், முடிவில்லாத ஒரு பயணமா? அமைதி காண வேறிடம் செல்லும் பயணமா?''

அதாவது தருமம் என்பது, பலனை எதிர்பார்க்காது செய்யப்படவேண்டும் என்பது கிழவியின் பாத்திரத்தினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது விளக்கம். நெறியாளர் விளக்கம் எதுவோ அறியேன்.

இந்தப் படத்தின் நடிப்பு நலன் பற்றிக் குறிப்பிடவே வேண்டும். ரேணுக்கம்மா முருகோடு, கிழவி பாத்திரத்தில் நம்மை வசீகரிக்கிறார். இயல்பு குண வெளிப்பாடு கச்சிதம். எச். ஜி. தட்டாத்ரெய, விஜயா எக்குண்டி, விஷ்வாஸ், அசோக் ஹெக்டே போன்றோரின் நடிப்பு, நாடக பாணியாக மிகையாக இல்லாமல் இயல்பாக அமைகிறது.

நெறியாளர் கிரிஷ் கஸரவல்லியுடன் திரைப்பட விழாவின் போது நெருங்கிப் பழக முடிந்தது. இருவருக்கும் ஒரே இடத்திலேயே தங்குமிட வசதிகள் செய்து கொடுத்தனர். உண்மைச் சம்பவங்கள் சிலவற்றின் அடிப்படையிலும், ஒரு சிறுகதையைத் தழுவியும் இப்படத்தின் திரை நாடகத்தை தான் எழுதியதாக அவர் கூறினார். நமக்கு வயதாக வயதாக மனித உறவுகள் மிகவும் நொய்மையடைகின்றன என்பதையே இப் படம் காட்ட முனைகிறது என்றார்.

அவர்எப்படி ஒரு திரைப்படத்தை உருவாக்குகிறார்?

''முதலில் தகவல்கள் தரவுகளைச் சேகரிக்கிறேன். பின்னர் பாத்திரங்களை உருவாக்குகிறேன். அதன் பின்னர் அப்பாத்திரங்கள் எவ்வாறு இயங்கும் எனக் கற்பனை பண்ணிப் பார்க்கிறேன். அதன் பின்னரே திரை நாடகத்தை எழுதுகிறேன். ஒரு படத்திற்குப் படிமங்கள் (Images) எவ்வளவு முக்கியமோ திரைநாடகச்சம்பாஷணைகளும் (Dialogues) முக்கியந்தான். பாத்திரங்களுக்கிடையே உள்ள உறவைப் பரிவர்த்தனை செய்யச் சம்பாஷணையும் உதவுகின்றது.'' ●



www.tamilarangam.net



## இரு வாரங்களில்

**மார்ச்.3**

பதவிய பொலிஸ் காவல் நிலையத்தின் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு பொலிஸார், இரண்டு ஊர்காவல் படையினர் பலி.

**மார்ச்.5**

திருமலை-சீனன்குடா விமானத்தளத்தின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் வை.12 ரக விமானம் அழிக்கப்பட்டதுடன், எம்.24 ரக ஹெலிகொப்ரர் சேதமுற்றது.

**மார்ச்.6**

-வவுணதீவு படை முகாம் புலிகளின் கடும் தாக்குதலுக்கு உள்ளானதில் முகாம் நிர்மூலம் செய்யப்பட்டது. இதில் 91 புலிகள், நூற்றுக்கும் அதிகமான படையினரும் பலி. 800 மீற்றர் நீளமுடைய வலையிறவு பாலமும் தகர்க்கப்பட்டது.பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

-வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலை முறியடிப்பதற்காக படையினர் ஏவிய ஷெல்லுக்கு ஜெயந்தி எனும் 2 வயது குழந்தை பலி. 6 பொது மக்கள் படுகாயம். சின்னராசா (11), சரோஜினி (9), தங்கேஸ்வரி (20), ரமேஸ் (8), ஹரிச்சந்திரன் (16), பாக்கியம் (80) ஆகியோரே அவர்கள்.

-வவுணதீவு, வலையிறவு பகுதியை நோக்கி படையினர் ஏவிய ஷெல்லினால் அரிசி ஆலையொன்று சேதமுற்றதுடன் ஒருவர் பலியானார். ஒருவர் காயம்.

-செங்கலடி-கொம்மாதுறையில் பொது மக்கள் வாழும் பகுதியில் படையினர் ஏவிய ஷெல் தாக்குதலினால் ஒருவர் பலி. ஒருவர் காயம்.

-புதுக்குடியிருப்பை நோக்கி படையினர் ஏவிய ஷெல்லினால் ஆ.ரஞ்சிதபூஷனம் (53) எனும் ஒரு பெண் கடும் காயங்களுக்குள்ளானார்.

-கொம்மாதுறை படை முகாம் மீது புலிகள் நடாத்திய மோட்டார் தாக்குதலில் குறி தவறி விழுந்த ஷெல்லினால் சா.சுமதீபன் (10), க.மகேஸ்வரன் (54), ஜெ.சாந்தி (32 வயது கர்ப்பிணி) ஆகியோர் பலி.

**மார்ச்.8**

-சரவணையில் படையினரின் தண்ணீர் பௌஸர் ஒன்று கண்ணி வெடிக்கு சிக்கியதில் பொஸர் பலத்த சேதத்துக்குள்ளானதுடன் சாரதியும் கொல்லப்பட்டார்.

-வடகிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியிருக்கும்2,40,000 அகதிகள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாக பொது நிறுவனங்கள் விசனம்.

**மார்ச்.9**

கிண்ணயடியில் முருக்கன்தீவு கிராமத்தில் படையினரின் ஷெல் வீச்சினால் மு.சந்தனப்பிள்ளை (50) படுகாயமடைந்தார்.

**மார்ச்.10**

- மட்டு சிறைச்சாலையில் வி.உதயராஜ், எம்.கே.குலன், ரி.பாலகிருஷ்னன் ஆகிய தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதத்தை தொடர்ந்தனர்.

-வவுணதீவு தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நான்கு பேரில் செ.தம்பிப்பிள்ளை (52), நா.சதாசிவம் (52) ஆகியோர் வீடு திரும்பவில்லை.

-கொழும்பில் 350 விடுதிகளில் தேடுதல் நடாத்திய பொலிஸார், 475 தமிழ் இளைஞர்களை கைது செய்தனர்.

-வவுனியா நெலுக்குளத்தில் பொலிஸார் மீது இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸார் ஒருவர் பலி. ஒரு கான்ஸ்டபிள் இரு பொது மக்கள் படுகாயம்.

**மார்ச்.11**

-அநுராதபுரத்தில் படையினர் ஒருவரால் ஒரு பெண் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டதை விசாரிக்க முயன்ற பொலிஸாருக்கும் படையினனுக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில், படையினனும், ஒரு ஊர் காவல் படை பெண் ஒருவரும் பவலியானதுடன், சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

-கடுவல பிரதேசத்தில் நடத்தப்பட்ட ஜே.வி.பி.யினரின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின் போது ஆளுங்கட்சி ஆதரவாளர்களால் ஜே.வி.பியினர் தாக்கப்பட்டதுடன் தேர்தல் மேடையும் சேதப்படுத்தப்பட்டது.

**மார்ச்.12**

-வவுனியா சந்தைப்பகுதியில் சுஜிதா (24), மேகநாதன் ஜெயசுதா (22) ஆகிய இரு இளம் பெண்களின் பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன.

**மார்ச்.13**

-சாளம்பைக்குளம், பம்பைமடு இராணுவ காவலரண் மீதான புலிகளின் தாக்குதலில் இரு படையினர், ஒரு புலி பலி. 6 படையினர் காயம். இதன் போது 5 காவலரண்கள் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டது.

-வட்டுக்கோட்டையில் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு படையினன் பலி.

-அரியாலையில் டிரக்டரொன்று கண்ணி வெடியில் சிக்கியது. இரண்டு பேர் காயம்.

-வெலி ஓயா-ஜானகபுர படைமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினால் செம்மலை, அலம்பில் மீனவ குடில்கள், வேலாங்கண்ணி ஆலயம் என்பன பலத்த சேதம் ஒருவர் பலி. பலர் காயம்.

**மார்ச்.14**

வவுனியா நொச்சிமோட்டை காவலரண் மீதான புலிகளின் தாக்குதலில் ஒரு படையினன் பலி. ஒரு படையினன் காயம்.

**மார்ச்.15**

-வாகரையின் மீது தாக்குதல் நடத்துவதற்கென ஆகாயப்படையினால் அனுப்பப்பட்ட "புக்காரா" விமானம் வானத்தில் வெடித்துச் சிதறியது. விமானி குதித்து தப்பினார்.

-கொழும்பு பௌத்த சம்மேளனத்தில் "சிங்கள ஆணைக்குழு"வின் விசாரணைகள் நடந்தன.

-மருதங்கேணியில் பயணிகள் பஸ் வண்டியொன்று கண்ணி வெடிக்கு சிக்கியதில் இரு பொதுமக்கள் பலி. 8 பேர் காயம் என பாதுகாப்பு அமைச்சு அறிக்கை.

-வவுனியா-குடாதுட்டுவாகையில் பொலிஸ் காவலரண் மீதான புலிகளின் தாக்குதலில் பொலிஸார் ஒருவர் காயம்.

**மார்ச்.16**

-மன்னாரில் பொலிஸார் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் பொலிஸார் ஒருவர் பலி. நான்கு பொது மக்கள் காயம்.

-மட்டு-இருதயபுரத்தில் பொலிஸ் சீருடை தரித்தவர்கள் மேர்வின் திக்கஸ் (54) எனும் பெண்ணை வீடு புகுந்து சுட்டுக்கொலை செய்தனர்.

## வல்லைக்கு அப்பால் போனால்! தொல்லை!

வடமாராட்சிக்குள் செல்பவர்களில் 40 வயதுக்குட்பட்டவர்கள் வல்லையில் உள்ள படையினரின் சோதனை நிலையத்தில் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து அவர்கள் தரும் 'பாஸ்' அட்டையை தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும்.

திரும்பி வரும்போது அந்த 'பாஸை' ஒப்படைத்து தமது அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னர் வெளியிடங்களில் இருந்து வடமாராட்சிக்கு வருவோர் தமது பகுதி படை முகாம்களில் இருந்து அனுமதிக்கடிதம் வாங்கி வந்தாலே வல்லைக்கு அப்பால் போக முடியும்.

இதே நேரம் பெப்.19 அன்று கரணவாய் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய படையினர் இரு இளைஞர்களை பிடித்துச் சென்றுள்ளதாக 'வடமராட்சி மக்கள் குழு'வுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொக்குவில்: துண்டிக்கப்பட்ட மனிதத் தலை!

வலிகாமம் பகுதிகளில் அடிக்கடி சுற்றிவளைப்பு, தேடுதல், கைது என்பன இடம்பெறுகின்றன. சங்கானை, சித்தங்கேணி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய் போன்ற பகுதிகளில் இச்சம்பவங்கள் நடைபெறுகின்றன.

அத்துடன் மோதலில் சம்பவங்களும் இடையிடையே ஏற்படுகின்றன. அடையாளம் காணப்படாத சடலங்கள் பொலிஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலைகளில் ஒப்படைக்கப்படுகின்றன. இவற்றை எவரும் அடையாளம் காட்ட வருவதில்லை. இச்சடலங்கள் புலிகளின் சடலங்கள் என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

பெப்.28 அன்று கொக்குவில் பகுதியில் துண்டிக்கப்பட்ட மனிதத் தலை வீதியில் காணப்பட்டது. இதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவியதுடன் மக்களின் நடமாட்டமும் குறைந்து காணப்பட்டது.

## பெண்களிடம் படையினர் தொல்லை!

யாழ்.இராசாவின் தோட்டம் பகுதியில் உள்ள வீடுகளுக்கு சிவில் உடையில் செல்லும் படையினர் அங்குள்ள பெண்பிள்ளைகளை அடையாள அட்டை கேட்டு விசாரிக்கின்றனர். புகையிரத நிலையத்துக்கு அருகில் வாழும் இளம் பெண் ஒருவர் தனியாக இருந்தபோது ஒரு சிவில் உடை தரித்தவர் அடையாள அட்டை கேட்டு வீட்டினுள் போனபோது அப்பெண்மணி ஒருவாறு வெளியே வந்துவிடவே உறவினர்களும் சேர்ந்துவிட்டனர். வந்தவர் அடையாள அட்டையைப் பார்த்துவிட்டு போய்விட்டார்.

புகையிரத நிலைய வீதிச் சந்தியில் காவலரணுக்கு அருகில் உள்ள வீட்டில் கத்தியுடன் ஒருவர் சென்றாராம். இது குறித்து அப்பெண்ணின் கணவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளார். அப்பெண்ணின் கணவர் பெரும்பான்மை இனத்தவராவார்.

## யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள்

பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவந்த யாழ்ப்பாணத்தில் இன்று உதயன், பாதுகாவலன், உதயதாரகை, ஆகியன வெளிவருகின்றன. ஆனால் வீரகேசரி, தினகரன், டெயிலிநியூஸ், ஒப்சேவர் என்பன விமான மூலம் வருகின்றன. மக்கள் இதனை அதிகமாக வாங்கிப் படிக்கின்றனர். இவற்றில் வரும் செய்திகள் மறுநாள் உதயனில் வெளிவருகிறது.

தினகரன், டெயிலி நியூஸ் என்பன கடைகளிலும், படைமுகாம்களிலும், சென்ரிகள் முன்பாகவும் விற்பனையாகின்றன.

4→

## மறியல்...

மணிவண்ணனுக்குத் தகுந்த நீதி வழங்குமாறும், அது பற்றிய அறிக்கையை ஜனவரி 31க்கு முன்னர் தனக்கு அனுப்பிவைக்குமாறும் தலைமைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தியைப் பணித்துள்ளார். மணிவண்ணனுக்கு அநீதி இழைக்கப்பட்டதை ஏற்றுக்கொண்ட தலைமைச் செயலாளர் மேலதிக நேரக் கொடுப்பனவு, இரண்டாவது நியமனக் கடிதம் பற்றிய விசாரணை என்பவை உடனடியாகச் செய்யப்படுமெனவும் சேவை உறுதிப்பாடுமே மாதத்தில் வழங்கப்படுமெனவும் ஆணையாளருக்குக் கடித மூலம் தெரிவித்துள்ளார்.

ஆனால் பெப். இறுதிவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் தொழிற்சங்கம் ஆர்ப்பாட்டமொன்றைச் செய்ய வேண்டியயேற்பட்டதாக பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

சோமபாலாவை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற கோஷமும் மணிவண்ணனுக்கு நீதி வழங்கு என்ற கோஷமும் சங்கப் பிரதிநிதிகளால் உற்சாகமாக எழுப்பப்பட்டன.

மத்தியானம் பிரதிப்பிரதம செயலாளர் க. பரமலிங்கத்துக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமான பேச்சுவார்த்தையில் ஈ.பி.டி.பி. பா.உ.மு. சந்திரகுமாரும் உடனிருந்தார். நகரசபைத் தலைவர் பொ. சூரியமூர்த்தி அங்கு காணப்பட்டாராயினும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை.

இரண்டு வாரங்களுள் முதலிரண்டு கோரிக்கைகளைக் கவனித்து ஆவண செய்வதாகக் கூறிய பிரதிப் பிரதம செயலாளர் சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல் எரிபொருள் நிலையத்தை கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்காமலிருத்தல், நிர்வாகச் சீர்கேட்டைக் களைதல் என்பன பற்றி ஆளுநரும் தொடர்பு கொண்டு காலப்போக்கில் நடவடிக்கை எடுப்பதாயும் உறுதியளித்தார்.

கோரிக்கை நிறைவேற்றாவிட்டால் இரண்டு வாரங்கள் கழித்து மீண்டுமொரு தொழிற்சங்க நடவடிக்கை பற்றி ஆராயப்படும் என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ள அதேவேளையில், மாகாண சபை ஊழல் இயந்திரமாக மாறிவிட்டது என்ற பரவலான அபிப்பிராயம் மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொது மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

*விவேகி*

9→

## திருமலை...

ஒருவருக்கும் மாத்திரமே நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. இம்முறையானது அதிகமான முஸ்லிம்களின் அதிருப்தியை வெளிக் காண்பிக்கக்கூடியதாகவும், புதிய பட்டியலின் பிரகாரம் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சிங்கள மக்களின் அதிருப்தி காணப்பட்டமையினாலும், திருகோணமலை சு. கட்சி அமைப்பாளர் தயானந்த ஜயவீர அவர்கள் அதிருப்தியைப் பகிரங்கப்படுத்தியதையும் காணக்கூடியதாக இருந்தது. திருகோணமலை ஸ்ரீ.ல.மு.கா அமைப்பாளரினால் பட்டணமும் சூழலும் பிரதேசத்தில் முஸ்லிம் கி/உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் மற்றும் முஸ்லிம்கள் அதிகளவில் வாழும் கி/உத்தியோகத்தர் பிரிவுகளுக்குமான நியமனங்களை மறுபரிசீலனை செய்வதற்கும், மற்றும் முற்றும் முழுதான பாதுகாப்பிற்குள்ளான மூதூர், தம்பலகாமம் (முஸ்லிம் பகுதிகள்) பிரதேசத்திற்கும் குச்சவெளி பிரதேசத்தின் பல முஸ்லிம் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளுக்கும் மேற்படி நியமனங்களை உடன் வழங்குவதற்கு சமுர்த்தி ஆணையாளரால், அமைச்சர் எம். எச்.எம்.அஷ்ரஃப், பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் திருமலை பா.உ. நஜீப் அப்துல் மஜீட் அவர்களிடமும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

*தி/இளையவன்*

20→

## வவுனியா..

25 லட்சம் ரூபா பணத்துடன் வந்த கூட்டுறவுச்சங்க ஊழியர் ஒருவரும் பணத்துடன் காணாமற் போயுள்ளார். புளொட்டின் திருமலை அரசியல் பொறுப்பாளராயிருந்த அர்ச்சுனா என்ற நபரும் கொல்லப்பட்டிருக்கிறார். இக்கொலைக்கு புளொட் இயக்கமே பொறுப்பு என்று பெருமளவில் சந்தேகிக்கப்பட்டது. மலர் மாளிகை என்ற பெயரில் புளொட்டின் சித்திரவதை முகாம் ஒன்றும் வவுனியாவில் இயங்கி வருவதாக வேறு ஒரு செய்தி கூறுகிறது.

இதேவேளை சுப்பிரமணியம் என்ற வர்த்தகர் கடத்திக் கொலை செய்யப்பட்டு, எரிக்கப்பட்டது தொடர்பாக சி.எஸ்.யு. பொலிசார் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். படையினரின் சித்திரவதை முகாம் ஒன்று விமானப்படையினரின் முகாமினுள் இயங்கி வருவதாகவும் பேசப்படுகிறது.

வவுனியாவில் பல லட்சம் ரூபா செலவில் நவீன முறையில் கட்டப்பட்ட நீதிமன்றக் கட்டிடம் நிமிர்ந்து கம்பீரமாக நிற்கின்றது. வழக்குகள் நடைபெறுகின்றன. குற்றவாளிகளும் சந்தேக நபர்களும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுகின்றார்கள். தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கை அரசின் பொலிசாரும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகள் உள்ளனர். அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன.

இருந்தும் என்ன, மர்மக்கொலைகள் தொடரவே செய்கின்றன. இது ஏன் என்பது தான் எவருக்கும் புரியாமல் உள்ளது.


*சொக்கன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வாசகர் சொல்லடி



## தமிழ் நண்பர்களின் மௌனம்

'சரிநிகர்' கிட்டியது. ஒட்டமாவடி நிகழ்விற்கு முன்பக்கம் வழங்கியதற்கு எமது நன்றிகள்.

நிலைமை இன்னமும் சீராகவில்லை போல் தெரிகிறது. பெப். 19இல் சமாதானக்கூட்டம் இடம்பெற்றது. பெப். 21இல் வாழைச்சேனைக்குப்போனேன். தமிழ்ப்பகுதிக்குள் செல்லவேண்டாம் என் தமிழ் நண்பர்கள் வினயமாகக் கேட்டுக் கொண்டார்கள். அப்படியென்றால் சாதாரண தமிழ் மக்கள் என்னையும் கொன்று போடுவார்களா அல்லது புலிகள் தான் கொல்வார்களா?

நாமெல்லாம் பொலிஸில் கூடியதன் பொருளென்ன? என்றெல்லாம் கேட்டேன். அவர்கள் மௌனமாகவே இருந்தார்கள். இது என்ன கோலம்? ஒன்றும் புரியமாட்டேனெகிறது. இன்றுடன் கடலுக்கு வள்ளங்கள் மீன்பிடிக்கப்போய் 15நாள்கள். 1 கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம். நாளாந்தம் மீன்பிடித் தொழிலால் ஐயாயிரம் குடும்பங்கள் வாழ்ந்தன. அவர்கள் பாடு பெரும் பாடு!

தமிழ்ப்பகுதியிலிருந்து வரும் ஏராளமான பெண்கள் (மரக்கறி வியாபாரம்) எமது பகுதிக்கு இன்னமும் வரவில்லை. இப்போதைக்கு நீங்கள் போகக்கூடாதென்று அவர்களுக்குக் கட்டளைப் பிறக்கபிக்கப் பட்டுள்ளது போல் படுகிறது.

எல்லா மக்களும் கஷ்டப்படுகிறார்கள். புலிகளுடன் நாங்கள் சண்டை பிடிக்கும் நிலையில் இல்லை. எமது கையில் ஆயுதம் இல்லை. ஊர்க்காவல் படையும் இன்று எமது படையாகயில்லை. கோழிச்சண்டை, கஞ்சாச்சண்டையெல்லாம் வரிந்து எமது வீட்டு வாசல்களுக்குக் கூட்டிவரும் படையாய் மாறிவிட்டது.

கறுவாக்கேணி காவலரணில் யாரும் கொல்லப்படவில்லை. ஆரம்பத்தில் வந்த கதை பொய். ஆனாலும் அவர்கள் அப்பாவி மக்களைக்கொல்லுவதில் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். (பவுசரில் வந்தவர்கள்) எமது அடுத்த வீடு கறுவாக்கேணி. ஏன் இந்தக் குரோதம் வந்தது? எப்படி வருகிறது? புரியமாட்டேனெகிறது.

உயிருக்குயிரான தமிழ் நண்பர்கள் கூட மௌனம் சாதிக்கிறார்கள். அச்சமாக இருக்கிறது. ஒட்டுமொத்தத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அவலம் எமக்கு ஏற்படாது என்று சொல்ல எனக்கு ஓர்மம் இல்லை. தமிழ் நண்பர்களின் மௌனம் புலிகள் ஏவிய மோட்டார் குண்டுகளை விடவும் பயங்கரம் போல் படுகிறது.

கொல்லப்பட்ட தமிழ் மக்கள் மூவரில் ஒருவர் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. அது யாரோ? சிலவேளை முஸ்லிமாகக்கூட இருக்கலாம்.

1985ல் ஒட்டமாவடி இனச்சங்காரம் பிரபுதேவா பாணியில் ஊர்வசி ஆட்டம் போட்டபோது மீராவோடைச் சகோதரர் ஒருவரையும் கொல்லப்பார்த்தார்கள். அப்படியாராவது கொல்லப்பட்டிருக்கலாம்.

அடுத்து பெப்.14ல் எமது பகுதிக்கு மோட்டார் குண்டு இரவு 9 மணிக்கு அடிக்கவிருக்கிறார்கள் என்ற செய்தியும் எமக்கு பெப். 14ல் 5மணிக்கே சில நல்ல தமிழ் நண்பர்களால் எத்தி வைக்கப்பட்டதும் உண்மை. முன்கூட்டியே நாம் முடிந்தளவு பாதுகாப்பாயிருந்தோம்.

பெப். 20இல் இடம்பெற்ற சமாதானக்கூட்டத்தில் எஸ்.எஸ்.பி. அவர்களிடம் நான் ஓர் அனுமதி கேட்டேன். அதாவது முஸ்லிம்களின் வாசல்களில் பலமுள்ள பங்கர்களை அமைக்க அனுமதி கேட்டேன் அவர் மறுத்துவிட்டார், இருந்தாலும் ஊரில் பங்கர்கள் ஆங்காங்கே அமைத்தார்கள்.

இலக்கு பற்றி ஆழ்வார்க்குட்டியை நாலுவரி எழுதுச் சொல்லுங்கள்.

***எம்.எச்.,***
***ஒட்டமாவடி***

## தினகரனின் பயங்கரவாதம்!

ஏரிக்கரைப் பத்திரிகையில் தொடர்கதையில்லாத ஒரு பாரிய குறையை சோ.ராமேஸ்வரன் 'நிறைவு' செய்திருக்கிறார். அரசின் ஊதுகுழலுக்கு விஷப்புகை காட்டியிருக்கும் ராமேஸ்வரன் அவர்கள் தனது வரண்டுபோன இலக்கிய வளர்ச்சிக்கு தீனியும், பணமும் தந்தவர்களுக்கு எஜமானிய விசுவாசத்துடன் வாலாட்டியிருப்பது தொடரின் முதலாவது அங்கத்திலேயே தெட்டத் தெளிவாகியிருக்கிறது.

தங்களது உயிரைத் துச்சமென மதித்து பேரினவாத அடாவடித்தனத்திற்கு எதிராகப் போராடும் எமது தமிழ் இளைஞர்களை ''பயங்கரவாதிகள்'' என்று கூறத் துணிந்தது அவரின் இலக்கிய வரட்சியையே காட்டுகிறது. போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழ் இளைஞர்களை கொச்சைப்படுத்தும் நோக்குடனேயே ''வடக்கும் தெற்கும்'' ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அதற்கு தூய தமிழ்ப் பெயரை வைத்திருக்கும் சோ.ராமேஸ்வரன் எதனைப் பயங்கரவாதம் என்கிறார்?

தமிழ் இளைஞர்கள் தம் உரிமைக்காக உயிர் துறக்கும் போது தமிழ்ப் பொதுமக்கள் மீதான சிங்கள இராணுவத்தின் அத்துமீறல்களும், மனித வதைகளும் தொடரும் இவ்வேளையில் அதனையும் அம்பலப்படுத்த அவருக்குத் துணிவு வருமா? அறிவாளிகள் பார்த்து மதிப்புரை வழங்கியிருந்தார்கள். அவர்களின் கண்ணும் என்ன குருடா?

பயங்கரவாதிகளுக்கு ஒரு அற்புதமான விளக்கம் கொடுத்திருக்கும் ராமேஸ்வரன் ஆயுதம் ஏந்திய சிப்பாய்க்கு தட்டிக் கொடுத்திருக்கிறார். தமிழ்ப் போராளியை கொச்சைப்படுத்திக் குதூகலித்திருக்கிறார். ராமேஸ்வரன்கள் இருக்கும் வரை அரச அடிவருடிகளால் இலக்கியம் என்ற பெயரில் போராட்டம் கொச்சைப் படுத்தப் படுவது தொடர்ந்து கொண்டே இருக்கும்.

***அபூ - இஹ்ஹப்திகார் அஹமட்***
***கண்டி - மத்தி.***

## அரசியல் பிரச்சினை என்றால் என்ன?

சரிநிகர் இதழ் 116 இல் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்களின் நேர்காணல் ஒன்று இடம்பெற்றிருந்தது. அந்நேர்காணலில் தீகவாபி விவகாரம் தொடர்பாக கேள்வி ஒன்றுக்கான பதிலில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாட்டைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''தீகவாபிக்கு அப்பால் உள்ள காணிகளை நாம் வழங்குவதற்கு எடுத்த நடவடிக்கைகள் அரசியல் ரீதியாகப் பார்க்கப்பட்டதினால் அதனை நாங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம்''.

எவ்வளவு பாமரத்தனமான பதிலிது! அரசியல் ரீதியாகப் பார்ப்பது என்பதற்கும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் என்பதற்கும் ஏதேனும் அர்த்தமும் காலக்கெடுவும் முறையே உண்டா என்பது பற்றி பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தனது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் தெளிவுப்படுத்த கடமைப்பட்டவர். தீகவாபி பிரச்சினையை அரசியல் பிரச்சினையாகப் பார்க்காமல் எப்படிப் பார்க்க வேண்டுமென்று ஹிஸ்புல்லாஹ் கூறுகிறார். இனரீதியாகப் பார்க்கப்படல் வேண்டும் என்றா? இனரீதியாகப் பார்க்கப்பட்டதினால் தான் தீகவாபி பிரச்சினையே எழுந்துள்ளது என்பது அவருக்குத் தெரியாதா? அரசியல் ரீதியாகப் பார்க்கப்பட்டிருக்க வேண்டிய விடயங்கள் இனரீதியாக எடுத்துக் கொள்ளப்பட்டதாலேயே வடகிழக்கு தேசியப் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது என்பது ஹிஸ்புல்லாவுக்குத் தெரியாதா?

இந்த முஸ்லிம்களுக்கு ஒரு ஏக்கர் காணியைக் கூட வழங்க முடியாமல் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இருதயம் தாங்களே என்று கூறுகின்ற முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுடைய இந்த உரிமைப் பிரச்சினையை முன் வைத்து அரசாங்கத்திடம் நியாயம் பெற்றுத்தர முடியாமல் போனதற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியுமா? தீகவாபிக்கு தேவைப்பட்டால் எவ்வளவு நிலத்தையும் கொடுப்பதற்கு தான்தயார் என்றும் தீகவாபியை புனருத்தாரணம் செய்வதற்கு பல லட்ச ரூபாக்களை ஒதுக்கீடு செய்திருப்பதும் மாதிரிக் கிராமம் ஒன்றை தீகவாபியில் உருவாக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பௌத்த பீடத்தை தீகவாபியில் அமைக்கப் போவதாக கூறியிருப்பதும் முஸ்லிம் காங்கிரசின் தலைவர்தான் என்பது பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு தெரியாதா? இவை போதாது என்று எவ்வாறாயினும் ஒலுவில் துறைமுகம் ஒன்றை அமைத்தே தீருவது என்று சவால்விட்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பல்லாயிரக்கணக்கான சிங்களத் தொழிலாளர்களின் சட்ட பூர்வமான குடியேற்றத்திற்கு தீகவாபியே மையமாக அமையப்போகிறது என்பதையும் அறியாதவராகவா இருக்கிறார்?

நாளடைவில் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசம் சிங்கள மேலாதிக்கத்திற்குள் சென்று விடும் என்பது கூட பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு தெரியாதா? நிலத்தொடர்ச்சியான வடகிழக்கு தமிழ் மொழி பேசுவோரின் கரையோரப் பிரதேசத்தின் ஒருமைப்பாட்டை துண்டாடும் முயற்சி இன்று தமிழ் மொழி கைக் கூலிகளால் தொடக்கப்பட்டிருக்கிறது என்பதே தீகவாபி விவகாரம் தொடர்பாக பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கூறியிருக்க வேண்டிய ஒரேயொரு உண்மையாகும்.

***ஏ.சி.ஏ.பதுருதீன்,***
***பிரதித் தலைவர்,***
***ஸ்ரீலங்கா முஸ்லிம்கட்சி.***

## கவர்ச்சியும் கலாபூர்வமும்

சரிநிகர் 116வது இதழில் கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் எழுதியிருந்த 'திரைப்படத்தின் தாக்கமும், பெண்களின் வாழ்நிலையும்' என்ற கட்டுரையில் இருந்த சில விடயங்கள் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கின. விமர்சனத் துறையில் முன்னணியில் விளங்கும் கே. எஸ். சிவகுமாரன் அவர்கள் பெண்ணுரிமை பற்றி பல நல்ல கருத்துக்களை முன்வைத்திருந்தாலும் அவரது அடிப்படையான பெண்ணியம் பற்றிய பார்வை குறைபாடு கொண்டதாக இருப்பது துரதிருஷ்டவசமானது.

அவரது கட்டுரையில் ஒரு பகுதி இப்படி வருகிறது; ''பெண்களின் அழகையும், கவர்ச்சியையும் கலாரீதியாக இரசிக்கும் வண்ணம் காட்டாது மலினமான முறையில் அவர்களைச் சித்திரிப்பதனால், அறிவு, அனுபவம், பக்குவம் பெறாத பார்வையாளர்கள் பெண்களை கேவலமாக இரசிப்பதும், பார்ப்பதும் ஒரு தாக்கத்தை உண்டு பண்ணி பெண்களின் அந்தஸ்தையும், வாழ்நிலை மேம்பாட்டையும் உயர்த்துவதற்குப் பதிலாக கீழ் நிலைக்கு மேலும் மேலும் தள்ளுவதையே நாம் காண்கிறோம்.''

இதன் அர்த்தம் என்ன? பெண்ணுடலை 'நாறல் மீனை பூனை பார்ப்பது போல' பார்க்காமல் கலா பூர்வமாகப் பார்க்க வேண்டும் என்பதா? இது உண்மையில் பெண்ணைப் போகப் பொருளாகப் பார்க்கும் பாரம்பரியத்திலிருந்து வேறுபட்டதல்ல. பெண்ணியம் பெண்களைப் போகப் பொருளாகப் (அது எவ்வாறு பார்ப்பினும்) பார்ப்பதை அடிப்படையில் எதிர்க்கிறது.

பெண்ணின் உடல் அழகையும், கவர்ச்சியையும் எவ்வளவு கலாபூர்வமாகக் காட்டினாலும் என்ன, கேவலமாகக் காட்டினாலும் என்ன, அது அடிப்படையில் ஆண் மேலாதிக்க கண்ணோட்டத்தில் இருந்து உருவான பெண்ணைப் போகப் பொருளாக பார்க்கும் பார்வையே தான். நமக்குத் தேவை பெண்ணை பெண்ணாக சித்திரிப் பதேயன்றி ஆண்களின் கண்ணோட் டத்தில் பெண்ணைச் சித்திரிப்பத ல்ல.

பெண்ணின் உடல் பற்றிய பார்வைகள், வர்ணனைகள் அனைத்துமே ஆண்களின் போக அனுபவிப்புக்காக படைக்கப்பட்ட ஒரு பொருளே பெண் என்ற அர்த்தத்துடனேயே வெளிப்படுகின்றது. பெண் முழு மனிதப்பிறவி என்றோ அவளும் ஆண் போன்ற ஒரு சமுதாயப் பிராணி என்றோ இந்தப் பார்வைகள் கருதுவதில்லை. பெண்ணின் உடலை கலாபூர்வமாக சித்திரிப்பது பற்றிப் பேசுபவர்கள் அவள் ஒரு பெண் என்ற முறையில் படும் துயர்களை/ சந்தோசங்களைப் பார்ப்பதில், கவனஞ் செலுத்துவது நல்லது.

பெண் ஆண்களுடைய பாலியல் தேவைக்கான பொருள் அல்ல. மாறாக, பாலியல் ஆண் பெண் இருவரது உடல் சம்பந்தப்பட்ட தேவை மட்டுமே. மற்றப்படி பெண்ணுக்கும் ஆண் போன்ற தனித்துவமும் சமத்துவமும் உண்டு என்பதை பெண்ணியம் வலியுறுத்துகிறது. சரிநிகர் ஆசிரியர் பீடம் இவ்வாறான விடயங்களில் கவனஞ் செலுத்துவது நல்லது.

**ஔவை**
**கொழும்பு**

## நாங்களும் இலட்சிய வாதிகள்

சென்ற சரிநிகர் இதழில் ஐ.பயஸ் றெஸ்ஸாக் அவர்களால் எழுதப்பட்ட ''தீராத போராட்டம் கொழும்புப் பல்கலைக்கழகம்'' என்ற கட்டுரை நியாயமான கருத்துக்களை முன்வைக்கின்றது.

அத்தோடு கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் உண்மையான பிரச்சினைகளையும் இக்கட்டுரையானது வெளிக்கொணர்கின்றது.

மேலும் கட்டுரையாளர் தனது கட்டுரையின் ஓர் இடத்தில் ''தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு செயற்படுத்திய அடாவடித்தனம் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிரயோகிக்க முடியாது'' என்ற வாசகம் என்னைச் சிந்திக்க வைக்கின்றது.

பொலிசாரின் அடாவடித்தனத்தினால் பயந்து எமது கோரிக்கைகளை கைவிடவில்லை. மாறாக புதிதாக உருவாக்கப்பட்டு செயற்பட்டுவரும் பல்கலைக்கழகத்திற்கு எதுவித பங்கமும் ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்திலேயே எமது சிரேஷ்ட மாணவர்கள் நிருவாகத்துடன் இணைந்து போனார்கள். அத்தோடு தென்கிழக்கு மாணவர்கள் கொள்கைவாதிகளும் இலட்சியப் பேரர்களும் என்பதனை கட்டுரையாளருக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

***ஏ.எல்.முஸாதிக்,***
***முகாமைத்துவ பீடம்,***
***தென்கிழக்கு பல்கலைக்கழகம்.***

முழுநேர எழுத்துப்பணியில் ஈடுபடுகிற தீர்மானத்துடன் நான் செயல்படுகிறேன்.

எனது ஆய்வு, கலைப்படைப்பு முயற்சிகளிலும் அவற்றின் வெளியீட்டுப் பணிகளிலும் பங்கு பற்றவும், ஆலோசனை வழங்கவும், உதவவும் விரும்புகிற சகலரதும் தொடர்பை நாடி நிற்கிறேன்.

தொடர்பு விலாசம்:
V.I.S. Jayaypalan
Kamkaru Sevana
1/10, Athidiya Road,
Ratmalana.
Fax - 612142

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
'SARINIHAR'
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

# இன்றைய தேவை!

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து நடப்பதன் மூலம் தான், சமூகத்தில் ஜனநாயக உறவுமுறை பாதுகாக்கப்பட முடியும். ஒரு நாட்டில் உறுதியான ஜனநாயகம் நிலவ வேண்டுமேயானால் அதற்கு மனிதவுரிமையெனும் அத்திவாரம் உறுதியாக இருப்பது உத்தவாதப்படுத்தப்படல்.வேண்டும். உலகில் நிலவுகின்ற ஜனநாயக முரண்பாடுகள் எல்லாமே ஏதோ ஒரு வகையில் மனிதவுரிமை மீறல்களை அடிப்படையாக கொண்டவையாகவே இருக்கின்றன.

50 வருடகால 'சுதந்திர இலங்கையில்' அரசியல் ஜனநாயகமென்பது ஆளும் கட்சியின் பிரத்தியேக சொத்தாகவும், அது தேர்தல் காலங்களில் விலைபோகின்ற பண்டமாகவும் மாறியிருக்கிறது. இந்நிலமையானது நடைபெறவிருக்கும் தேர்தல் நடவடிக்கைகளிலும் மிகவும் தெளிவாக வெளிப்பட்டிருக்கின்றது.

1970 – 1977 கால ஆட்சியின் அடக்குமுறையையும் அரச பயங்கரவாதத்தையும் இனங்காட்டி ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தது. பின்னர், அவர்களின் 17 வருட இனவாத அரச பயங்கரவாத, ஊழல் ஆட்சியை விமர்சித்து பொது ஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது. இவர்கள் பதவிக்கு வந்த இரண்டரை வருடங்களாக தமிழர்களுக்கெதிரான காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஈடுபடுவதிலும், கட்சியின் நலன் கருதி அரச வளங்களை பயன்டுத்துவதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் 'சாதனைகளை' மிக விரைவில் மிஞ்சிவிடக் கூடிய விதத்தில் செயற்பட்டு வந்துள்ளார்கள்.

சமாதானத்துக்கான யுத்தமெனும் போர்வையில் தமிழர்களுக்கெதிராக யுத்தத்தையும் சிங்கள மக்களுக்கு சமாதானத்தையும் வலியுறுத்தி வந்த பொது ஜன ஐக்கிய முன்னணி இப்பொழுது மிகத் தெளிவாக சிங்கள மக்களினுடைய சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான உரிமையை முழுமையாக பறித்தெடுக்க முயற்சி செய்கின்றது.

உள்ளூராட்சி தேர்தல்களில் என்றுமில்லாதளவு அதிகார துஷ்பிரயோகங்களையும் தேர்தல் ஊழல்களையும் பொது ஜன. முன்னணி மேற்கொண்டுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட கொலைகளை படம் பிடித்து சுவரொட்டிகளிலே பிரச்சாரம் செய்வதன் மூலம், தாங்கள் அப்பழுக்கற்ற ஆட்சியை நடத்துவதாக கூற முற்படுகின்றது பொது ஜன ஐக்கிய முன்னணி. இவர்களின் 'ஜனநாயக கடமைப்பாட்டுடனான' ஆட்சிக்கு பல உதாரணங்களைக் கூறலாம். தமிழ் மக்களுக்கெதிராக நடத்துகின்ற பேரினவாதப் போரின் விளைவுகள், பொல்கொட வாவி, தியவன்னா ஓய, அளவ்வ போன்ற பிரதேசங்களிலே பிணமாக மீட்டெடுக்கப்பட்ட தமிழர்களின் கொலைகளுக்குப் பொறுப்பானவர்களென கைது செய்யப்பட்ட விஷேட அதிரடிப்படையினரை, நீதிமன்ற விசாரணை முடியும் முன்பே மீண்டும் சேவைக்கு அனுப்பியமை, எதிர்க் கட்சிகளுக்கெதிராக நடந்துகொள்கின்ற விதம் போன்ற பல்வேறு சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

அரச வன்முறைகளையும் இனவாத யுத்தத்தையும் ஊழலையும் எதிர்த்த, ஐக்கிய தேசியக் கட்சியை தோல்வியுறச்செய்த இந்நாட்டு வாக்காளர்கள் இப்பொழுது நீல வர்ணத்திலான ஒரு ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து விட்டோமோ என்று எண்ண வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வன்செயல்களுக்கும் அரச பயங்கரவாதத்துக்கும் இனவாதத்துக்கும் எதிராக வாக்களிக்க வேண்டுமானால், வாக்காளர்கள் தமது வாக்கையளிப்பதற்கான அபேட்சகர்களை வலைபோட்டுத்தான் தேட வேண்டும். சில வேளைகளில் எங்காவது ஒருசில நல்லவர்கள் போட்டியிடக் கூடும் மற்றபடி பயங்கரவாதத்துக்கும் இனவாதத்துக்கும் அரசியல் வன்முறைக்கும் எதிரான எவரையும் இக்கட்சிகளின் அபேட்சகர்கள் பட்டியலில் காண்பது அரிது. இது தான் இன்றைய யதார்த்தம்.

ஜனநாயகத்தின் மீதும் சமாதானத்தின் மீதும் ஆர்வம் கொண்ட வாக்காளர்கள் 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு வழங்கிய வாக்குகள் இன்று ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் இல்லாதொழிப்பதற்கு வழங்கப்பட்ட ஆணையாக மாறியிருக்கின்றன. இதன் விளைவாக மக்களுக்கேற்பட்டுள்ள மனவிரக்தியை இலங்கையின் எல்லா பாகங்களிலும் காணக்கூடியதாயிருக்கின்றது.

ஆனால் இந்த விரக்தி வெறும் விரக்தியாக நீடித்து விடக்கூடாது.

நாட்டில் ஜனநாயகத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதாகக் கூறி வாக்கு கேட்க வந்தவர்கள் அதைச் செய்யவில்லை, செய்யப்போவதில்லை என்பதை மக்கள் நாளுக்குநாள் அனுபவத்தினூடு புரிந்துகொண்டு வருகிறார்கள். இந்தப் புரிதல் ஒரு சமிக்ஞையாக, ஜனநாயகத்தை நிலை நாட்டும் பொறுப்பை தாமே பொறுப்பெடுத்துக் கொண்டு அதற்காக மக்கள் தாமே போர் கொடி தூக்குவதற்கான நாட்கள் நெருங்கிக்கொண்டு இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவதற்கான ஒரு சமிக்ஞையாக, இந்த விரக்தி அமைய வேண்டும்.

இதுவே இன்றைய தேவை!

**முன் பக்கத்தில் உள்ள படம்:**

*அரசியல்வன்முறைகளுக்கு எதிரான கூட்டமைப்பும் சுதந்திர தொடர்புசாதன இயக்கமும் இணைந்து மார்ச் 13ம் திகதியன்று தேர்தல் வன்முறைகளைக் கண்டித்து நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்டது.*

# வவுனியா: கொலையாளிகள் யார்?

இனந்தெரியாத ஆயுதமேந்திய நபர்களினால் மேற்கொள்ளப் படுகின்ற கொலைகள் வவுனியா வில் அவ்வப்போது இடம்பெற்று வருவது புதியதொரு சங்கதியல்ல.

1994ஆம் ஆண்டு உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் நடைபெற்ற வேளை ஆரம்பமாகிய இக் கொலைச் சம்பவங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

பொலிசாராலோ அல்லது இராணு வத்தினராலோ அல்லது இங்கு உள்ள தமிழ்க் கட்சிகளாலோ இக்கொலைகளின் சூத்திரதாரிக ளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது நகைப்பிற்கிடமாயுள்ளது.

பொதுமக்களைப் பொறுத்தமட்டில் கொலைகள் அவர்கள் மத்தியில் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றன.

இக்கொலைகளின் வரிசையில் மார்ச் 12ம் திகதி வவுனியா நவீன சந்தைக் கட்டிடப் பகுதியில் இரு இளம் பெண்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

இதுவரையில் 26 கொலைகள் இவ்வாறு நடைபெற்றுள்ளன. இவற்றில் பெண்கள் சுட்டுக்கொல் லப்பட்டுக் கிடந்தது இதுவே முதல் தடவையாகும்.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் மட்டுமல்லாமல் கழுத்து வெட்டப் பட்டு செய்யப்பட்ட கொலைகளும் நடைபெற்றுள்ளன.

கடந்த 8ம்திகதி சர்வதேச மகளிர் தினம் நாட்டின் பல இடங்களிலும் கொண்டாடப்பட்டது. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங் களிலும் மகளிர் தினம் கொண்டா டப்பட்டதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

வவுனியாவில் இத்தினத்தில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டதோ இல் லையோ, தெரியவில்லை. ஆனால் 4 தினங்களின் பின் 12 ஆம் திகதி யுவதிகள் இருவர் கொலை செய்யப்பட்டுக்கிடந்தார்கள்.

மேகநாதன் ஜெயசுதா(22), குமார சுவாமி சுஜித்தா(24) என அடையா ளம் காணப்பட்டவர்களே கொலை யுண்ட பெண்களாவர்.

இவர்கள் 6 மாதங்களின் முன்பு வவுனியாவுக்குள் வன்னியிலிருந்து வந்தவர்கள் என்றும், இவர்கள் ஒரு மாத பொலிஸ் வதிவிட (பாஸ்) அனுமதி பெற்றிருந்தார்கள் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மர்மக் கொலைகளுக்கு ஆளாகிய வர்களில் ஆசிகுளம் நலன்புரி நிலையத்திற்கு, யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் பொறுப்பில் பொறுப் பதிகாரியாக இருந்த சமூக சேவை உத்தியோகத்தரான ஸ்ரீதரனும், வன்னிச் சேவை (இலங்கை ஒலிப ரப்புக் கூட்டுதாபனம்)யில் பகுதி நேர அறிவிப்பாளராகக் கடமை புரிந்த ஆப்டீன் என்ற ஆசிரியராகிய முஸ்லிம் இளைஞனும் முக்கிய மானவர்கள்.

இவர்களை விட அடையாளம் காணப்படாத சுமார் 10க்கும் மேற் பட்டவர்களும் கொல்லப்பட்டுள் ளார்கள்.

அண்மையில் ஒரே இரவில் வைர வப் புளியங்குளத்திலும் வவுனியா மரக்கறிச் சந்தைப்பகுதியில் கூட் டுறவு மொத்த விற்பனை நிலையத் தின் முன்பர்கவும் இருவர் கொல் லப்பட்டுக் கிடந்தனர். இவர்களில் ஒருவர் தனது தாயுடன் இடம் பெயர்ந்து வந்து பூந்தோட்டம் அகதிமுகாமில் தங்கியிருந்து காணா மல் போனவர் என மரண விசார ணையில் தகவல் வெளியாகி யிருந்தது.

இது தவிர வன்னிப்பகுதியிலிருந்து

→ 15



வேண்டாம்!

அரசியல் வன்முறைகளுக்கு இடமளிக்க

வேண்டாம்!!

அடாவடித்தனங்களிலோ, மிரட்டல் கிரட்டல்களிலோ வேறு எந்த வன்முறைச் செயல்களிலோ ஈடுபடும் எந்தவொரு வேட்பாளரும் உங்கள் வாக்கைப்பெற தகுதியற்றவரே.

அவர்களை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிய உங்கள் வாக்குப் பலத்தை பயன்படுத்துங்கள்.

உங்கள் வாக்கு வன்முறையற்ற அரசியலுக்கே!

★ அரசியல் வன்முறைகளுக்கு எதிரான கூட்டமைப்பு

Advt. ★ சுதந்திர தொடர்புசாதன அமைப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்